
கல்கி

மிகச் சிறிய விஷயங்கள்தான் எங்களுக்கு மிகப் பெரிய பொறுப்பினை அளிக்கின்றன.

ஏர்-பிரேக் ஆக்சுவேஷன் சாதனங்களின் முன்னோடிகளான சுந்தரம்-கிளேட்டனுக்கு பாதுகாப்பு என்பது ஒரு அர்த்த மற்ற உறுதிமொழி அல்ல. எங்கள் சாதனங்கள் முழுமையான பாதுகாப்பிற்கு உறுதியளிப்பதற்கேற்ப உருவாக்கப்பட்டவை.



ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான பெற்றோர்கள் அவர்களுடைய அன்புச் செல்வங்களைப் பள்ளிக்கு அனுப்புகின்றனர் — வர்த்தக வண்டிகளில் பொருந்தியுள்ள பாதுகாப்பு சாதனங்களில் நம்பிக்கை வைத்தே.

இந்த பாதுகாப்புச் சாதனங்களை உருவாக்கிய நாங்கள் பெருமிதமடைவது இயற்கைதானே. இருந்தபோதிலும் இது ஒரு மிகப் பெரிய பொறுப்பு. முழுமையான காற்று மற்றும் காற்று-உதவி பிரேக் சாதனங்களின் ஒவ்வொரு சிறிய உறுப்பினையும் மிகவும் நுணுக்கமாகக் கவனிக்கிறோம். இதனால்தான் அனேகமாக ஒவ்வொரு ஹெவி-ட்யூடி வர்த்தக வண்டியிலும் எங்களுடைய ஏர்-பிரேக் ஆக்சுவேஷன் சாதனங்கள் அசல் உறுப்புகளாக பொருத்தப்பட்டுள்ளன. இது ஒரு அத்யாவசியமான தேவையுங்கூட.

உங்கள் பாதுகாப்பிற்கு எங்கள் உத்திரவாதம்

தொடர்ச்சியான ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் தரக் கட்டுப்பாடு — இவைகள் முழுமையான பாதுகாப்பினை அளிக்கும் ஒரு பிரேக் சாதனத்திற்கு வித்திடுகின்றன.

நாங்கள் உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்றோம் — அதனைப் பாதுகாக்கவும்

CD-TVS' அளிக்கும் முழுமையான காற்று மற்றும் காற்று-உதவிகொண்ட பிரேக் சாதனங்களின் உறுதியான பாதுகாப்பு எப்பொழுதும் உங்களுக்குக் கிடைப்பதற்கு உங்கள் சாதனத்தை முறையாகப் பராமரியுங்கள், மற்றும் எப்பொழுதும் அசல் CD-TVS உறுப்புகளையே வாங்கி உபயோகியுங்கள். இதனை அலட்சியம் செய்ய வேண்டாம். உங்கள் நன்மைக் காகத்தான் சொல்கிறோம்.

சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட்
பாடி, சென்னை 600 050

உங்கள் பாதுகாப்பு எங்கள் தொழில்

CD TVS

SAA/SCL/2588

கிரிக்கெட் கவிதைகள்!

புவனா சந்திரன்

கையில் பேட்டோடு கவாஸ்கர் தயார்
நெஞ்சத் துடிப்போடு பல்லாயிரம் பேர்
பொட்டென நொறுங்கியது T. V. ஸ்கிரீன்
– கவாஸ்கருக்கு என்மகன் போல
ராஜுன்!





சதம் போடும் டெஸ்ட் பார்க்க
காலேஜ் கட் அடித்ததால்
க்ளாஸ் டெஸ்டில்
'டக்' அடித்தான்!

வாழ்க்கையெனும்
லிமிடெட் ஓவர் ஆட்டத்தில்
வரும் வாய்ப்புப் பந்துகளை
அவுட்டாகாமல் அடித்து நொறுக்கி
பலரன்கள் எடுப்பவனே
– 'மேன் ஆஃப் தி சொஸைட்டி'
யாகிறான்!



சென்னையில் அட சொத்தை! டில்லியில் அடி சக்கை!


சிதம்பரம் ஸ்டேடியத்தில் கிடைத்த வெற்றிக்குப் பிறகு காப்டன் கவாஸ்கரை அவர் தங்கியிருந்த கன்னிமாரா ஹோட்டலில் சந்திக்கச் சென்றார் தமிழக கிரிக்கெட் சங்கக் காரியதரிசி ஸ்ரீராமன். வெற்றியைக் கொண்டாடும் வகையில் ஜூஸ் பாட்டிலைத் திறக்கும்படி காப்டனிடம் கொடுத்தார்.

காப்டன் கவாஸ்கர் ஜூஸ் பாட்டிலைத் திறக்க முடியாது சற்றுத் திணறினார். கூடவே இரு பொருள்பட அவர் சொன்ன வார்த்தைகள்: "I am not a good opener in Madras!"

— ஜெகந்நாதன்



அவளின்
பார்வையென்ற பந்து வீச்சை
பிரம்மச்சரிய மட்டை கொண்டு
அவனால் தடுக்க இயலாது
இதயமெனும் விக்கெட்டை
கோட்டை விட்டான்!



டேவிஸ் கோப்பை

அரசியல் வாதியாகவும் பொதுஜனத் தொண்டராகவும் பிரசித்தி பெற்ற டேவிஸ் ட்வைட் உலகம் முழுவதும் டென்னிஸ் பரவுவதற்கு ஒரு கோப்பையை வழங்கினார். 1899ம் ஆண்டில் ஹார்வார்டில் படிக்கையில் தனியர், இரட்டையர் டென்னிஸ் பந்தயத்தில் வெற்றியாளர்.

முதல் உலகப் போரில் செய்த ராணுவ சேவைக்காக விருது பெற்றவர். 56 வயதில் டேவிஸ் போர்க் காரியதரிசியாகப் பணியாற்றியவர். பிலிப்பைன்ஸ் கவர்னர் ஜெனரலாகவும் இருந்திருக்கிறார் டேவிஸ். பி.எஸ்.எம்.

ஆசிரியர் பணி புரியும் பொருட்டுத்தான் ஃபாஸ்டர் இந்த நாட்டுக்கு வந்தார். தமது தாய்நாடு சென்று மீண்டும் திரும்பிவந்து தேவஸ் என்ற சுதேச சமஸ்தான மன்னரின் அந்தரங்கச் செயலாளராகப் பணி புரிந்தார். அவர் அப்போது எழுதிய நூல் தான் இந்தியாவுக்கு ஒரு பயணம். (Passage to India).



பத்து லட்சத்தை வேண்டாம் என்றவர்!

'வெள்ளையனே வெளியேறு', என்ற எச்சரிக்கை வாசகத்தை 1942ம் ஆண்டு காந்தி அடிகள் புழக்கத்துக்குக் கொண்டு வந்தார். ஆனால் அதே கருத்தையும், சொல்லையும் 1924ம் ஆண்டே வெளியான தமது நாவின் கதாநாயகன் அஜீஜின் மூலம் கூறுகிறார்: ஈ.எம். ஃபாஸ்டர். இந்தியர்களும் ஆங்கிலேயர்களும் சுதந்திரமுள்ள மக்களாக இருந்தால் மட்டுமே நண்பர்களாக விளங்க முடியும் என்ற அடிப்படை உண்மையை அவர் முன்கூட்டியே வலியுறுத்தினார்.

ஃபாஸ்டர் இந்த நாட்டின் தொன்மையான பண்பாட்டை உணர்ந்தார். இந்த நாட்டின் அறிவு ஜீவிகளைப் புரிந்து கொண்டார். அவர்களைப் பாராட்டி உற்சாகப்படுத்தினார். முல்க்ராஜ் ஆனந்த் எழுதிய தீண்டாதான் என்ற நெடுங்கதையை வெளியிட எந்தப் பிரசுரகர்த்தரும் முன்வரவில்லை. இருபது நிறுவனங்கள் அதைப் புறக்கணித்தன. இறுதியில் ஃபாஸ்டர் அந்த நூலுக்கு முன்னுரை வழங்கியதும் அந்த எழுத்து புத்தக வடிவம் பெற்றது.

ராஜா ராவ், சாந்தா ராமராவ் ஆர். கே. நாராயணன், நாராயணமேனன் ஆகிய இந்திய எழுத்தாளர்களை இவர் பெரிதும் ஊக்கினார். அவர் முயற்சி எடுத்துக்கொண்டிரா விட்டால் அஹமதின் 'டெல்லியில் ஒரு மாலைப்பொழுது' (1940) வெளியாகியே இராது.

தனி மனித சுதந்திரத்திற்கு அவர் மிகச் சிறந்த தோழர். 1940ல் இரண்டாவது உலகப் போர் நிகழ்ந்த வேளையில் அன்றைய அரசாங்கம் ஜெயப்பிரகாஷ் நாராயணனுக்குச் சிறையில் இழைத்த கொடுமைகளை வன்மையுடன் சாடினார். மனிதப் பண்புகளைப் பெரிதும் மதித்த அறிஞர் அவர். குடி ஆட்சிக்குத் தீங்கு நேர்ந்தால் அவர் மிகவும் பாதிக்கப்பட்டார். 1962ல் சீனப்படை எடுப்பின் போது இங்கிலாந்து தன் நண்பனான இந்தியாவுக்குச் செய்ய வேண்டிய உதவி குறித்துத் தீவிரமாக வாதாடினார்.

1945ம் ஆண்டில் ஜெய்ப்பூரில் நடந்த உலக எழுத்தாளர் மகாநாட்டில் ஃபாஸ்டர் பங்கு பெற்றார். இந்திய அரசு இயந்திரம் அறிவாளிகளை மதிக்கவில்லை. வெள்ளையர்கள், பழுப்பர்கள் யார் ஆண்டாலும் அதே நிலை — என்ற உண்மை அவரைப் பெரிதும் வருத்திற்று. அறிவு ஜீவிகளை அரசுப் பொறி ஒரு கடைநிலைச் சிப்பந்தியைப் போல் கருதுகிறதே என்று அவர் வருத்தத்துடன் குறிப்பிட்டார்.

செல்வமும் பதவியும் என்றுமே அவரை ஈர்த்ததில்லை. அமெரிக்கத் திரைப்பட நிறுவனம் அவருடைய நவீனத்துக்குப் பத்து லட்சம் கொடுக்க முன்வந்தபோதும் அவர் பத்துலட்சத்தை வேண்டாம் என்றவர். அதைத் திரைப்படமாக்க இணங்கவில்லை. ராஜாராவ் கூறியது போல இலக்கிய உலகம் தமக்குச் சிலை நிறுவ வேண்டும் என்று அவர் விரும்பவில்லை. ஓர் இனிய தோழனின் இதயத்தில் அமைதியான பகுதியில் இடம் பெறுவதையும், அவன் பரப்பக்கூடிய ஆனந்தத்தையுமே அவர் பெரிதும் மதித்தார்.

மேதை ஃபாஸ்டர் இந்திய நாட்டின் மிகச் சிறந்த நண்பர்களில் ஒருவர். -இ. சா. ராஜு

ஒருத்தி: காஸ் அடுப்பு வெடித்து என் மாமியார் இறந்துட்டாங்க.

மற்றவள்: இன்னும் ஸ்டவ் அடுப்பு வாங்கற வசதியே எனக்கு வரலே. நீ கொடுத்து வச்சவ.

எம். சாம்பமூர்த்தி.



வணக்கம் குருதேவா!



ராஜ்நாராயணன்: நமஸ்தே! சக்கரவர்த்தி சாம்ராட் சரண்சிங்ஜீ!

சரண்சிங்: அடேடே! ராஜ் நாராயண்ஜீயா? வாங்கோ! வாங்கோ! உட்காருங்கோ. சௌக்கியமா?

ராஜ்: ஆஹா! உங்கள் பெயரைச் சொல்லிக் கொண்டே நான் சௌக்கியமாக இருக்கிறேன்! என் பெயரை மறந்து கொண்டே தாங்கள் சௌக்கியமாக இருக்கிறீர்கள்!

சரண்: உங்களை நானோ நாடோ மறந்து விடும் வகையில் நீங்கள் ஒரு கணப் பொழுதைக்கூட விட்டு வைக்கவில்லையே! அமர்க்களமாக எதையாவது சொல்லிக் கொண்டேதானே இருக்கிறீர்கள்.

ராஜ்: குருஜீ! எல்லாம் உங்கள் மீதுள்ள பக்தி! குரு நாமஸ்மரணைதான் என் மூச்சு!

சரண்: நான் தங்களுடைய குரு பதவியிலிருந்து ராஜிநாமாச் செய்யலாமென்று நினைக்கிறேன்!

ராஜ்: சாம்ராட் சரண்ஜீ! ராஜிநாமாச் செய்வதோ, அப்புறம் மந்திரிஸ்தர்களை எதிர்பார்ப்பதோ, பிருப்பண்ணிக் கொள்வதோ உங்களுக்குக் கைவந்த கலை. நான் யாரை மந்திரிஸ்தர்களாக அனுப்ப வேண்டும் என்பதைச் சொல்லி விட்டு...


சரண்: நாராயண்ஜீ! நீங்கள் ஒரு வருங்காலப் பிரதமருடன் பேசிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

ராஜ்: அச்சா! அச்சா!.... நீங்கள் பாராளுமன்றத்திற்கு வந்த நாளிலிருந்து உங்களை என் கற்பனையில் அந்த இடத்தில் வைத்துத் தான் மற்றவர்களைத் தாக்கி வருகிறேன்! வருங்காலப் பிரதமரின் எதிர்கால உதவிப் பிரதமர் நான்தானே?

சரண்: இல்லை! நான் உதவிப் பிரதமராக யாரையும் வைத்துக் கொள்ளப் போவதில்லை. அது ஒரு உதவாக்கரைப்பதவி.

ராஜ்: ஓஹோ!... நீங்கள் வேகமாகவே உங்கள் ஆசைகளையும் அபிப்பிராயங்களையும் மாற்றிக் கொள்கிறீர்கள்! அப்படியானால் எனக்கு மறுபடியும் அந்தச் சுகாதார இலாக்காதானா?

சரண்: உங்களை எங்காவது கொஞ்சதூரம் தள்ளிச் சிறிது காலம் வைத்திருக்கலாமென்று எனக்கு யோசனை சொல்லப் படுகிறது. ஆப்பிரிக்க நாடுகள் எதற்காவது தூதுவராகப் போகிறீர்களா?... ... இஷ்டம் இல்லையா? சரி! பாண்டிச்சேரி கவர்னராகப் போட ஏற்பாடு செய்கிறேன்.



ராஜ்: அது அண்டைமாநிலத்துடன் இணையப் போவதாக வதந்தி. அப்படி நடந்தால் நான் நடுத்தெரு நாராயணனாக நிற்க வேண்டும்.

சரண்: இப்போதும் அதைத்தானே செய்து கொண்டிருக்கிறீர்!

ராஜ்: சௌதுரிசாகிப்ஜீ! இந்தக் காலத்திலே குருதேவர்களுக்கு மதிப்பைத் தேடித் தருவதே சிஷ்யர்கள்தான்! ஒரு குருவை உருவாக்குவதும் ஒழிப்பதும் என்னைப் போல ஒரு சிஷ்யனாலேயே முடியும்.

சரண்: நீங்க பயில்வானாக இருக்கலாம்! ஆனால் இந்தக் கிசான் தலைவனிடம் மிரட்டல் நடக்காது.

ராஜ்: உதவிப் பிரதமர் பதவி, அதுவும் ஒரே ஒரு உதவிப்பிரதமர் பதவி எனக்கு உண்டா இல்லையா?

சரண்: மன்னிக்க வேண்டும் ராஜ் நாராயண்ஜீ! நிர்வாகம் வேறே! நட்பு வேறே! நாட்டின் நலம்தான் முதலிலே! நட்பு அப்புறம்தான்.


ராஜ்: மாஜிகுருஜீ! பாரத நாட்டின் பிரதமர் பதவிக்கு இன்னொருவர் தேவை! அப்படி ஒருவரிடம் அந்தப் பதவியை ஒப்படைப்பது என் கடமை! உங்களை அந்த நாற்காலியில் நான் உட்கார விடமாட்டேன். பிரதமர் பதவிக்குத் தகுதியான ஒரே நபர் என் ஆப்த நண்பர் சந்திரசேகர். பத்திரிகை நிருபர்களை அழைத்துப் பேசுகிறேன்.

சரண்: உம்... நாட்டிலே பதவிப்பித்து அதிகமாகப் போச்சு!

ராஜ்: என்ன செய்வது? பழக்க தோஷம்!... இன்னமும் லேட் ஆகலே! யோசியுங்க! ஒருநாள் அவகாசம் தருகிறேன்...

(போகிறார்)

— கோமதி ஸ்வாமிநாதன்



சித்திரத்துக்கு ஏற்ப சுவர் எழுப்பு!

செம்பியன்

“சுவரை வைத்துக் கொண்டல்லவா சித்திரம் எழுத வேண்டும்?'' என்பார்கள். இது சுத்த அபத்தமான பழங்கால வாதம். இன்றைய நவீன யுகத்துக்கு ஏற்ப இதனை, ''சித்திரத்துக்கு ஏற்பச் சுவர் எழுப்பு'' என்று மாற்றிவிட வேண்டியதுதான். பீகார் முதலமைச்சர் திரு கார் பூரி தாகுர் இதற்குப் புரட்சிகரமான முறையில் வழிகாட்டியிருக்கிறார்.

குடியரசு தினத்தன்று அவர் அற்புதமான ஒரு காரியம் பண்ணினார். மாநிலத்தில் வேலையில்லாமல் வாடும் பொறி இயல் நிபுணர்கள் பலர் இருக்கிறார்கள் என்று தெரிய வந்ததால் 6017 பேர்களுக்கு அரசு சார்பில் உத்யோக நியமன உத்தரவு வழங்கினார். அவர்களுக்கெல்லாம் தருவதற்கு ஏற்ப வேலைகள் அரசு இலாகாக்களில் இருக்கின்றனவோ இல்லையோ, வேலையில் அவர்களை நியமித்து உத்தரவுகளை வழங்கியாகி விட்டது. ''அரசின் கடமை முடிந்தது'' என்று அறிவித்தார் தாகுர். இனி மாநில அரசுக்கு எந்த விதமாகப் பணியாற்றலாம் என்று உத்யோக நியமனம் பெற்ற பொறி இயல் நிபுணர்கள் தாங்களாகவே முடிவு செய்து கொள்ள வேண்டியதுதான்! புரட்சித் திட்டம் இத்துடன் முடியவில்லை. இந்த 6017 பொறி இயல் நிபுணர்களுக்கு உதவுவதற்காக மேலும் 20,000 பேர்களுக்கு நியமன உத்தரவு தந்தார். இதேபோல் பள்ளி ஆசிரியர் பயிற்சி முடித்த 12,000 பட்டதாரிகளுக்கு விரைவிலேயே அரசாங்கம் நியமன உத்தரவுகளை வழங்கும் என்று அறிவித்தார். மக்களுடைய வரிப்பணத்தைக் கொண்டு இவர்களுக்கெல்லாம் முதலில் சம்பளம் கொடுக்க வழிசெய்து விட்டு அப்புறமாக இவர்களுக்கு எங்கே, எப்படி, என்ன வேலை கொடுக்கலாம் என்று யோசிப்பது எப்பேர்ப்பட்ட புரட்சிகரமான திட்டம்!

இந்தத் திட்டத்தைப் பற்றி நாளிதழ்களில் படித்ததும் எனக்கு சந்தோஷம் தாங்கவில்லை. உடனேயே என்னுடைய மனோவேக விமானத்தில் ஏறி பாட்னாவில் இறங்கினேன். கார் பூரி தாகுர் அவர்களைச் சந்தித்துக் கையோடு எடுத்துப் போயிருந்த ஆளுயர மாலையைப் போட்டு வாழ்த்தினேன்.

''அடாடா! எப்பேர்ப்பட்ட மகத்தான திட்டம்! வேலை இல்லாத் திண்டாட்டத்தை இந்தத் தேசத்திலிருந்தே விரட்டியடிக்க வழி காட்டிய பகவான் நீங்கள்!'' என்றேன்.

''அச்சா!'' என்று தாகுர் என்னை மெச்சினார். ''சாய் சாப்பிடு'' என்று உபசரித்தார்.

தேனீர் அருந்தியபடியே, ''இன்னொரு யோசனை... நாட்டில் கட்சித் தாவல்கள், கட்சிக் குள்ளேயே உட் பிரிவுகளுக்குள் தாவல்கள் எல்லாம் நடக்கின்றன. இதையெல்லாம் ஒழித்துக் கட்டவும் நீங்கள் காட்டிய மார்க்கத்தையே பின்பற்றலாமே?'' என்றேன்.

''என்ன அது?'' என்றார் தாகுர் ஆர்வத்துடன்.

''ஆட்சிக்கு வரும் கட்சியைச் சேர்ந்த எல்லா எம். எல். ஏ.க்களும் அல்லது எல்லா எம். பி.க்களுமே மந்திரிகள்தாம் என்று அறிவித்துவிட வேண்டியது. அப்புறம் கட்சித் தாவல்களோ, கட்சிக்குள் கட்சி கட்டுவதோ எப்படி நடைபெறும்? முதலில் ஜனதா எம். எல். ஏக்கள் எல்லாரையுமே மந்திரியாக்கி விட்டால் அப்புறம் அவரவருக்கும் ஏற்ப ஓர் இலாக்காவைச் சாவகாசமாக யோசித்து உருவாக்கிக் கொள்ளலாமே'' என்றேன்.

''பஹுத் அச்சா! பஹுத் அச்சா!'' என்று என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டார் கார் பூரி தாகுர். தேநீர் மேலே சிந்திவிடாமல் காப்பாற்றிக் கொள்ள ரொம்பப் பிரயாசைப் படவேண்டியதாகி விட்டது.

கோப்பையை மேஜை மேல் வைத்துவிட்டு, ''அப்புறம் இன்னொரு விஷயம்'' என்று ஆரம்பித்தேன். ''போலோ, போலோ!'' என்றார் தாகுர்.



''மாணவர்கள் பண்ணுகிற கலாட்டா சொல்லி மாளாது. இவர்களை எப்படி சமாளிப்பது என்பதே தேசத்தில் பெரிய பிரச்னையாக இருக்கிறது. இதற்கும் உங்கள் புரட்சித் திட்டப்பாணியிலேயே எளிதாக விடைகாணலாம்!''

''எப்படி, எப்படி? விவரமாகச் சொல்லு. கேட்போம்!''

''கல்லூரியில் சேரும்போதே, எல்லா மாணவர்களும் பட்டப் பரீட்சையில் பாஸ் என்று சொல்லிக் கையிலே சான்றிதழையும் கொடுத்து வகுப்புக்கு அனுப்பிவிட வேண்டியது. அப்புறம் மூன்று வருஷங்கள் படிப்பதும் படிக்காததும் அவர்கள் பொறுப்பு. நமக்குப் பொறுப்பும் கவலையும் விட்டது பாருங்கள்! அவர்களும், 'பரீட்சையை ஒத்திப் போடு', 'காப்பி அடிக்க உரிமை கொடு' என்றெல்லாம் போராட்டங்கள் நடத்த முடியாதல்லவா?''

''வாரே வாஹ்! போட்டியே ஒரு போடு!'' என்று கூறி நான் அவருக்கு அணிவித்த மாலையைத் திரும்ப எனக்கே அணிவித்தார் தாகுர். பிறகு, ''இதே மாதிரி வேறு



ஏதாவது யோசனைகள் இருந்தால் சொல்லேன்'' என்று கேட்டுக் கொண்டார்.

''ஓ பேஷாகக் கூறுகிறேன்... ஸ்ட்ரைக், ஓர்க் டு ரூல், கோ ஸ்லோ, கேரோ முதலியன தேசத்தில் மிகுதியாகிவிட்டன. ஒரு காரியம் பண்ணலாம். எல். ஐ. ஸி., பாங்கு ஊழியர்—அதிகாரிகள் ஆகியோரின் கோரிக்கைகள் எல்லாம் ஏற்கப்பட்டு விட்டன என்று அறிவித்து விடலாம். இவற்றை நிறைவேற்றி வைக்க ஏற்படும் அதிகப்படி செலவை பாங்கு வட்டிவிகிதத்தை உயர்த்தியும் பிரீமியம் தொகையை அதிகரித்தும் சரிகட்டிக் கொள்ளலாம். இதேபோல் — தனியார் துறையோ, அரசுத்துறையோ, — தொழிலகங்களில் வேலை நிறுத்தம் ஆரம்பிக்கும் ஊழியர்கள் அனைவருடைய கோரிக்கைகளையும் ஒப்புக் கொண்டு விட வேண்டியது. இதற்காகும் செலவுக்கு ஏற்ப உற்பத்தியாகும் பண்டங்களின் விலைகளை உயர்த்திக் கொள்ள அனுமதி வழங்க வேண்டியது.''

''சபாஷ்! சபாஷ்!'' என்று என் முதுகில் தட்டிக் கொடுத்துக் கொண்டே சந்தோஷ மிகுதியில் எம்பி எம்பிக் குதித்தார் கார்பூரி தாகுர். ''நான் இப்பவே சரண்சிங்குக்கு ஃபோன் பண்ணுகிறேன். அடாடா! என்ன பேஷான கருத்து!''

''அதற்கு முன் இன்னொரு விஷயம்'' என்று ஆரம்பித்துத் தொடர்ந்தேன்: ''பீகாரில் கொலைக் குற்றங்கள் ரொம்பவும் அதிகரித்து விட்டதாகச் சொல்கிறார்கள். சொந்த விரோதமாயினும் சரி, அரசியல், சமூக, தொழிற்சங்கப் பிரச்னைகளானாலும் சரி, ஆளைத் தீர்த்துக் கட்டுவது சர்வ சகஜமாகி வருகிறது. எங்கே திரும்பினாலும் மிரட்டல், பயமுறுத்தல், கொலை புரியத் தயங்காத குண்டர்களின் அட்டகாசம். இதனால் போலீஸுக்கு ரொம்பக் கெட்டபேர்...''

''ஆமாம்'' என்றார் தாகுர் வருத்தத்துடன். ''இதற்கு என்ன பண்ணலாம் என்கிறாய்?''

''இதற்கும் உங்களுடைய புரட்சித் திட்டத்தின் பாணியிலேயே நடவடிக்கை எடுக்கலாமே? மாநிலத்தில் வாழும் மக்கள் அனைவருமே குண்டர்கள், குற்றவாளிகள் என்று அறிவித்து விடுங்கள்! தாங்கள் குற்றவாளிகள் அல்ல, குண்டர்கள் அல்ல என்று நிரூபித்துக் கொள்ளும் பொறுப்பை மக்கள் மீதே சுமத்தி விடுங்கள். போலீஸார் பாடு நிம்மதி! அவர்களுக்கு அப்புறம் கெட்டபெயரே வந்து சேராது! கையாலாகாத போலீஸ் என்று யாரும் குற்றம் சுமத்த முடியாது!''

''இயா பாத் ஹை!'' என்று ஆர்ப்பரித்து ஆனந்தக் கூத்தாடத் தொடங்கி விட்டார் கார்பூரி தாகுர். ''இப்போதே நாம் நாட்டிலுள்ள பிரச்னைகளில் 99 சதவீதத்துக்குத் தீர்வு கண்டு விட்டோம் போலிருக்கிறதே!'' என்றார்.


''ஆமாம். இன்னும் ஒரே ஒரு பிரச்னை தான் பாக்கி. அதுதான் மொழிப் பிரச்னை. உங்கள் புரட்சிப் பாணியிலேயே அதற்கும் தீர்வு கண்டு விடலாம்'' என்றேன்.

''எப்படி?'' என்றார் தாகுர் சற்று சந்தேகத்துடன்.

''வேலையில்லாதோர் எல்லோருக்கும் வேலை, எம். எல். ஏ.க்கள் எல்லாருமே மந்திரிகள், கல்லூரியில் நுழையும் எல்லா மாணவர்களுமே பட்டதாரிகள், தொழிலாளர் கோரிக்கை அனைத்துக்குமே ஒப்புதல், பீகார் மாநில மக்கள் அனைவருமே குற்றவாளிகள் என்பதுபோல், அதே பாணியில், 'நாட்டிலுள்ள தேசிய மொழிகள் அனைத்துமே மத்தியில் ஆட்சி மொழிகள்' என்று அறிவித்து விட்டால் போதும், மொழிப் பிரச்னை தன்னால் தீர்ந்துவிடும். ஆங்கிலம் இயல்பாகவே தொடர்பு மொழியாகி விடும்'' என்றேன்.

''அரே, படே பத்மாஷ்! கடைசியில் நீ தமிழன் புத்தியைக் காண்பித்து விட்டாயே!'' என்று கூச்சல் போட்டு எனக்குக் கல்தா கொடுப்பதற்காக, ''யார் அங்கே!'' என்று சேவகனை அழைத்தார் கார்பூரி தாகுர்.

கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளும் வரை காத்திருப்பேனா என்ன? ஒரே ஓட்டமாக ஓடி என் மனோவேக விமானத்தில் ஏறித் 'தப்பித்தோம் பிழைத்தோம்' என்று சென்னை வந்து சேர்ந்து விட்டேன்!



கொசுக்களை விரட்டும்...நிம்மதியான உறக்கம் கிட்டும்.

ஓடோமாஸ் ஒரு பாதுகாப்பு அரண். உங்களை கொசுக்கள் தீண்ட விடாமல் தடுக்கிறது. ஆதலால் இரவு முழுவதும் நீங்கள் தொல்லையின்றி நிம்மதியாக உறங்குகிறீர்கள்! ஓடோமாஸ் உங்கள் சருமத்திற்கும் பாதுகாப்பானது.

கொசுக்களின் பகைவன்-பல்சாரா அளிக்கும்

ஓடோமாஸ்



நீடித்த பாதுகாப்புக்கு மிகவும் நவீனமான கொசு விரட்டி.

பல்சாரா
நலமான வாழ்க்கைக்கு
நவீனமான வசதிகள்
BALSARA

CHAITRA-BLS-243 TAM


ஆழ்ந்து குணமாக்கும்
அமிர்தாஞ்சன் டெர்மல்
ஆயின்ட்மென்ட், படை, சொரி,
நமைச்சல் போன்ற பல
சாதாரண சருமத்தொல்லை
களைத் தீர்க்கும் சக்தி மிக்க
நிவாரணி. இன்றே
ஒன்று வாங்குங்கள்!
Amrutanjan Ltd.
dermal Ointment
for
RINGWORM - ECZEMA ETC
அமிர்தாஞ்சன்
டெர்மல் ஆயின்ட்மென்ட்
அமிர்தாஞ்சன் லிமிடெட்
14 15 லஸ் சர்ச் ரோடு
சென்னை 600 004
உங்கள்
சருமத்தை
பாதுகாத்துக்
கொள்ளுங்கள்



['அருட்பெருஞ் ஜோதி' வள்ளலார் 'கல்கி'யிடம் 'தனிப்பெருங் கருணை' கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது! பொங்கல் இதழிலும் பிப்ரவரி 4 இதழிலும் அருள்வாக்குகளில் குறிக்கப்பட்டிருக்கிறார் அவர். இவ்விதழுக்கு எவரது அருள்மொழியைத் தரலாம் என யோசித்தவுடன் பிப்ரவரி 10ந்தேதி தைப் பூசம் என்பது பளிச்சிடவே, அத்தினத்தில் சித்தி எய்திய வள்ளலாரைப் பணிந்து அவரையே வாசகருடன் உரையாட வைக்கிறோம்.]

சுத்த சன்மார்க்க சத்தியச் சிறு விண்ணப்பம்

இயற்கை உண்மையர் என்றும், இயற்கை அறிவினர் என்றும், இயற்கை இன்பினர் என்றும், நிர்க்குணர் என்றும், சிற்குணர் என்றும், நித்தியர் என்றும், சத்தியர் என்றும், ஏகர் என்றும், அநேகர் என்றும், ஆதியர் என்றும், அநாதியர் என்றும், அமலர் என்றும், அருட்பெருஞ்ஜோதியர் என்றும், அற்புதர் என்றும், நிரதிசயர் என்றும், எல்லாம் ஆனவர் என்றும், எல்லாம் உடையவர் என்றும், எல்லாம் வல்லவர் என்றும் குறிக்கப்படுதல் முதலிய அளவு கடந்த திருக்குறிப்புத் திரு வார்த்தைகளால் சுத்த சன்மார்க்க ஞானிகள் துதித்தும், நினைத்தும், உணர்ந்தும், புணர்ந்தும் அனுபவிக்க விளங்குகின்ற தனித் தலைமைப் பெரும் பதவியாகிய பெருங்கருணைக் கடவுளே! தேவரீர் திருவருட் சமுகத்தில் துரும்பினும் சிறியேமாகிய யாங்கள் சிற்றறிவால் செய்து கொள்ளும் சிறு விண்ணப்பங்களைத் திருச்செவிக்கு ஏற்பித்தருளி எங்களை இரக்ஷித்தருளல் வேண்டும்.

களைப்பறிந்து உதவும் கருணைக் கடலாகிய கடவுளே! தேவரீர், 'நெடுங்காலம் மரணம் முதலாகிய அவத்தைகளால் துன்பமுற்றுக் களைப்படைந்த உங்களை, அவ்வவத்தைகளின்றும் நீக்கிக் களைப்புங் கலக்கமுந் தவிர்த்து அழியாத பேரின்ப சித்தியை அடைவித்தற் பொருட்டாகவே பூர்வஞான சிதம்பரத்தின் வடபால் பார்வதிபுரம் என்று குறிக்கப் படுகின்ற உத்தரஞான சித்திபுரத்தில் யாம் அளவு கடந்த நெடுங்காலம் சித்தியெல்லாம் விளங்கத் திருவருள் நடஞ்செய்வோம்' என்றும், 'அது தருணம் மிகவும் அடுத்து சமீபித்த தருணம்' என்றும், 'அப் பதியினிடத்தே யாம் அருள் நடம் புரிவதற்கு அடையாளமாக ஒரு ஞானசபை காணுதல் வேண்டும்' என்றும் திருவருட்குறிப்பால் அறிவித்ததுமன்றி, அருளுருவாகி எங்கள் அகத்தும் புறத்தும் அமர்ந்தருளி யாதொரு தடையும் இன்றி, அத்திரு ஞான சபையும் தோன்றி விளங்கச் செய்வித் தருளிய தேவரீர் பெருங் கருணையைக் கருதுந்தோறும் பெருங் களிப் படைகின்றோம். இனி அத்திரு ஞானசபையை அலங்கரித்தல் வேண்டுமெனக் குறிப்பித்த வண்ணம் அலங்கரிக்கத் தொடங்குகின்றோம். அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே! தேவரீர் அருளுருவாகி எங்கள் அகத்தும் புறத்தும் அமர்ந்தருளி யாங்கள் செய்யும் இவ்வலங் காரத் திருப்பணியில் எவ்விதத்தாலும் யாதொரு தடையும் வராத வண்ணஞ் செய்வித்து அவ்வலங்காரத் திருப்பணியை முற்றுவித்தருளல் வேண்டும்.

சர்வ வல்லபராகிய தனித்தலைமைக் கடவுளே! அத் திருவலங்காரத் திருப்பணி முற்றிய தருணத்தே தேவரீர் அமர்ந்தருளி அற்புதத் திருவருள் விளக்கத்தால் எங்களையும், இவ்வுலகில் இத்தேகத்தைப் பெற்ற மற்றவர்களையும் உண்மை அடியார்களாக்கி உண்மையறிவை விளக்கி, உண்மையின்பத்தை அளித்துச் சமரச சுத்த சன்மார்க்க நிலையில் வைத்துச் சத்திய வாழ்வை அடைவித்து நித்தியர்களாக்கி வாழ்வித்தல் வேண்டும். இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடையாகிய சமயங்கள் மதங்கள் மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம் ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனத்தில் பற்றாத வண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லக்ஷியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும், எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்திருளல் வேண்டும்...

சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பம்:

சுத்த சன்மார்க்க லக்ஷிய சத்திய ஞானக் கடவுளே! ஜீவர்களாற் கணித்தறியப்படாத


பெரிய உலகின் கண்ணே பேராசை பெருங்கோபம் பெருமோகம் பெருமதம் பெருலோபம் பேரழுக்காறு பேரகங்காரம் பெருவயிரம் பெருமடம் பெருமயக்கம் முதலிய பெருங் குற்றங்களே பெரும்பாலும் விளைவதற்குரிமையாகிய மற்றை இடங்களிற் பிறப்பியாமல், குணங்களே பெரும்பாலும் விளைவதற்குரிய இவ்விடத்தே, உறுப்பில் குறைவுபடாத உயர்பிறப்பாகிய இம்மனிதப் பிறப்பில் என்னைப் பிறப்பித்தருளிய தேவரீரது பேரருட் பெருங்கருணைத் திறத்தை என்னென்று கருதி என்னென்று துதிப்பேன்?...

சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம் :

நாயிற் கடையேன் செய்த குற்றங்களை எல்லாம் குணங்களாகக் கொண்டு என்னுள்ளகத்தே அமர்ந்து உயிரிற் கலந்த பெருங் கருணைப் பெருமானே!... தேவரீர் திருவருட் சமுகத்தின் இயற்கை உண்மைத் தரத்தை அறிதல் வேண்டுமென்றும், இயற்கைப் பெருங் கருணைப் பெருந் தன்மையைக் கருதுதல் வேண்டுமென்றும், இயற்கைப் பெருங் குணப் பெரும் புகழைத் துதித்தல் வேண்டுமென்றும், எனது உள்ளகத்தே ஓவாதுறைந்து ஊற்றெழுந்து விரைந்து விரைந்து மேன்மேற் பெருகுகின்ற பேராசைப் பெருவெள்ளம் அணைகடந்து செல்கின்றதாகலின், 'அறிவார் அறிகின்ற வண்ணங்களும் கருதுவார் கருதுகின்ற வண்ணங்களும் துதிப்பார் துதிக்கின்ற வண்ணங்களும் ஆகிய எல்லா வண்ணங்களையும் உடையவர் அருட்பெருஞ் ஜோதித் தனிப்பெருங் கடவுள்' என்ற சத்திய ஞானிகளது உண்மை வாசகத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு, தன்மை சாலாத் தமியேன் அறிதற்கும் கருதுதற்கும் துதித்தற்கும் தொடங்கினேன்...

அடிநிலைக் கருமஞான சித்தி அனுபவங்களினும், முடிநிலைக் கருமஞான சித்தி அனுபவங்களினும் ... O, சுத்த ஞானசித்தி அனுபவங்களினும், சமரச சுத்த ஞானசித்தி அனுபவங்களினும், அது அதுவாகி நிறைந்தும், அது அதுவாக விளங்கியும், அது அதுவாகி இனித்தும், ஆங்காங்கு அதீதமாகிக் கலந்தும், இவை அனைத்துமாகி ஒருமித்தும்,

O இதே போல், யோக, தத்துவ, ஆன்ம ஞான சித்திகளின் அடிநிலை முடிநிலைகளைச் சொல்லும் பகுதி இங்கு விரிகிறது.



அதீதாதீதமாகித் தனித்தும் வயங்குகின்ற பெருங்கருணைப் பெரும்பதியாய கடவுளே !

எல்லாச் சக்திகளுக்கும் எல்லாச் சத்தர்களுக்கும் எல்லா மூர்த்திகளுக்கும் எல்லா மூர்த்தர்களுக்கும் எல்லாத் தேவிகளுக்கும் எல்லாத் தேவர்களுக்கும் எல்லாச் சாதனர்களுக்கும் எல்லாச் சாத்தியர்களுக்கும் எல்லா உயிர்களுக்கும் எல்லாத் தத்துவங்களுக்கும் எல்லாப் பொருள்களுக்கும் எல்லாக் குணங்களுக்கும் எல்லாச் செயல்களுக்கும் எல்லா அனுபவங்களுக்கும் மற்றெல்லாவற்றிற்கும் முதற் காரணமாகவும் நிமித்த காரணமாயும் துணைக்காரணமாயும் இவை அல்லவாயும் விளங்குகின்ற திருவருட் சமுகம் இருந்த வண்ணம் அறிந்து கொள்ளுதல் இங்ஙனமானால், திருவருட் சமுகப்பெருங் கருணைப் பெரும் பதியாய தேவரீர் இயற்கைத் திருவண்ணம் அறிந்து கொள்ளுதல் எங்ஙனமோ! எங்ஙனமோ!!

சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம் :

இவ்வுலகத்தினிடத்து ஆறறிவுள்ள உயர்வுடைத்தாகிய தேகத்தைப் பெற்ற யான் இத்தேகத்திற்கு இடைக்கிடை நேருகின்ற மரணம் பிணி மூப்பு பயம் துன்பம் முதலிய அவத்தைகள் எல்லாவற்றையும் நிவர்த்தி செய்து, இத் தேகத்தையே நித்திய தேகமாக்கிக் கொண்டு எக்காலத்தும் எவ்விடத்தும் எத்துணையும் தடைபடாத பேரின்ப சித்திப் பெரு வாழ்வைப் பெற்று வாழ்தல் வேண்டும் என்பதே எனது சத்தியமான அதிதீவிர விருப்ப முயற்சியாக இருக்கின்றது.

... இத்தேகத்தை நித்திய தேகமாக்கி எக்காலத்தும் அழியாத பேரின்ப சித்தி பெருவாழ்வைப் பெற்று வாழ்தல் எதனால் பெறுதல் கூடுமென்று அறியத் தொடங்கிய தருணத்து வேறு எந்த வழியாலும் பெறுதல் கூடாது, எல்லாமுடைய கடவுளது திருவருட் சுதந்திரம் ஒன்றாலே பெறுதல் கூடுமென்று தேவரீர் திருவருளால் அறிவிக்க உள்ளபடி அறிந்தேன்.

பின்னர், திருவருட் சுதந்திரம் நமக்கு எந்த வழியால் கிடைக்கும் என்று அறியத் தொடங்கிய தருணத்து, எனது யான் என்னும் தேக சுதந்தரம், போக சுதந்தரம் ஜீவ சுதந்தரம் என்னும் மூவகைச் சுதந்தரங்களும் நீங்கியவிடத்தே கிடைக்கும் என்று தேவரீர் திருவருளால் அறிவிக்க உள்ளபடி அறிந்தேன்.

ஆகலில், எனது சுதந்திரமாகக் கொண்டிருந்த தேகசுதந்திரத்தையும் போகசுதந்தரத்தையும் ஜீவசுதந்திரத்தையும் தேவரீர் திருவருட்கே சர்வசுதந்திரமாகக் கொடுத்து விட்டேன்...

இத் தேகத்தைப் பெற்ற எல்லாச் சீவர்களுக்கும் எனக்கு அறிவித்த வண்ணமே அறிவித்து, அவரவர்களையும் உரிமையுடையவர்களாக்கி வாழ்வித்தல் வேண்டும்.

தேவரீர் பெருங்கருணை ஆட்சிக்கு வந்தனம் வந்தனம்!

தொகுப்பு : ரா. கணபதி

● இந்த வார கல்கியில் 'சுவரண்சிங்கின் சரணாகதி' என்ற தலைப்புடன் ஓர் அபத்த மான தலையங்கம் எழுதியிருக்கிறீர்கள். சரண் சிங்கினால் ஜனதா ஆட்சிக்கும், தம்முடைய பிரதமமந்திரி பதவிக்கும் எந்தவிதமான ஆபத்தும் ஏற்பட்டு விடக் கூடாதே என்பதற் காக உதவிப் பிரதமர் பதவி கொடுத்திருக் கிறாரே மொரார்ஜி தேசாய், இதை 'மொரார் ஜியின் சரணாகதி' என்று வர்ணிக்க முடி யாதா?...

திருவண்ணாமலை கே. வி. ராமதுரை

● 28.1.79 இதழ் தலையங்கத்தில் இருக்கும் ஒன்றை இருக்கும் வகையில் தெளிவுபடுத்தி யுள்ளீர்கள் — இத்தலையங்கம் சிலருக்கு ''உரைக்கும்''. மனம் கொந்தளிக்கும். இருப் பினும் உண்மை இதுதானே — பாராட்டு கிறேன்.

பங்களூர்—21 க. மூர்த்தி

● நீங்கள் கார்ட்டூன் போட்டாலும் போட் டீர்கள். மாணிக்கவாசகர் சரண்சிங்கைப் புரியாக்கினாரோ இல்லையோ, மொரார்ஜி அவரைத் துணைப் பிரதமராக்கி விட்டார்.

விருத்தாசலம் பா. செந்தில்குமார்

● 'பூநாகம்' என்ற சிறுகதையைப் படித்து முடித்ததும் — திகைப்பில் பிரமித்துப் போய் விட்டேன். அற்புதமான நடையில் மிகவும் திரில்லிங்காக எழுதிக் கொண்டு போயிருக் கிறார் ராஜேஷ்குமார்.

பம்பாய்—57 எஸ். ஜெயசந்திரன்

● பாங்கு ஊழியர்களைக் கேலி செய்யும் வகையில் செம்பியன் எழுதிய ''உயர் ஊதியத் தீவில் ஊதிய உயர்வு'' என்ற கட்டுரையை யும் பிரசுரிக்கிறீர்கள்.

பாங்கு ஊழியர்களின் குறைகளை விளக்கும் வகையில் Face to Face பகுதியில் தமிழ் நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின், பொது செயலாளர் திரு என். சம்பத் அவர்களின் பேட்டிக் கட்டுரையையும் பிரசுரிக்கிறீர்கள்! உம்மைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

திருவண்ணாமலை ஆர். கோபாலகிருஷ்ணன்


● ''ஊழியனின் தேவைகளை அடிப்படை யாகக் கொண்டு தரப்பட வேண்டியது ஊதி யம்'' என்கிறார் திரு சம்பத். ஊழியன் ஒரு வன் காரும் பங்களாவும் தேவை என்று கூறினால் உடனே நிர்வாகத்தினர் நிறை வேற்றிவிட வேண்டுமா? ஊழியனுக்கு ஆயிரம் தேவைகள் இருக்கலாம். அதை நிறைவேற் றுவதுதான் நிர்வாகத்தின் கடமையா?

ஊதியம் என்பது ஊழியனின் தேவைகளை முன்னிட்டு அல்ல, வேலையின் தரத்தையும் தகுதியையும் நிர்ணயித்து அளிக்கப்பட வேண்டியது.

சென்னை—7 எஸ். ராஜேந்திரன்

● கல்கியை 19 பேருடன் பகிர்ந்து கொள் வதற்கே அசந்தீர்களே! நான் 'கல்கி'யை 43½ (½: 8வயதுள்ள பையன்) பேருக்குப் பகிர்ந்து படிக்கக் கொடுக்கிறேனே... வசதி யற்ற என் நண்பர்களின் 'கல்கி' படிக்கும் ஆர்வமே இதற்குக் காரணம்.

போடிநாயக்கனூர் ரவிராஜ்



வட்ட மேஜை

● நாளொன்றுக்கு நான்குபேர் வீதம் கிட்டத்தட்ட இருபத்தைந்து பேர் எனது கல்கியை வாசிக்கிறார்கள் என்பதை நேரில் பார்த்தாலாவது நம்புவீர்களா?

விழுப்புரம் விழி. ஜி. இளங்கோவன்

● அச்சாணி' முதல் 'கண்ணாமூச்சி' வரை திரைப்படங்களின் பெயர்களைக் கையாண்டு 'சிதம்பரம் (ஸ்டேடியம்) போகாமலிருப் பேனோ?' என்ற தலைப்பில், மிகவும் சுவாரசிய மாகச் சென்னை டெஸ்ட் பற்றி எழுதியுள் ளீர்கள். விஷயங்கள் ஒவ்வொன்றும் ஒரு 'சிகப்புக் கல் மூக்குத்தி'. ஜொலித்தன.

சென்னை—5 எஸ். வி. ராஜசேகர்

● ஒரு துணுக்கில், தஞ்சை ஜில்லாவிலுள்ள ஒரு பஸ் கம்பெனியின் பெயர் '786' என் றுள்ளதாகக் குறிப்பிட்டு, இது பெயரா? அல்லது எண்ணா? என்று ஐயுற்று இருக்கி றீர்கள். அது பெயர்தான். அரபியில் 'பிஸ் மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்' என்பதின் சுருக்கமே '786.'

விருத்தாசலம் எம். ஏ. அப்துல்காதர்

● முன்பு போக்குவரத்தில் இருந்த சென்னை துபாய் நேரடி விமானப் போக்கு வரத்தை (ஏர் இந்தியா) என்ன காரணத் தாலோ தற்போது நிறுத்திவிட்டார்கள். சென்னை . சர்வீஸில் இருந்தபோது சென்னைவர மூன்று மாதங்களுக்கு முன்னதாகவே புக் செய்தால்தான் டிக்கட் கிடைக்கும். அந்த அளவுக்கு நல்ல வசூல் இருந்தும் விமானம் திசை திருப்பி விடப்பட்டிருக்கிறது. இதனால் மத்தியக் கிழக்கில் கணிசமாக வாழ்கின்ற (தமிழர்கள்) நாங்கள் நேரடிப் போக்குவரத் தின்றி மிகவும் சிரமப்படுகிறோம்.

ஏ. ஹபீப் முஹம்மது

தஞ்சை கேம்ப்: அபுதாபி

பாட்டிமார்களும் பேத்திமார்களும்

ஜெயகாந்தன்

4. வெள்ளையம்மாள் வருவாள்!

தோளில் சுமந்து வந்த ஏணியைக் குறட்டோரம் இறக்கி வைத்துவிட்டுத் தெரு மண்ணைக் காலால் துழாவிக் கொண்டிருந்தார் சாமியார். எதிர்ப் புற வேலிக்கு அப்பால் அடர்ந்த மூங்கில் காட்டைப் பார்த்தவாறு மருடேசன் பிள்ளையை நினைத்துக் கொண்டு வீட்டுக் குறட்டில் உட்காருகிறவரை விளக்குச் சாமியைப் பார்த்துக் கொண்டிருந்தாள் கோதை. அவள் உள் வீட்டு அறைச் சன்னலில் கம்பி வலையினூடே தெருவைப் பார்த்ததால் அவளை யாரும் வெளியிலிருந்து பார்க்க முடியவில்லை....

''சாமி... விளக்கு ஏத்திட்டு வரீங்களாக்கும்...'' என்ற கோதையின் குரல் கேட்டு விளக்குச்சாமி தலையைத் திருப்பித் திருப்பிப் பார்த்தார்.

''நாந்தான் சாமி... இதோ வர்றேன்'' என்று சொல்லிக் கொண்டே அறையிலிருந்து கூடத்துக்கு நடந்து நடை வழியே வெளியே வந்தாள் கோதை. அவளுக்குத் தெரியும்: குரல் கொடுக்காமல் 'இங்கேதானே இருக்கார்' என்று நினைத்துக் கொண்டு போனால், உள்ளேயிருந்து வருவதற்குள் சிலசமயம் ஒரு நொடியில் சாமியார் மறைந்து விடுவார். அதுபோல் இரண்டொரு தடவை நடந்திருக்கிறது. அவரிடம் முக்கியமாக ஏதேனும் பேச வேண்டும் என்று நினைப்பில் வந்தால் திண்ணையிலிருப்பவர் திடீரெனத் தெருக்கோடியில் இருப்பார். தோட்டத்து வாசலில் நின்றவர் தோப்பில் நடந்து கொண்டு இருப்பார்... இன்னொரு தடவை அந்த மாதிரி ஏமாந்து விடக் கூடாதே என்று நினைத்துக் கொண்டு கூடத்தைக் கடந்து வீட்டின் முன்புறத் திண்ணைக்கு அவசரமாக வந்தாள் கோதை.

சற்று நேரத்துக்கு முன், தோட்டத்தில் மீன் ஆய்கிற கூட்டத்தில் கலந்திருந்த சிங்காரத்தைப் படிப்பதற்காகக் கோதை கூப்பிட்டதை ஒரு சாக்காக்கிக் கொண்டு அவனை வலுக் கட்டாயமாகக் காந்திமதியும் பொன்னம்மாளும் முன் கூடத்துக்கு இழுத்து வந்தனர்.


''போங்கடி... நான் படிக்க மாட்டேன்... நான் வரமாட்டேன்... முடியாது'' என்று திமிறிக் கொண்டிருந்தான் சிங்காரம்.

''வாய் மேலேயே போடு...அடியாமில்லே, அடி? நாளைக்கு, வருவா உனக்குத் தாலி கட்டிக்கிட்டு எவளாவது, அவளைக் கூப்பிடு 'அடி — நுனி'யெல்லாம்'' என்று அவன் கன்னத்தைத் திருகினாள் பொன்னம்மாள். சிங்காரம் 'ஓ'வென்று அலறினான்.

''ஐயோ! என்ன இது! குழந்தையை எதுக்கு இப்பிடி வலுக்கட்டாயமா இழுத்துகிட்டு வரீங்க?'' என்று ஓடிவந்து அவர்களின் பிடியில் திமிறிய சிங்காரத்தை விடுவித்துத் தழுவிக் கொண்டாள் கோதை.

''நீதானே வந்து ரொம்ப அக்கறையா அவனைப் படிக்கறதுக்கு வரச் சொன்னே?... 'சின்னம்மா கூப்பிடுது போடா'ன்னு போக மாட்டேன்றான்...ஏற்கெனவே அவனை நாங்கதான் கெடுத்தோம்னு அப்பாகிட்டே பேரு எடுத்துட்டோம். நாளைக்கி நீயும் அப்படித் தானே சொல்லுவே? அதுக்குத்தான் உன் கையிலே கொண்ணாந்து உட்டுட்டோம். இனிமே உன்பாடு—உன் மவன் பாடு... எல்லாம் ஆக்கி முடிச்சிட்டு, சாப்பிடக் கூப்பிடறேன். அதுவரைக்கும் அவன் படிக்கட்டும்னு என்னு வாயி? என்னு பேச்சு?'' என்று சிங்காரத்தைப் பற்றிப் பிரலாபித்துக் கொண்டே கூடத்து விளக்கை ஏற்றிக் கொண்டு வந்து மாட்டினாள் ராணி.

''சரிசரி — நீங்க எல்லாரும் போயி சமையல் வேலையைப்பாருங்க... நீ வா கண்ணு, நாம்ப திண்ணையிலே போயி உக்காந்து நிலாவிலே விளையாடலாம்...'' என்று சிங்காரத்தைத் தேற்றி அணைத்துக் கொண்டு முன் பக்கத் திண்ணைக்கு வந்தாள் கோதை.



புதுக் கவிதை

மனம் போல திரியும்
மாடர்ன் ஏஜ் கேர்ள்க்கு
என்ன பெயரிடலாம்?
புதுக் கவிதை என்ற
பெயரே பொருத்தம்!

—எட்டயபுரம்
பா. நாராண. கணபதி

வாசலுக்கு நேரே படிக்கட்டுகளில் உட்கார்ந்து எல்லா வற்றையும் மௌனமாகக் கவனித்துக் கொண்டிருந்தார் விளக்குச்சாமி. சிங்காரத்தைக் கொண்டுவந்து முன் கட்டில் தள்ளிவிட்ட திருப்தியுடன் நடுக் கூடத்துக் கதவைச் சாத்திக் கொண்டு பின் கட்டுக்குப் போனார்கள் பெண்கள். அவர்கள் தாழ்ப்பாளை மாட்டுகிற சத்தம் கேட்டு, அவர்கள் காதில் தான் பேசுவது விழாது என்று உறுதியான பிறகு சாமியாரிடம் சொன்னாள் கோதை:

''சாமி உங்களுக்குத் தெரியாததில்லே... இந்த வீட்டுப் பொண்கள் பண்ண பாவத்துக்கெல்லாம் பழியேத்துக்கத்தானே நான் வந்தேன். இந்தக் குடும்பத்துக்கு! அவரு உயிரோட இருந்தால் எந்தப் பழியையும் தாங்கிக்கலாம். என் மேலே அநியாயமான சந்தேகத்தோட அவரு போயிட்டாரே... இனிமே நான் இந்தக் குடும்பத்தோட இருக்கறதை நினைச்சா, இன்னம் என்



மாணவன்: நான் ஒரு நாள் கூட, கிளாஸில் கலாட்டா செய்ததில்லே!

நண்பன்: அதுசரி, நீ விழித்திருந்தால் தானே கலாட்டா செய்ய? —எஸ். பத்மாவதி

னென்னு பழிங்க வருமோன்னு பயமா இருக்குது... நானும் சிங்காரமும் தனியாப் போயிடலாம்னு நினைக்கறேன்...'' என்றாள்.

சாமியார் மூடிய கண்களுடன் முகத்தை அண்ணாந்து கொண்டு அவள் சொல்வதைக் கேட்டார். கோதையின் மடியில் சாய்ந்து கொண்டு நிலா உதயமாவதை ரசித்துக் கொண்டிருந்த சிங்காரத்தின் கண்ணிமைகளில் சற்றுமுன் அழுத கண்ணீர் இன்னும் உலராதிருந்தது. அவன், ஏதோ மூங்கில் புதர்களுக்கு அப்பாலிருந்து ஒளிஜாலம் செய்கிற நிலாவையும் நிழலையும் ரசித்துச் சிரித்துக் கொண்டிருந்தான்.

பின் கட்டில் மீன் சமைக்கிற வாடை காற்றில் மிதந்து குப்பென்று வந்து இவர்களின் நாசியைத் தாக்கியது...

''ம்ஹும்'' என்று ஒலியெழுப்பி முந்தானையால் அவள் நாசியை மூடிக் கொண்டு முகம் சுளிப்பதைப் பார்த்துக் கேலியாய்ச் சிரித்தான் சிங்காரம்...

ஒருமுறை மூக்கை உறிஞ்சி ஆழ்ந்து சுவாசித்து ''எனக்கு இது வாசமாயிருக்கு'' என்றான்.

சாமியார் வாய்விட்டுச் சிரித்தவாறு சிங்காரத்தைப் பார்த்தார்: ''வாசம்னு நெனைச்சா வாசம்; நாத்தம்னு நெனைக்கறவங்களுக்கு நாத்தம்... இதிலென்ன கௌரவம் அகௌரவம்? மருதேசன் பிள்ளை, தன் வீட்டிலே இதெல்லாம் ஆக்கறதும், தன் மகனே இதைத் திங்கிறதும் தெரிஞ்சி ஏன்தான் அப்பிடி உசிரே குன்றிப் போனாரோ...?'' என்று பெருமூச்செறிந்தார்.

''அம்மாடி, நீ என்னமோ கேக்க வந்தியே!... தனியாப் போயிடலாம்னு யோசிக்கிறீங்களா?... தனியா எங்கே போயிட முடியும்? உங்க தாயார் வீட்டுக்கா?... அங்கே உங்களுக்கு ஆதரவா யார் இருக்காங்களோ?'' என்று கேட்டார்.

கோதை தனது நிராதரவான கதியை எண்ணிக் கண் கலங்கினாள்:

''தாயார் இருந்தாத்தானே தாய்வீடு? எனக்கு யாரும் ஆதரவான மனுஷாள் கிடையாது சாமி... திக்கில்லாதவங்களுக்குத் தெய்வம்தான் துணை. அப்பிடி எனக்குத் துணையா வந்த தெய்வமா அவரை நினைச்சேன். இனிமே தெய்வந்தான் சாமி ஆதரவு... நான் தனியா இந்தக் குடும்பத்தை விட்டு எங்கே போகமுடியும்! அதை நான் சொல்லலே... மருதேசன் பிள்ளை வீட்டுச் சொத்தை மாயவரத்துச் சனங்க வந்து அள்ளிக்கிட்டுப் போக நான் விடமாட்டேன். அதுக்காக இந்தத் தறுதலைப் பெண்களோட வாழ முடியாது... அவருக்காகத்தானே இவங்களை நான் தாங்கிக்கிட்டு இருக்கணும். இப்ப நான் தனியா என் பங்குக்கு வந்திருக்கிற ஏதாவது ஒரு வீட்டுக்கு என் மகனோட போயிடலாமான்னுதான் யோசிக்கறேன்...'' என்றாள் கோதை.

பக்கத்துத் தெருவிலேயே அவள் பங்குக்குக் கிடைத்திருக்கிற ஒரு வீட்டைப் பற்றி யோசித்தார் சாமியார்.

''ரொம்ப தூரமா போயிடாமல், ஒரே வீட்டிலேயே தனித்தனியா இருக்கிற மாதிரியும், இங்கே வரப்போக வசதியாயும் இருக்கணும்னு அந்த வெள்ளாளத்தெரு வீட்டிலே நீங்கரெண்டு பேரும் தனியாப் போயி இருக்கலாம். அதுக்கு எல்லாரும் சம்மதிக்கணுமே'' என்று கோதை மனத்தை அறிந்து கொள்வதற்காகக் கேட்டார் சாமியார்.

''யார் சம்மதத்துக்காக நான் காத்திருக்கணும்?... நான் இனிமே தெய்வத்துக்கும் என் மனசாட்சிக்கும் கட்டுப்பட்டவளே தவிர இவங்களுக்கெல்லாம் கட்டுப் பட்டவளில்லே... அதுவுமில்லாமல் நான் சொல்றபடியோ, அவங்க அப்பா விருப்பப்படியோ நடக்காதவங்களோட நான் எப்பிடி சேர்ந்து இருக்க முடியும்? நான் செய்யற முடிவு சரியான்னு உங்க கிட்ட ஒரு வார்த்தை கேட்டுக்கறது — அவருக்கு உங்க மேலே இருந்த விசுவாசத்தை நான் புரிஞ்சவளா இருக்கிறதனாலேதான்... அதிலே ஏதாவது சிக்கலோ தப்போ வருமோன்னுதான் உங்க கிட்ட கேக்கறேன்...''

''அதனாலே ஒரு குத்தமும் வராது அம்மா. நீங்க எங்கே இருந்தாலும் அவர் வீட்டிலே தான், அவர் மகனோடதான் இருப்பீங்க. எங்கே இருந்தாலும் நீங்க அவரோட வீடு.

நிலம், வேலைக்காரங்க எல்லாருக்கும் ஈஜமானியா இருக்கிறதாகத்தான் அர்த்தம்... இவங்களோட சேர்ந்து இருந்து கசந்து போறதைவிட, கொஞ்சம் தள்ளியிருந்தா சுமுகமாத்தானிருக்கும்... சிங்காரம் உங்க கிட்டே வளர்றதுதான் இதிலே முக்கியம்'' என்றார் சாமியார்.

''பின்னே...? என் சிங்காரக் கண்ணனுக்குத் தானே, எல்லாம்... அவனில்லாமலா? ஏண்டா, கண்ணே! நாம அந்த வெள்ளாளத் தெரு வூட்டுக்குத் தனியாப் போயிடலாமா?...'' என்று அவனைக் கட்டித் தழுவி முத்தமிட்டுக் கேட்டாள் கோதை..

''அங்கே போனா எனக்கு 'அத்திக்காய்' எல்லாம் சமைச்சிப் போடுவியா?'' என்று நிபந்தனை யிட்டான் சிங்காரம்.

''அத்திக்காயா?'' என்று அருவருப்புடன் முகம் சுளித்தாள் கோதை.

முன்பு ஒருநாள் — தன் புருஷனுக்குக் காலனாய் வந்து நிகழ்ந்த அந்த அத்திக்காய் சமாசாரம் அவளுக்கு நினைவில் வந்து தன் புருஷனின் குரலும் தோற்றமும் அப்படியே கண்ணெதிரே தெரிந்தன...

''அத்திக்காய் வேணும்... அத்திக்காய்'' என்று ஒருநாள் சிறுக்குச் சிங்காரம் அடமாய் அலறிக் கொண்டிருந்தான். அந்த நேரத்தில் படியேறி வருகிற மருடேசன் பிள்ளையின் பாதக் குறடுகளின் ஓசை கேட்டது—

இப்போதுகூட நிலா வெளிச்சத்தில் சிங்காரத்தை மடியில் சாய்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாளே... இந்த மயக்கத்தில், அந்த நினைவுகளில் மிதக்கிற போது, இதோ, அவளது செவிகளில் அந்தப் பாதக் குறடுகளின் சப்தம் கேட்கிறது...

பாதக் குறடுகளை நடையில் விட்டபின் கூடத்துக்கு வந்த மருடேசன் 'அத்திக்காய் தானே வேணும்? நான் வாங்கித் தரேண்டா, சிறுக்கு!' என்று கொஞ்சி அவனைத் தூக்கிக் கொண்டார். கோதைக்கு அதைப் பார்த்துச் சிரிப்பு வந்தது; தான் சிரிப்பை அடக்குவதை அவர் கவனிக்கிறார் என்றறிந்ததும் பயம் வந்தது...

''ஆர்ரா அது?'' என்ற கம்பீரமான அவர் குரல் ஒலித்தது.

''நாந்தாங்க முருகேசன்...'' என்று — அவர் கூப்பிட்டவுடன் வந்து நிற்கும் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பல வேலைக்காரர்களில் ஒருவன் வந்தான்.

இந்த முருகேசன் வேலைக்காரனானாலும், அவர்கள் ஜாதிக்காரன். ''ஏண்டா அங்கேயே நிக்கறே! உள்ளே வா'' என்று அதட்டினார். அவன் உள்ளே வந்து கூடத்துத் தூணைக் கட்டிக் கொண்டு, இடது கால் பெருவிரலால் வலது முழங்காலைச் சொறிந்தவாறு நின்றான்...

''நம்ம தோப்பிலே அத்திமரம் இருக்கில்லே?''

''நான் பார்த்தது இல்லீங்களே...''

''போடா மடையா! அந்தாண்ட மேற்கே, கோயிலுக்குப் போற வழியிலே...''



''ஆமாங்க ஆமாங்க,... இருக்குதுங்க, பெரிய மரம்'' என்று ஆமோதித்துத் தலை யாட்டிக் கொண்டு ஓடினான் முருகேசன்...

மருடேசன் பிள்ளைக்குக் கோதை உணவு பரிமாறிக் கொண்டிருந்தபோது முருகேசன் ஒரு பெரிய அத்திக்காய் மூட்டையுடன் வந்து நின்றான். அதைப் பார்த்துக் கோதை என்ன மாய்ச் சிரித்தாள்...

அந்தக் காய்களைக் கைநிறைய அள்ளிக் கொண்டு வந்து இவளிடம் நீட்டி ''சிறுக்குக் கண்ணு... இதோ அத்திக்காய்'' என்றதும், ''போ, போ — இது அத்திக்காய் இல்லே, அது கத்தியாட்டம் இருக்கும்'' என்று அவள் விளக்கியதைக்கூட அவர் புரிந்து கொள் ளாமல் தவித்த நிகழ்ச்சிகளெல்லாம் அப் போது விளையாட்டாகவும் சிரிக்கத் தகுந் தவையாயுமிருந்தன...

பின்கட்டில் மீன் ஆய்கிற வேலையை எல்லாம் முடித்து விட்டு, பக்கத்துச் சந்து வழியாகத் தெருவுக்கு வந்து கொண்டிருந் தாள் வெள்ளையம்மாள்.

''ஆரங்கே வெள்ளையம்மாளா?'' என்று அதிகாரத்துடன்குரல் கொடுத்தாள் கோதை.

''ஆமாங்க...'' என்றவாறு நிலா வெளிச் சத்தில் திண்ணையோரமாக வந்து நின்றாள் வெள்ளையம்மாள். அதே சமயம் நடுக் கூடத்துக் கதவைத் திறந்து கொண்டு காந்தி மதி வெளிப்பட்டாள்.

''எங்கே சிங்காரம்?... சிங்காரம் வாவா சாப்பிடலாம், நேரமாச்சு...'' என்று கோதையின் மடியிலிருந்தவனை வாரித் தூக்கிக் கொண்டாள். அவள் தன்னைத் தூக்கிக் கொள்வது சிங்காரத்துக்குப் பிடிக் காமல் அவள் கையிலிருந்து வழுக்கிக் கொண்டான்.

''உனக்குச் சின்னம்மா தான் புடிக்குமோ? நாங்கல்லாம் தொடக்கூடாதோ?'' என்று கொஞ்சம் பொறாமை கலந்த விளையாட்டுடன் கேட்டாள் காந்திமதி. அவர்கள் உள்ளே போனதும் ''யம்மா, கொஞ்சம் வெத்திலே போயலே குடுங்களேன்...'' என்று கோதை யிடம் வந்து தலைசொறிந்து, பல்லைக்காட்டிக் கொண்டு கேட்டாள் வெள்ளையம்மாள்.

பக்கத்தில் வெள்ளி வெற்றிலைச் செல்லத் திலிருந்து தாராளமாகவே அள்ளிக்கொண்டு போய் வெள்ளையம்மாளின் ஏந்திய கைகளில் போட்டாள் கோதை. பிறகு மெதுவாக அவள் காதில் மட்டும் விழுகிறமாதிரி சொன் னாள்:

''நானும் சிங்காரமும் வெள்ளாளத் தெரு வூட்டுக்குத் தனியாப் போயிடப் போறோம். இங்கே மாதிரியே அங்கேயும் நீ ரெண்டுலே, மூணுலே, தோட்டத்துப் பக்கமாவந்து சிறுக்குவுக்கு 'அத்திக்காய்' சமைச்சிக் குடுக்கணும்...'' என்றாள்.

''எப்பம்மா போவப் போறீங்க?'' என்று அந்நியோன்யமாகக் கேட்டாள் வெள்ளையம் மாள்.

''அது அப்புறம் தெரியும்...'' நீ யார் கிட்டயும் உளறி வைக்காதே! என்றாள் கோதை.

''ஆமாங்க... இங்கே இருக்கிறதுங்க ஒண்ணும் ஒண்ணும் பொம்பளைங்களா?... நடுப்புள்ளையும் உங்க கூட வந்துட்டா அப் புறம் நானும்கூட இங்கே வரமாட்டேங்க... தாயில்லாப் புள்ளையாச்சேன்னு எனக்கு அவரு கிட்டே இருக்கிற பிரியத்தினாலேதான் இவ்வளவு வேலையும் செய்யறேன்... இவ் வாட்டி எனக்கு இன்னையம்மா?... மீனை எடுத்துக்கினு காசை வையின்னு வாங்கிக் கினு போயிட மாட்டேளா?... இம்மாம் வேலே செய்யிறேனேன்னு கொஞ்சம்கூட நெனைச்சிப் பாக்கறதில்லே...'' என்று அவளும் இந்த வீட்டுப் பெண்களைப் பற்றித் தனது தாபத்தைச் சொல்லித் தணித்துக் கொண்டாள்.

சில தினங்களில் சிறுக்குச் சிங்காரமும் அவனது சின்னம்மாளும் பக்கத்துத் தெரு வீட்டுக்குக் குடியேறினர். பெரியசாமி இத் தனை வருஷங்களுக்குப் பின் தன் சொந்த வீட்டுக்கு உரிமையோடு வந்து கம்பீரமாகத் திண்ணையின்மீது உட்கார்ந்து கொண்டான்.

நாள்தோறும் விளக்குச் சாமியார் வண்டி கட்டிக் கொண்டு சிங்காரத்தையும், அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த மற்ற குழந்தைகளையும் ஏற்றிக் கொண்டு, ஒருமைல் தூரத்துக்கு அப் பால் உள்ள இங்கிலீஷ் பள்ளிக்கூடத்துக்குப் போகிற வேலையை மேற்கொண்டார்.

வண்டியின் ஏருகால் மீது அவர் உட் கார்ந்த போது, ''சாமி... இன்னிக்கி சீக்கிரம் வந்துடுங்க... எனக்குத் தோப்பிலே கொஞ் சம் வேலையிருக்கு'' என்று கையில் கொத்துச் சாவியுடன் வெளியே வந்தாள் கோதை. அன்று அவள் சொன்னதோரணை, மருடேசன் பிள்ளை சொல்லுவது போலவே இருந்தது. வீட்டு வாசற்கதவுக்கு மேல், அவள் பின்னால் கோதைக்குப் பிரியமான அந்த விக்டோரியா மகாராணியின் படம் தெரிந்தது. முன்பிருந்த வீட்டில் இது பிள்ளையவர்களின் அறையில் இருந்ததே என்று நினைத்துக் கொண்டு மாடு களை விரட்டினார் சாமியார். (தொடரும்)

கிண்டல் கிட்டா

மைசூர் யுனிவர்சிடி தேர்வுகளில் பணத்தை வாங்கிக் கொண்டு விடைத் தாள்களை மாற்றி மாணவர்களை அமோகமாக 'பாஸ்' பண்ண வைக்கும் ஒரு 'இயக்கம்' பிடிபட்டது—செய்தி



கல்கி

1979 பிப்ரவரி 11
காளயுக்தி தை 29

மலர்: 37 இதழ்: 36



தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



கண்ணதாசன் பக்கம்

வெயிலால் கொதித்துக் கிடக்கும் பூமியில் சிறிது மழைத்துளி விழுந்தால், பூமியிலிருந்து ஆவி புறப்படுகிறது.

கவலைகளைச் சொல்ல முடியாமல் குமுறிக் கொண்டிருப்பவனிடம், அன்பும், பரிவும் காட்டினால் அவன் கண்களில் இருந்து கண்ணீர் வருகிறது.

வாழ்க்கையில் சுக துக்கங்கள் சம அளவில் பகிர்ந்து தரப்படவில்லை. இதில் இறைவன் செய்த தவற்றை மனிதனே திருத்த வேண்டியிருக்கிறது.

எடைபோடும் யந்திரத்தில் கூட இவ்வளவு தான் ஏற்றலாம் என்ற கணக்கிருக்கிறது. 'அளவுக்கு மீறி ஏற்றப்படுவது மயில்தோகை ஆனாலும், அச்சு முறிந்து போகும்' என்கிறது திருக்குறள்.

வண்டியில் பின்பாரம் அதிகமாக இருக்குமானால், முன்னாலே ஒரு கல் தூக்கி வைக்கப்படுகிறது. முன் பாரம் அதிகமாக இருக்குமானால், பின்னாலே ஒரு கல் கட்டித் தொங்க விடப்படுகிறது.

அளவுகளைச் சமமாக்குவதற்கு அளவுகோல்கள் கிடைக்கின்றன. ஆனால் சுக துக்கங்களைச் சமமாக்குவதற்குத் தத்துவ ஞானங்கள் போதுமானவையாக இல்லை.

'இது சரி. இதுதான் சரி' என்ற முடிவுகள், திருப்திகரமான எதிர்காலத்துக்கு உத்தரவாதமாக இல்லை. அந்த நேரங்களில் விதி நம்பப்படுகிறது. விதி என்ற பெயரில் தாங்கிக் கொள்ள முடியாதவன் கண்களில் இருந்துதான் கண்ணீர் வருகிறது.

காலிலே மட்டும் எறும்பு கடித்தால், கை அதைத் தட்டிவிடும். ஒரே நேரத்தில் உடம்பு முழுவதும் கடித்தால், சிறிது நேரப் போராட்டத்துக்குப் பிறகுதான் முழு எறும்புகளையும் ஒழிக்க முடியும். அதற்குள் உடம்பு வீங்கி விடும்.

அவலங்கள் வாழ்க்கையில் தவிர்க்க முடியாதவைதான். ஆனால் அவலமே வாழ்க்கையாயின், பிறப்புக்கு அர்த்தமென்ன?

உணர்ச்சிகரமான கட்டத்திலிருந்து ஓர் உடம்பு ஒதுங்க நேருமானால், ஒதுங்கிய நிலையில் அது எவ்வளவு காலம் வாழ முடியும்?

ஜீவ மரணப் போராட்டத்துக்கு வயது அதிகமாக இருக்குமென்றாலும், அந்தச் சித்திரவதை தாங்கக் கூடியதுதானா?

கஷ்டங்கள் இல்லாத ஒரு நிம்மதியையே, மனிதன் நேசிக்கிறான். அதற்காக அவன் எந்த முடிவுகளையும் மேற்கொள்ளலாம்.

ஆலமரத்து நிழல்தான் மாளிகையை விடச் சுகமானது என்றால், அதைத் தேடிப் போய் விடுவதில் என்ன தவறு?

பட்டினத்தாரும் பத்ருஹரியும் தங்க வட்டில்களை விட்டு, திருவோடுகளையே பெரிதாக மதிக்கவில்லையா?


எது அமைதிக்கு உகந்ததோ, அதுவே மனத்துக்கு நியாயமானது.

பிறப்புக்கும் இறப்புக்கும் நடுவிலே ஊசலாடிக் கொண்டிருப்பதல்ல, பிறப்பின் நோக்கம். சுகமான சிந்தனைக்கு அவகாசம் வேண்டும். அது எங்கே கிடைக்குமோ, அங்கே; எப்படிக் கிடைக்குமோ, அப்படி; எதனால் கிடைக்குமோ, அதனால்; கொண்டு வரப்பட வேண்டும்.

மரணத்துக்குப் பிறகு, மனிதர்கள் தேடப்படுவதில்லை. மகான்களுக்கே அதுதான் கதி என்றால், மனிதர்களுக்கு எம்மாத்திரம்?

சந்தடி இல்லாத இடத்தில் சற்று ஒதுங்கி இருந்து பயிர் செய்தால், விளைச்சல் நன்றாகவே இருக்கும்.

முயற்சி செய்வோம்.



நகைச்சுவை நடிகர்கள் கருவேப்பிலை தானா?

ஷீலா—



"படத்தின் பெயர் 'காதலிக்கத் தொண்ணூறு நாள்' நன்றாயிருக்கிறதா?" என்று என்னைப் பார்த்துக் கேட்டார் நடிகை, டைரக்டரான ஷீலா. "நன்றாக இருக்கிறது; அதைப் பற்றிய முழு விவரத்தைக் கேட்கத் தான் வந்திருக்கிறேன்" என்றபடி நான் அவர் எதிரில் அமர்ந்தேன். "இந்தப் படத்தில் யாருக்குமே கிளிஸரின் போடவில்லை" என்று சொல்லத் தொடங்கினார் ஷீலா.

"நாம் சொல்லும் கருத்தில், அதற்கான வசனத்தில் திரைக்கதை அமைப்பில், நடிகர் நடிகைகளை நடிக்க வைக்கும் முறையில், இப்படி ஒவ்வொரு படியிலும் நகைச்சுவை உணர்வுடன் அமைத்து எடுத்தால் கண்டிப்பாக அது சிறந்த நகைச்சுவைப் படமாக இருக்கும்;

"என்னைப் பொறுத்தவரை நடிப்பதைவிட இயக்குவது சிறிது கடினமான விஷயம்தான். ஒரு படம் டைரக்ட் செய்யும் சமயத்தில் நான் ஆறு படங்களில் நடித்து முடித்து விடுவேன்.

"ஒருவர் ஹீரோவாக நடிக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர் கடைசி வரைக்கும் ஹீரோதான். அதேபோல் மற்றொருவர் சிறு பாத்திரத்தில் நடித்தால் அவர் கடைசி வரை பெரிய பாத்திரத்தில் நடிக்கவே முடியாது. இது தமிழ்ப்பட உலகத்தின் சாபக்கேடு என்று கூடச் சொல்லலாம். நான் முதலில் இயக்கியது ஒரு திகில் படம். பெயர் யக்ஷகானம். அவ்வளவுதான் பல தயாரிப்பாளர்கள் என்னிடம் வந்து 'அடுத்து ஒரு திகில் படம் எடுங்கள். நாங்கள் தயாரிக்கிறோம்' என்றார்கள். தமிழ்ப்பட உலகின் சாபக்கேடு என்மேலும் படர்வதை நான் விரும்பவில்லை.

"அடுத்து என்ன படம் எடுக்கலாம் என்று யோசிக்க ஆரம்பித்தேன். கிளிஸரின் போட்டால் ஒருவர் அழுது விடலாம். ஒருவரை பயமுறுத்துவதும் சுலபம்தான். ஆனால் சிரிக்க வைப்பது கஷ்டமான காரியம் இல்லையா? அதனால் நகைச்சுவைப் படமெடுக்க முடிவு செய்தேன். அதுமட்டுமல்ல, பல படங்களில் நகைச்சுவை நடிகர் நடிகைகள் வரும் பொழுது நான் மிகவும் சந்தோஷப் படுவேன். ஆனால் ஒருசில காட்சிகளில் அவர்கள் வந்து விட்டுச் சென்றவுடன் படம் கதைக்குத் திரும்பி விடும். இந்த அரிய கலைஞர்களைக் கருவேப்பிலை மாதிரி உபயோகப்படுத்துகிறார்களே என்று நான் வருந்துவதுண்டு. 'காதலிக்க 90 நாள்' படத்தில் நகைச்சுவை நடிகர்களுக்கு முழு மதிப்புத் தந்திருக்கிறேன்.

"நடிகை மனோரமா ரவிச்சந்திரனிடம் சென்று, 'ஏங்க, என்னுடைய முகம் எப்படி இருக்கு?' என்று கேட்கிறார்.

'முழு நிலவு மாதிரி இருக்கு' என்று பதில் கிடைக்கிறது.

'என்னுடைய கன்னம் எப்படி இருக்கு?'

'ஆப்பிள் தான் போ.'

"கண்களைப் பற்றிச் சொல்லவே இல்லையே?'

'மான், மீன், திராட்சை ஆகியவற்றுடன் போட்டி போடுது!'

'கழுத்தைப் பற்றி?'

'சலவைக் கல்லால் ஆன சங்கு.'

'போங்க. என்னை நீங்க ரொம்ப வர்ணிக்கிறீங்க! எனக்கு வெட்கமா இருக்கு!'

"இந்தக் காட்சியை நாங்கள் எடுத்து முடித்தவுடன் எல்லாரும் விழுந்து விழுந்து சிரித்தோம். காரணம் கதையின்படி மட்டுமல்ல, காட்சியின்படியும் ரவிச்சந்திரன் எதுவுமே பேசவில்லை. தானே எல்லாவற்றையும் பேசி, மற்றவர்கள் பேசியதாக எடுத்துக் கொள்ளும் பாத்திரம் மனோரமாவுக்கு!

"எனது ஒன்றுவிட்ட சகோதரிகள் நான்குபேர். இவர்கள் ஒரே தாய் வயிற்றுப் பெண்கள்தான் என்றாலும் மற்ற எல்லா விஷயங்களிலும் வேறுபட்டவர்கள். தனக்கு இரண்டு கண்கள் போனாலும் பரவாயில்லை. மற்றவருக்கு ஒரு கண்ணாவது போக வேண்டும் என்ற எண்ணமுடையவர்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். இவர்களுக்குச் சொத்துக்களைப் பிரித்து வைக்காமல் இறந்து விடுகிறார் தந்தை. போதாதா? பிரச்னை சூடு பிடிக்க? எனது வாழ்க்கையில் நடந்த, நடந்து கொண்டிருக்கும் இந்தச் சம்பவம் தான் என் கதையின் கரு. கதையாக இதை எழுத இருந்த நான் படமாகவே தயாரித்து வருகிறேன்.


"இந்தப் படத்தின் வெளிப்புறக் காட்சிகளை அடையாறு பாலத்தின் அக்கரையில் ஒரு வீட்டில் நாங்கள் எடுத்துக் கொண்டிருந்

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

"பாப்பா! மிட்டாய் வாங்கித்தறேன்! என்னோடு வரியா?"

"நான் போட்டிருக்கும் நகைகளெல்லாம் இமிடேஷன். நாட் கோல்ட்! பரவாயில்லையா மாமா?"





○ 'காதலிக்க 90 நாள்' படத்தில் நாகேஷ், ரவிச்சந்திரன், புது முகம் லாவண்யா, மனோரமா.




தோம். இரவுநேரத்திற்கான காட்சி. அன்று எல்லோருமே பரபரப்புட னிருந்தோம். காரணம் எந்த நேரத்திலும் செம்பரம்பாக்கம் ஏரிஉடைந்து விடும் என்றநிலை. ஒரு காட்சியை எடுத்து முடித் தவுடன் விளக்கு வெளிச் சத்தை அடையாறு ஆற்றின் மீது பாய்ச்சிப் பார்ப்போம்; தண்ணீர் எவ்வளவு உயர்ந் திருக்கிறது என்று அறிய. படப்பிடிப்புக்கு வரவேண் டிய சில பொருள்கள் அன்று வரவேயில்லை. எனக்கு ஒரே கோபம். எப்படியோ படப் பிடிப்பை முடித்துவிட்டு வீடு திரும்பினோம்: அடுத்த நாள் காலை எனது கணவரின் நண்பர் டெலிபோனில் பேசினார்: 'நீங்கள் படப்பிடிப்பு நடத்தி னீர்களா?' 'ஓ நடத்தினோமே' என்றார் என் கணவர். 'நான் படப் பிடிப்பைக் காணத்தான் வந்துகொண் டிருந்தேன். ஆனால் அடையாறு பாலத் தைத் தாண்டுவதற்கு முன்பே பாலத்தின் மறுகரையிலிருந்து 'டேஞ்சர் சிக்னல்' போட் டுக் காட்டிக் கொண்டிருந்தார்கள். அதனால் திரும்பி விட்டேன்' என்றார்.

''எங்களுக்கு முதலில் ஒன்றுமே புரிய வில்லை. சற்று யோசித்து விடை புரிந்ததும் எங்களால் சிரிப்பை அடக்க முடியவில்லை. எங்களது படம் வண்ணத்தில் உருவாகி வருகிறது. அதற்காகப் பல்வேறு வண்ணங் களில் விளக்குகளை உபயோகிக்க வேண்டி யுள்ளது. அடையாற்றில் நீர்நிலை எவ்வளவு உயர்ந்துள்ளது என்று பார்க்க நாங்கள் உபயோகித்தது சிவப்பு விளக்கு. இதை 'டேஞ்சர் சிக்னல்' என்று எண்ணித்தான் நண் பரும் வரவில்லை; படப்பிடிப்புக்கு வரவேண் டிய பொருள்களும் வந்து சேரவில்லை!

''இந்தப் படத்தில் ஆறு வேடங்களில் வருகிறார் என் கணவர் ரவிச்சந்திரன். நாகேஷ் எட்டு வேடங்களில் வருகிறார். அவர்கள் மட்டுமல்ல; மனோரமா, கருமாரி, எஸ். வர லக்ஷ்மி, ஜூனியர் பாலையா, என்னத்தே கன்னையா, அங்கமுத்து, சுந்தரிபாய், சிலோன் மனோகர் ஆகியவர்களுடன் புது முகங்களான லாவண்யா, அனுராதா ஆகி யோரும் நடிக்கிறார்கள். இதற்குமேல் என் படத்தைப் பற்றிச் சொல்லப் போவதில்லை. என் படம் வருவதற்குள் நான் கூறும் விஷ யங்கள் வேறு படத்தில் வந்து விடுமோ என் கிற கவலை; அதனால்தான்'' என்றார் ஷீலா.

பேட்டி: சலன்.



நீங்கள் வாங்கும்
1 ரூபாய்
தமிழ்நாடு பரிசுச்சீட்டு
துயரம் மிகுந்த
அவளது வாழ்வு
ஆனந்த மயமாக
உதவட்டும்!
கிராமப் புறங்களில் வாழ்பவருக்கு சுத்தமும் சுகாதாரமும் மிகுந்த குடிநீர் கிடைக்க தமிழ்நாடு பரிசுச் சீட்டின் மூலம் கிடைக்கும் பணம் பயன்படுகிறது.
3 இரண்டாவது பரிசுகள்:
ரூ. 10,000 வீதம்
(ஒவ்வொரு வரிசைக்கும்)
5 மூன்றாவது பரிசுகள்:
ரூ. 5,000 வீதம்
(ஒவ்வொரு வரிசைக்கும்)
மொத்தப் பரிசுகள்: 7,965
மொத்த பரிசுத்தொகை:
ரூ. 11,70,000
மொத்த வரிசைகள்: மூன்று
இயக்குநர்
தமிழ்நாடு பரிசுச் சீட்டு
சென்னை-600 002
2 முதற் பரிசுகள்:
ரூ. 50,000
குலுக்கல் நாள்: 20-2-1979
பரிசுச் சீட்டின் விலை ரூ. 1 மட்டுமே
ஒவ்வொரு வரிசைக்கும
EP/OIR

உரையாடலில் பங்கு பெறுவோர்:

1. ஸ்ரீ டி. கே. பகவதி
2. திரு 'கிரேஸி' மோஹன்

மோஹன்: தற்போதைய நாடகக் குழுக்களுக்கும், பழைய கால நாடகக் குழுக்களுக்கும் உள்ள முக்கியமான வித்தியாசமா எதை நீங்க கருதறீங்க?

பகவதி: முன்பெல்லாம் நாடகக் கம்பெனிகளே தனியா இருக்கும். நடிக்கறவங்க, மற்ற வேலைக்காரங்களுக்கு நிரந்தரமா, சாப்பாடு, துணி, சம்பளம் கொடுத்து அவர்களைக் காப்பாற்றிப் புதுப்புது நாடகங்களைத் தயாரித்து அரங்கேற்றுவோம். தற்போது அப்படியில்லையே! குறிப்பிட்ட பெயர்ப் பலகை கீழ் நாடகக் குழுக்கள் உள்ளன. நடிக, நடிகையருக்கும், மற்றும் வேலை செய்பவர்களுக்கும் ஒவ்வொரு நாடகத்தின் அடிப்படையில்தான் ஊதியம். அதோடு நாடகத்தை அரங்கேற்றும் பணியைச் சபாக்கள் செய்கின்றன...

மோஹன்: பழைய மாதிரி நாடகக் கம்பெனிகள் இப்போதும் அவசியம் என்று சொல்கிறீர்களா?

பகவதி: தற்போதைய சூழ்நிலையில் அம்மாதிரி கம்பெனிகள் நடத்த முடியாது. பண நஷ்டம்தான் ஏற்படும். தற்போது நாடகம் போடுவது சுலபமாகி விட்டது என்கிறேன்.

மோஹன்: இப்போது சுலபமாகி விட்டது என்று சொல்வதை விட முன்பெல்லாம் அனாவசியமாக அதிகக் கஷ்டப்பட்டார்கள் என்று சொல்லலாம் இல்லையா?

பகவதி: அப்படிச் சொல்லிவிட முடியாது. முன்பெல்லாம் நாடகங்களில் பாடல்கள் நிறைய இடம் பெறும். கருத்தாழம் மிக்க நீண்ட வசனங்கள் இருக்கும். இதனால் ஆழ்ந்த பயிற்சி அவசியம். தற்போது ஒரு குறிப்பிட்ட நடிகர் வராவிட்டால் இன்னொருவர் அந்தப் பாத்திரத்தைச் சுலபமாக ஏற்று நடித்துவிட முடிகிறது.

மோஹன்: நீங்கள் சொல்வது மாதிரி பழைய நாடகங்களில் பாடல்கள் ஏராளம் வரும்.. தற்போது பாடல்களைப் போட்டால் மக்கள் ரசிக்க மாட்டார்களே!

பகவதி: இந்த வாதத்தை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். சமீபத்தில் 'மந்த்ராலய மஹான்' 'ராமானுஜர்' போன்ற நாடகங்களில் பாடல்கள் நிறைய இடம் பெற்றும் மக்கள் நன்கு ரசித்தார்கள்.

மோஹன்: நீங்கள் சொல்வதை நானும் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அவை புராண, இதிகாச நாடகங்கள். சமூக நாடகங்களில் காதலனும் காதலியும் 'டூயட்' பாடினால் விசில்தான் பறக்கும்!

பகவதி: ஏன் திரைப்படங்களில் காதலனும் காதலியும் பாடிக் கொள்வதை மக்கள் ரசிக்காமலா இருக்கிறார்கள்...? நல்ல பாடல்களாகப் போட்டால் நிச்சயம் ரசிப்பார்கள்.

மோஹன்: இந்த விஷயத்தில் சினிமா, நாடகம் ஆகிய இரண்டையும் நாம் ஒப்பிட முடியாது. சினிமாவில் காதலனும் காதலியும் கட்டி அணைத்து நடிப்பதை ரசிக்கும் மக்கள் நாடகத்தில் அம்மாதிரி வந்தால் அமைதியாக ரசிப்பார்களா என்ன? கதாநாயகன் கை கதாநாயகிமேல் பட்டாலே 'விசில்' அடிக்க ஆரம்பிக்கிறார்களே!...

பகவதி: முன்பெல்லாம் கதாநாயகி வேடத்தில் பெரும்பாலும் ஆண்களே நடிப்பார்கள். அப்போது தாராளமாகத் தொட்டு நடிப்போம். ஒரு பெண்ணே கதாநாயகி வேடம் போட்டால் சற்றுக்



கட்டுப்பாட்டுடன்தான் நடிப்போம்... சிவாஜி கணேசன் பெண் வேடத்தில் நடிப்பதைக் காண அற்புதமாக இருக்கும்...

மோஹன்: நானும் கேள்விப் பட்டிருக்கிறேன்... வசனங்களைப் பற்றிச் சொன்னீர்கள்... தற்போது நீண்ட வசனங்கள் மக்களிடையே எடுபடுவதில்லையே... சின்னச் சின்ன வசனங்கள் மிகமிக Sharp ஆக இருந்தால்தான் மக்கள் ரசிக்கிறார்கள்.

பகவதி: இதை நானும் கவனித்தேன்... ரசனை மாறித்தான் உள்ளது... ஆனால் இதுவே நிரந்தரமானது என்று எடுத்துக் கொள்ளவும் முடியாது. பழைய பாணி நீண்ட வசனங்களுக்கு மறுபடியும் மவுசு தோன்றத்தான் செய்யும்... மனோகர் நாடகங்களில் தற்போதும் நீண்ட வசனங்கள் உள்ளன. மக்கள் ரசிக்கிறார்கள்...

மோஹன்: புராண இதிகாச நாடகங்களில் இத்தகைய வசனங்கள் இருந்தால் எடுபடுகின்றன. சமூக நாடகங்களுக்குப் பொருந்தாது. புராண, சரித்திர நாடகங்களுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம் போல் சமூக நாடகங்களுக்கு முன்பெல்லாம் முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என்று நினைக்கிறேன். நாடகங்களின் எண்ணிக்கையைக் கொண்டு சொல்கிறேன்.

பகவதி: அப்படிச் சொல்லிவிட முடியாது. மனிதன், குமாஸ்தாவின் மகள், கல்கியின் கள்வனின் காதலி, ஸ்ரீதரின் ரத்த பாசம் போன்று பல சிறந்த சமூக நாடகங்களை நாங்களே தயாரித்து அரங்கேற்றி இருக்கிறோம்.... கலைஞரின் 'பராசக்தி' போன்ற சிறந்த நாடகங்களும் வந்துள்ளன. வசனத் துறையில் கலைஞரும், இளங்கோவனும் புரட்சியே செய்துள்ளனர். பழைய நிலை போன்று தற்போதைய சமூக நாடகங்களில் கருத்தாழமும், நெஞ்சில் நிலைத்து நிற்கக்கூடிய உணர்ச்சி பூர்வமான காட்சிகளும் இல்லையே, இதற்கு என்ன பதில் சொல்கிறீர்கள்?

மோஹன்: இதை நான் ஒப்புக் கொள்ளவில்லை. தற்போதைய அணுகுமுறை மாறுபட்டது. விசு, மௌலி போன்றவர்களின் நாடகங்களைப் பார்த்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். தற்போதைய சமூகத்தின் முக்கிய பிரச்னைகளை எடுத்துக் கொண்டு ஒரு Debate செய்வது போல் நாடகங்களை அமைத்துக் கொடுக்கிறார்கள்... சோவின் நாடகங்களையும் உதாரணமாக எடுத்துக் கொள்ளலாமே. நாடகங்கள் போடுவதை எளிதாக்கிய பெருமை சோவுக்கு உண்டு.

பகவதி: நீங்கள் சொல்வதுபோல் ஒருசில நாடகங்கள் இருக்கலாம்... ஆனால் பெரும்பாலான நாடகங்களில் கருத்தாழம் கிடையாது. அதோடு இன்னொரு பெரிய குறையைத் தற்போதைய சமூக நாடகங்களில் காண்கிறேன். பெரும்பாலான நாடகங்கள் பிராமண சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட கதைகளைக் கொண்டே தயாரிக்கப் படுகின்றனவே!

மோஹன்: அப்படிச் சொல்லிவிட முடியாது. எத்தனையோ நாடகக் கதைகள் வேறு சமூகத்தினரின் குடும்பத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளன. பல நாடகங்கள் எந்த சமூகத்தினரையும் அடிப்படையாகக் கொள்ளாமல் பொதுப்படையாகவே சித்திரிக்கப்படுகின்றன.

பகவதி: இருந்தாலும், குடும்பத்தின் சூழ்நிலை, பேசப்படும் வசனங்கள், உச்சரிப்பு ஆகியவை பிராமண சமூகத்தையே பிரதிபலிப்பனவாக உள்ளன. நாடகங்களை எழுதுபவர்கள், நடிப்பவர்கள், சபாக்காரர்கள், சபாவின் அங்கத்தினர்கள் ஆகியவர்களில் பெரும்பாலோர் இந்தச் சமூகத்தையே சார்ந்து இருப்பதால்தான் இம்மாதிரி வெளிப்பாடு தோன்றுகிறது என்று நினைக்கிறேன்... குற்றம் சாட்ட வேண்டும் என்று இதை நான் குறிப்பிடவில்லை. இது ஒரு குறை. நாடகம் என்றால் பல தரப்பட்ட வகுப்பினர், மாறுபட்ட தொழிலாளிகள் வாழ்க்கை முறை, பண்பாடு ஆகியவற்றைச் சித்திரிப்பதாக இருக்க வேண்டும் என்கிற ஆக்கபூர்வமான நோக்கில் சொல்கிறேன்!

மோஹன்: தற்போதைய நாடகங்களின் நகைச்சுவை பற்றி உங்கள் கருத்து என்ன?

பகவதி: பெரும்பாலான நாடகங்களில் நகைச்சுவை கதையோடு ஒட்டாமல் இருக்கிறது. கலைவாணர் நகைச்சுவை மாதிரி கருத்தாழமும் இருப்பதில்லை... ஆனால் ஒன்று... அந்தச் சமயத்தில் ரசிக்கலாம்.

மோஹன்: காலத்துக்குக் காலம் ரசனை மாறுபடுகிறது. தற்போதைய சூழ்நிலையில் இத்தகைய நகைச்சுவை எடுபடுகிறது... தற்போதும் சோ, விசு, மௌலி போன்றவர்களின் நாடகங்களில் கருத்தாழம் மிக்க நகைச்சுவையைக் காணலாம்...

பகவதி: உரையாடலை முடிக்குமுன் உங்களுக்கு ஒரு வேண்டுகோள்... நீங்கள் ஒரு நாடகக் கதாசிரியர்... நல்ல கருத்தாழம் மிக்க, உணர்ச்சி பூர்வமான கதையை நாடகமாக எழுதி, சிறப்பான வசனங்களுடனும் தேர்ந்த நடிகர்களையும் கொண்டு அரங்கேற்றுங்கள். அந்நாளில் எனக்குத் தகவல் கொடுத்தால் அதை வந்து பார்த்து மனதார வாழ்த்தக் கூடியவர்களில் முதலாவதாக நான்தான் இருப்பேன்... உங்களுக்கு எனது ஆசிகள்...

மோஹன்: அவசியம் எழுதுகிறேன்... உங்களது ஆசிக்கு எனது நன்றி...

உரையாடல் ஏற்பாடு: நாகன்
புகைப்படம்: மன்னிமூர்த்தி

''பேஸ்கட்— பால் ஆடலாம் வரியா?''





அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி 1979

அமரர் கல்கி அவர்களின் நினைவாக ஆண்டுதோறும் நடக்கும் இந்தச் சிறுகதைப் போட்டியில் வழக்கம்போல் இந்த ஆண்டும் எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

முதல் பரிசு	**ரூ. 1000**
இரண்டாம் பரிசு	**ரூ. 500**
மூன்றாம் பரிசு (இரு கதைகளுக்கு தலா ரூ. 250 வீதம்)	**ரூ. 500**

ஆகமொத்தம் ரூ 2000 - பரிசுகளாக வழங்கப் பெறும்.
தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ 100 - சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளருக்கு போனஸ் உண்டு.

- கதைகள் சொந்தக் கற்பனை என்ற உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில் இதற்குமுன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை எழுத மாட்டேன் எனவும் உறுதிமொழி தரவேண்டும்.
- நடுவர்கள் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.
- முடிவு தேதி ஏப்ரல் 30.
- உறையின் மேல் 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப்பெற போதிய அளவு தபால்தலை ஒட்டிய சுய விலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப்போக்குவரத்தும் கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது —

ஆசிரியர் கல்கி, சென்னை-600 032.





டெலிவிஷன்

'ஞாநி'

நேற்று காலையில் ராகவன் ஃபோன் செய்தான். நாளை மாலை நான் டெலிவிஷனில் தோன்ற வேண்டும் என்றான். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றி ஒரு விவாத நிகழ்ச்சி. என்னைத் தவிர மூன்று பேர் கலந்து கொள்கிறார்களாம் — காம்பியர் செய்கிற ஒரு பெண், கல்லூரி முதல்வர் ஒருவர், ஒரு வேலை தேடுகிற இளைஞன்.

அங்கே போய் நான் என்ன பேசப்போகிறேன் என்று எனக்குப் புரியவில்லை. ராகவன், நான் ஒரு சிறு தொழிலதிபர் என்கிற விதத்தில், சுய வேலைவாய்ப்புகள் பற்றி ஏதாவது சொல்லலாம் என்றான். அவனும் நானும் கல்லூரியில் ஒன்றாகப் படித்தோம். அவன் அப்போதே பட்டி மன்றம், பேச்சுப் போட்டி என்று சுற்றிக் கொண்டிருப்பான். இப்போது டெலிவிஷனில் புரொட்யூசராய் இருக்கிறான். நான் ஸ்க்ரு ஆணிகளும், மறைகளும் தயாரித்துக் கொண்டிருக்கிறேன்.

முன்பின் இதெல்லாம் பழக்கமில்லாததால் வேண்டாம் என்று நான் மறுத்தாலும் ராகவன் விடுவதாக இல்லை. அவனுக்கும் கடைசி நிமிடத்தில் வேறு ஆளைத் தேட முடியாது.

கொஞ்சம் பயமாக இருந்தாலும், டெலிவிஷனில் தோன்றப்போகிறேன் என்பது சந்தோஷமாகத்தான் இருக்கிறது. ராகவனிடம் சம்மதம் சொன்னபின் பிரேமாவுக்குத் தெரிவித்தேன். அவளுக்கு என்னைவிடச் சந்தோஷம். வழக்கமாய்ப் பக்கத்து வீட்டுக்காரர்கள் 'டீவி' பார்க்க வந்தால் முணுமுணுப்பவள் தானே போய் நாளைய நிகழ்ச்சியைப் பற்றி அறிவித்துவிட்டு வந்தாள்,

அன்றைய தினம் தொழிற்சாலைக்கு ஃபோன் செய்த, நேரில் வந்த நண்பர்களுக்கெல்லாம் நாளை மாலை யாரையும் சந்திப்பதற்கில்லை என்று தெரிவிக்கிற விதமாக என் 'டீவி' நிகழ்ச்சியைப் பற்றிச் சொன்னேன். நான் டீவியில் தோன்றுகிற விஷயம் என் சகதொழிலதிபர்கள் நடுவே என் மதிப்பைக் கொஞ்சம் உயர்த்திற்று.

மாலை வீடு திரும்பியதும் என் ஐந்து வயதுப் பையன் ராஜாவிடம் சொன்னேன். அவன் சீரியசாக முகத்தை வைத்துக்கொண்டு கேட்டான்:

''டிஷ்டிஷ் சண்டைல்லாம் போடுவியா?''

பிரேமாவும் நானும் சிரித்தோம்.

காலையிலிருந்து ஒரு முக்கியமான பிரச்சினை உறுத்திற்று. டெலிவிஷனில் தோன்றுவதற்கு எந்த உடை அணிந்து போக வேண்டும் என்று யோசித்துக் குழம்பிப் போனேன். எந்த கலர் எடுப்பாக இருக்குமென்று தெரியவில்லை. ராகவனோ இதையெல்லாம் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. டெலிவிஷன் நிகழ்ச்சிகளில் நாங்கள் பார்த்தவர்கள் எல்லாரும் என்ன மாதிரி உடையணிந்திருந்தார்கள் என்று பிரேமாவும் நானும் யோசித்துப் பார்த்தோம். நினைவு வரவில்லை.

கடைசியில் எனக்குப் பிடித்தமான ஒரு மஞ்சள் நிறச் சட்டையும், பிரௌன் கலர் பேண்ட்டும் அணிந்து கொண்டு தொழிற்சாலைக்குப் புறப்பட்டேன். அங்கிருந்து அப்படியே டெலிவிஷன் நிலையத்துக்குச் சென்றுவிடத் திட்டமிட்டிருந்தேன்.

ராகவனுக்கு ஃபோன் செய்தேன். ஆளில்லை. மாலை ஐந்து மணிக்குத்தான் வருவானாம். என் நிகழ்ச்சி எட்டு பதின்மூன்றுக்கு என்று போட்டிருந்தது. நேற்று டெலிவிஷனில் நாளைய நிகழ்ச்சிகள் பகுதியில் என்

பெயரையெல்லாம் அறிவித்திருந்தார்கள். நான் நிலையத்துக்கு ஆறு மணிக்கு வந்துவிட வேண்டுமென்று சொல்லியிருந்தான் ராகவன்.

தொழிற்சாலையில் உணவு வேளைக்குப் பின் ஷாப்பிற்கு மேற்பார்வையிடப் போனேன். ஃபோர்மன் சுந்தரம் கேட்டார்: ''சார், டீவில அப்பியர் ஆவுறீங்க போலிருக்கு?'' ஆமென்றேன். அவர் தம் வீட்டுக்கருகில் உள்ள ஓரிடத்தில் அவசியம் டீவி பார்ப்பதாகச் சொன்னார். அன்றைக்கு ஓவர்டைம் செய்யச் சொல்லுவதாய் இருந்ததைச் சொல்லாமல் விட்டுவிட்டேன்.

நான் டாக்ஸியில் டெலிவிஷன் நிலையத்தை அடையும்போது மணி ஆறுவிட்டது. ரிசப்ஷனில் விசாரித்துக் கொண்டு அங்கே ரிஜிஸ்தரில் கையெழுத்திட்டுவிட்டு, ராகவன் அறைக்குப் போனேன். எல்லா அறைகளும் ஒரேமாதிரி பெட்டி பெட்டியாய் இருந்தன.

ஏற்கெனவே, ராகவனும், இன்னும் ஒரு வயதானவரும் ஒரு பெண்ணும் அங்கே இருந்தார்கள். ராகவன் அவர்களை அறிமுகப் படுத்தினான். வயதானவர் கல்லூரி முதல்வர் வேங்கட்ராமன். அந்தப் பெண்தான் காம்பியர் சுமதி.

சுமதி நேரே விஷயத்துக்கு வந்தாள்.

''முதலில் நான் ஒரு சின்ன முன்னுரை சொன்னபின் உங்களை அறிமுகம் செய்வேன். நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்களோ, அதை மனத்தில் கோவைப்படுத்தி வைத்துக் கொள்ளுங்கள்'' என்றாள்.

ராகவன், ''நீ என்ன சொல்லப் போறே?'' என்று கேட்டான்.

''அதுதான் எனக்கே புரியலே.''

''டோண்ட் பாதர். எப்படிப் பட்டதாரி இளைஞர்கள் சொந்தமாகத் தொழில் நடத்துவதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன. பாங்க்களில் கடன் தருகிறார்கள்... எக்ஸெட்ரா... சொல்லு. போதும்.''

''பாங்க் என்று சொல்லணுமா? வங்கி என்று சொல்லணுமா?''

சுமதி எப்படிப் பேச வேண்டும் என்று சொன்னாள். ''காலோகியலாவே பேசுங்க. அதிகமா இங்கிலீஷ் வேணாம்.''

ராகவன் ஒருமுறை பேசிக் காட்டச் சொல்ல, நான் பேசிக் காட்டினேன். அப்புறம் வேங்கட்ராமன் பேச வேண்டியவற்றைப் பற்றி விவரித்தோம்.

''எங்கே அந்தப் பையனை இன்னும் காணோம்?'' என்றார் வேங்கட்ராமன். அவர் சொல்லவும் அந்த இளைஞன் சரியாக உள்ளே நுழைந்தான். நிறையத் தலைமயிரும், பெரிய மீசையும் வைத்திருந்தான். ஒரு பூப்போட்ட சட்டை போட்டிருந்தான். ராகவனைப் பார்த்து இலேசாகச் சிரித்தான்.

''இவர்தான் பாஸ்கர். அன்எம்ப்ளாய்ட் க்ராஜுவேட்'' என்று ராகவன் அறிமுகப் படுத்தினான். சுமதி அவனை விநோதமாகப் பார்த்தாள். வேங்கட்ராமன் தான் வயதானவர் என்கிற தைரியத்தில் ஒரு ஜோக் அடித்தார்.

''இவ்வளவு மயிர் வெச்சிண்டிருக்கியே. அதான் உனக்கு இன்னும் வேலை கிடைக்கலே'' என்றார்.

எனக்கு என்னவோ போலிருந்தது. பாஸ்கர் அதை விரும்பாதவனாய் அவரை முறைத்தபடி ராகவனிடம், ''இவர் தான் ப்ரின்ஸிபாலா?'' என்றான்.

''யெஸ்.'' என்ற ராகவன் அவனுக்கு எங்களை அறிமுகம் பண்ணிவிட்டு அவன் பேசவேண்டியதை எப்படிப் பேசுவது என்று சொன்னான். இதற்குள் மணி ஏழாகி விட்டிருந்தது.

''நீங்க கொஞ்ச நேரம் ரிலாக்ஸ் பண்ணுங்க. நான் ஸ்டுடியோவுக்குப் போய் எல்லாம் ரெடியான்னு பார்த்துட்டு வரேன்'' எனப் புறப்பட்ட ராகவன் என்னைப் பார்த்து, ''இந்த ஷர்ட்டை அப்புறம் மாத்தணும். டார்க் கலர் போடணும்'' என்றான்.

வேங்கட்ராமன் ''நானும் மாத்தணுமா?'' என்றார். அவர் ஒரு ப்ரௌன் கலர் சூட் அணிந்திருந்தார். ''நீங்க யாரும் மாத்த வேண்டியதில்லே'' என்று சொல்லி விட்டுப் போனான் ராகவன். சுமதி நிறைய டெலிவிஷன் அனுபவமிருந்தவளாதலால் பெரிய கருநீலப் பூக்கள் போட்ட மஞ்சள் புடவை அணிந்திருந்தாள்.

வேங்கட்ராமன் என்னோடு பேச ஆரம்பித்தார். பாஸ்கர் அறையின் ஜன்னல் பக்கம் போய் நின்றுகொண்டு வேடிக்கை பார்த்தான். சுமதி அவனோடு பேசிக் கொண்டிருந்தது கேட்டது.

''நீங்க டீவில ஒன்னும் காஷுவல் ஜாப் ட்ரை பண்ணலியா?'' என்றாள்.

''இங்க எவன் வேலை செய்வான்? இன்னிக்கே ராகவன் சார் ஒரு எழுபத்தஞ்சு ரூபா கிடைக்கும்னு சொல்லவே வந்தேன்'' என்றபடி பாஸ்கர் ஒரு பீடியை எடுத்துப் பற்ற வைத்தான். வேங்கட்ராமன் அதைப் பார்த்து விட்டுத் தம் முகத்தைச் சுளித்துக் கொண்டார்.

ராகவன் வந்து அழைக்க, நாங்கள் எல்லாரும் அவன் பின்னே போனோம். அந்தக் காரிடரின் கடைசியில் திரும்பி ஒரு படிக்

''நீ ஸ்கூல் பரீட்சைகளில் அடிக்கடி காப்பி அடிச்சுட்டே இருப்பே! இப்ப என்ன செய்றே?''

''பத்திரப் பதிவு ஆபீசுலே காப்பியிஸ்ட்டாக இருக்கேன்!''



கெட்டில்இறங்கி இரண்டு கதவுகளைத் தாண்டி இன்னொரு காரிடாரை அடைந்தோம்.

முதல் அறைக்குள் நுழைந்தோம். மேக்கப் ரூம். இரண்டிரண்டு பேராக அமர, இரு பெண்கள் முகத்தில் பவுடர் மட்டும் பூசினார்கள். வெங்கட்ராமன் முதலில் முகத்தைத் தண்ணீரால் கழுவிவிட்டு வந்தார். ''அப்ப தான் மேக்கப் நல்லா இருக்கும்'' என்றார்.

மேக்கப் முடிந்தவுடன் ராகவனிடம், ''நானும் பார்த்துட்டேன். ஒருத்தரும் ஒழுங்கா மேக்கப் போடறதில்லே. கழுத்தை அப்படியே கறுப்பா விட்டுடறாங்க'' என்று சொல்லி விட்டு என்னைப் பார்த்து, ''நான் நிறைய நாடகத்துலே நடிச்சிருக்கேன் சார்! அது ஒரு காலம்'' என்று சிரித்தார். பாஸ்கரைத் தவிர எல்லாரும் கூடச் சிரித்தோம்.

அடுத்து காஸ்ட்யூம் அறைக்குப் போய் நாலைந்து ஷர்ட்களை நிராகரித்துவிட்டு நான் ஒரு ஷர்ட் அணிந்து கொண்டேன். ராகவன் எல்லாரையும் அங்கேயே நிறுத்திக் கொண்டு இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் தர ஆரம்பித்தான். அவன் பக்கத்தில் ஒரு நடுத்தர வயதுக்காரர் இருந்தார்.

''முதலில் சுமதி பேசுவாங்க. அதுக்கப்புறம் அறிமுகப் படுத்தும்போது ஒவ்வொருவராய்ப் பேசலாம். ஒரே நேரத்துல இரண்டு பேர் பேசாதீங்க. காமராவைப் பார்க்க முயற்சி பண்ணாதீங்க. அது உங்களைப் பார்க்கும். நிகழ்ச்சி முடிய நேரமாயிட்டதும் இவர் வந்து சைன் பண்ணுவாரு'' என்றான்.

நடுத்தர வயதுக்காரர் தான் என்ன சொல்வார் என்பதை விவரித்தார். ஒரு நிமிடம் மீதம் இருக்கும்போது விரலால் ஒன்று என்று காட்டுவார். அப்போது யார் பேசிக் கொண்டிருந்தாலும் உடனே இயல்பாக நிறுத்திக் கொள்ள வேண்டும். அப்புறம் விரலால் சுழித்து சைஃபர் காட்டுவதோடு முடிந்துவிடும். காம்பியர் கடைசியில் பேசி முடிப்பார். விளக்குகள் அணையும்வரை யாரும் எழுந்திருக்க வேண்டாம். நிகழ்ச்சியின்போது அடிக்கடி தலையாட்டவோ, நாற்காலியில் அசையவோ வேண்டாம்.

''வாங்க போகலாம். இப்போ நம்ம நிகழ்ச்சிக்கு முன்னால நியூஸ் இருக்கு. அதனால சத்தம் போடாமப் போய் சீட்ல உட்காரணும்'' என்றபடி அந்த ஆள் எங்களை அழைத்துப் போனார்.

''நான் கண்ட்ரோல் ரூமுக்குப் போறேன்'' என ராகவன் விடைபெற்றுக் கொண்டான்.

நாங்கள் எல்லாருமாக இன்னுமொரு கதவைத் திறந்து கொண்டு ஸ்டுடியோவில் நுழைந்தோம்.

ஸ்டுடியோவின் நடுவே தள்ளித் தள்ளி இரண்டு பகுதிகளில் மட்டும் வெளிச்சம் தெரிந்தது. சுற்றியிருந்த தடுப்புகளின் வழியே ஊர்ந்து போய் நடுப் பகுதியை அடைந்தோம்.

ஒரு பகுதியில் ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள். அவளெதிரே டேபிளில் காகிதங்கள் இருந்தன. கீழே நிறைய ஒயர்கள், மேலே நிறைய விளக்குகள். இன்னொரு பகுதியில் ஒரு சிறுமேடை போட்டிருந்தது. அதிலிருந்த நான்கு நாற்காலிகளில் நாங்கள் போய் உட்கார்ந்தோம்.

மறுபகுதியிலிருந்த பெண்ணுக்கு எதிரே போய் நின்ற எங்களுடன் வந்த நடுத்தர வயதுக்காரர் கையை ஒருமுறை உயர்த்தி இறக்க, அவள் படிக்க, ஆரம்பித்தாள். எங்களுக்கு இடப்புறம் தெரிந்த ஒரு டெலிவிஷன் திரையில் அவளைப் பார்த்தேன்.

அவள் செய்தி வாசித்து முடித்தாள். அவள் முகத்தில் அந்தப் புன்னகை உறைந்து போயிருந்தது. அவளெதிரில் இருந்த இரண்டு காமிராக்களும் எங்களை நோக்கி நகர, அவள் புன்னகையைக் கலைத்துவிட்டு எழுந்தாள்.

எங்கள் விளக்குகள் பிரகாசமாயின. நடுத்தர வயது ஆசாமி எங்கள் எதிரே வந்து நின்றார். நான் காலரைச் சரிசெய்து கொண்டேன். அவர் கையை உயர்த்தி இறக்கினார்

சுமதி பேச ஆரம்பித்தாள்.

டெலிவிஷன் நிலையத்தின் கீழ்த்தளத்தின் முகப்பிலிருந்த அந்த அறையில் உட்கார்ந்திருந்த ட்யூட்டி ஆஃபீஸர் தம் மேஜையிலிருந்த சில காகிதங்களை ஒழுங்குபடுத்திக் கொண்டார்.

அவர் எதிரே 'இருந்த டெலிவிஷன் செட்டில் அந்தப் பெண் செய்தி வாசித்துக் கொண்டிருந்தாள். ஒரு நீண்ட கொட்டாவி விட்டபடி அதைப் பார்த்துக் கொண்டிருந்தார் ட்யூட்டி ஆஃபீஸர்.

செய்தி முடிகையில் அந்த நியூஸ் ரீடர் பெண்ணின் சிரிப்பைக் கண் கொட்டாமல் பார்த்து ரசித்த அவர் 'அடுத்த நிகழ்ச்சி இன்னும் சில விநாடிகளில் தொடரும்' என்ற அறிவிப்பைப் பார்த்ததும் மீண்டும் தம் முன்னிருந்த காகிதங்களை ஒழுங்கு படுத்தி பால் பாய்ண்ட் பேனாவை எடுத்தார்.

நிகழ்ச்சி ஆரம்பமாகியது.

ஒரு பெண்ணின் முகம் திரையில் தெரிந்தது. அவள் பேச ஆரம்பித்தாள். ''நம்

''பாங்க் வேலைக்கு மனு போட்டிருந்தாயே என்ன ஆச்சு?''

''இரண்டாயிரம் ரூபாய் செக்யூரிடி டெபாஸிட் கட்டச் சொல்றாங்க. அதனால வேண்டான்னுட்டேன். அவ்வளவு பணம் யார் கிட்டே இருக்கு?''

''மடையா! பேசாம அந்த பேங்கிலிருந்தே கடன் வாங்க வேண்டியதுதானே!''

- பஸ்ஸில் இந்த உரையாடலைக் கேட்டவர்: முத்து



நாட்டில் இன்று நிறைய இளைஞர்கள் வேலை வாய்ப்புக்களை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். நம் அரசாங்கங்கள் முன்னைவிட வேலை வாய்ப்புக்களைப் பெருக்குவதில் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டுள்ளன. இன்று வேலை வாய்ப்புக்கள் பற்றி உரையாடுவதற்காக, இங்கே...''

அந்தப் பெண்ணின் கழுத்தின் மீது சூபர் இம்போஸ்டாக அவள் பெயர் தோன்றிச் சில விநாடிகள் நின்று மறைந்தது. ட்யூட்டி ஆஃபீஸர் தம் முன்னிருந்த காண்ட்ராக்ட் காகிதங்களில் சுமதி என்கிற பெயரைத் தேடி பால்பாயிண்ட்டால் டிக் செய்தார்.

அடுத்து, திரையில் முன் வழுக்கையும் மூக்குக் கண்ணாடியுமாக ஒருவர் தோன்ற, ட்யூட்டி ஆஃபீஸர் வேங்கட்ராமனின் காகிதத்தை டிக் செய்து மேலே வைத்தார். திரையில் தலையைத் திருப்பி, ''என்ன சொல்றீங்க மிஸ்டர் ரவி?'' எனவும் காமிரா ரவியைக் காட்டிற்று.

''ஆமா. நீங்க சொல்றது சரிதான். இப்ப நிறைய பேங்க்ல சொந்தமா தொழில் நடத்த கிராஜுவேட்டுக்கு லோன் தராங்க'' என்றான் ரவி. அவன் கண்கள் பக்கவாட்டில் நோக்குவதைப் பார்த்த ட்யூட்டி ஆஃபீஸர் சிரித்துக் கொண்டார். கையில் இருக்கிற டெலிவிஷன் செட்டில் தன்னையே பார்த்துக் கொள்ளுகிறான் போலிருக்கிறது.

சுமதி திரும்பவும் தோன்றினாள்.

''மிஸ்டர் பாஸ்கர். நீங்க ஆறு வருஷமா வேலை தேடிக்கிட்டிருக்கீங்க. நீங்க தற்போதுள்ள முன்னேற்றமான சூழ்நிலையைப் பத்தி என்ன நினைக்கறீங்க?''

''ஆமா. 'நான் ஆறு வருஷமா வேலை தேடிக்கிட்டிருக்கேன்'' என்று ஒரு நிதானமான ஆண் குரல் ஒலிக்க ஆரம்பித்ததும், காமிரா மெல்ல அந்தக் குரலுக்குரிய முகத்தைத் தேடிப்போய் நின்றது. நிறைய தலைமயிரும்,பெரிய மீசையும், சோகமான கண்களுமுடைய அந்த உருவத்தின் கழுத்தில் ஆர். பாஸ்கர் என்ற வார்த்தைகள் தோன்றி மறைய, ட்யூட்டி ஆஃபீஸர் நான்காவது காகிதத்திலும் டிக் சசெய்துவிட்டு எல்லாக் காகிதங்களையும் ஓரமாக டேபிள் வெயிட்டின் கீழ் வைத்துவிட்டு, தம் நாற்காலியில் ஒய்வாகச் சாய்ந்து கொண்டார்.

பாஸ்கரின் குரல் வேகமாகத்தொடர்ந்தது.

''நான் வேலை தேடறேனே ஒழிய எவன் எனக்கு வேலை தரான்? எல்லாம் திருட்டுப் பசங்க. லஞ்சம் வாங்கறானுங்க. உறவுக்காரனுக்குத்தான் வேலை தரான். கேட்கறதுக்கு எந்த மந்திரிக்கு வாய் இருக்குது? ஆஃபீஸர் மந்திரி எல்லாருமா சேர்ந்து இந்த நாட்டையே ஏமாத்திக்கிட்டிருக்கானுங்க. வேலை வாய்ப்பாம்! அதிகரிக்கறான்களாம்! யாருக்கு வேலைவாய்ப்பு? எவனை ஏமாத்தப் பாக்கறீங்க? இவங்க எல்லாரையும் ஒழிச்சுக் கட்டினாத்தான் நாடு உருப்படும்!...''

ட்யூட்டி ஆஃபீஸர் திடுக்கிட்டு எழுந்தார். இன்னும் நிறைய இடங்களில் நிறையபேர் திடுக்கிட்டு எழுந்தார்கள்!


கிரிக்கெட் கற்கலாம்! 23

கோச்: கே. சந்திரசேகர்

படம்: ராஜ்.. தயாரிப்பு: குண்டுமணி

சுழல் பந்து வீச்சு!

மிதவாகப் பந்து வீசுபவர்களுக்குச் சுழல் பந்து வீசும் கலை மிகத் தேவை.



லெக் ஸ்பின்னுக்குக் கிரிப் (மாட்ஸ்மன் பார்வையில்)

ஆஃப் ஸ்பின்னுக்குக் கிரிப்



பந்தைச் சுருட்டி வீசுவதற்குக் கைமுட்டும் விரல்களும் இயங்கிச் செயல்பட வேண்டும். ஆரம்ப கட்டத்திலேயே இக்கலையை முற்றும் கற்றுணர வேண்டும்.



லெக் பிரேக்


ஆப் பிரேக்

சுழல் பந்து வீச்சாளர் முதலில் ஆப் ஸ்பின்னராகவோ, லெக்ஸ்பின்னராகவோ தரம் ஆகப் போவதை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும் - இரண்டையும் கலப்படம் செய்வது தவறு.

மும்முனைகள்

அத்தியாயம் 13

யோகேசுவர மூர்த்தி வீட்டில் வரவேற்பு அறை ஏதோ தர்பார் மண்டபம் மாதிரி அவ்வளவு பிரமாதமாக இருந்தது. இரண்டு பெரிய சோபா செட்கள் போட்ட பிறகும் அறையில் ஏராளமாக இடம் பாக்கி இருந்தது. சுவரோடு சுவர் மெத்தென்ற கம்பளம். வெளியே உள்ள அழகான தோட்டம் தெரிகிற மாதிரி ஒரு பக்கச்சுவர் முழுவதும் பிரும்மாண்டமான ஒற்றைக் கண்ணாடி. அதற்கு இரட்டைத் திரைகள். தேவையானால் முழுதும் மறைத்து விடக்கூடிய விலையுயர்ந்த திரை; அல்லது 'மறைந்தும் மறையாமலும் வைக்கக்கூடிய சல்லாத் துணியாலான திரை. கண்ணுக்குத் தெரியாமல் இருந்து ஓசைப் படுத்தாமல் அறையைக் குளுகுளுவென்றாக்கிய ஏர்கண்டிஷனர்கள். சுவர்களில் ஒரு புகழ்பெற்ற மேனாட்டு ஓவியரின் பழங்காலத்திய அசல் பெய்ண்ட்டிங். இன்னொருபுறம் நமது நாட்டின் ஒரு மாடர்ன் ஆர்ட். ஷோ கேஸில் நடராஜர், சோமாஸ்கந்தர், அர்த்தநாரி இப்படிச் சில பழங்காலத்திய விலையுயர்ந்த படிமங்கள். விளக்குகள் எங்கிருக்கின்றன என்றே தெரியாமல் ஒளிந்திருந்து ஒளி உமிழ்ந்தன. சோபாவில் அமர்ந்தால் அது அரை அடிக்கு உடலைப் புதைத்துக்கொண்டது.



கி. ராஜேந்திரன்

'ஏதோ நம்மையே பணக்காரர்கள் என்று எண்ணிப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறோமே. இப்படியும் செல்வம் ஓரிடத்தில் கொழிக்க முடியுமா?' என்று திகைத்தாள் தனபாக்கியம். 'இவ்வளவு செல்வம் மிக்க குடும்பத்தில் பிறந்த பெண்ணையா நம் மகன் காதலிக்கிறான்! எவ்வளவு பெரிய அதிர்ஷ்டம்!' யோகேசுவர மூர்த்தி — இம்போர்ட் எக்ஸ்போர்ட் பிஸினஸில் ஈடுபட்டிருக்கும் யோகேஷ் — என்று சத்யா கூறியதுமே தன் கணவர் வைத்தியலிங்கம் பிரமித்துப் போய்ச் சோபாவில் சாய்ந்ததன் முழு தாத்பரியமும் இப்போதுதான் புரிந்தது தனபாக்கியத்துக்கு.

ஆயினும் இவற்றையெல்லாம் படிப்படியாகப் பின்னால்தான் கவனித்து உணர்ந்தாள் அவள். அந்த அறைக்குள் நுழைந்ததுமே முதலில் அவள் கண்களில் பட்டது ஒரு வண்ணத்துப் பூச்சி மாதிரி இங்கு மங்குமாகப் பாய்ந்து ஓடிக் கொண்டிருந்த ஓர் அழகிய பெண் உருவம்தான். 'பிங்கி' என்று செல்லமாக அழைக்கப்படும் பிரமீளா இவள்தான் என்றால் சத்யாவுடைய கெட்டிக்காரத்தனத்தை எவ்வளவு மெச்சினாலும் தகும்' என்று தனபாக்கியத்துக்குத் தோன்றியது. 'காதல் வலை வீசிச் சிக்க வைத்தானென்றாலும், எப்பேர்ப்பட்ட அழகிய தங்க மீனைப் பிடித்திருக்கிறான்.'

பிங்கி பலவிதமாகவும் கிரிக்கெட் மட்டையைச் சுழற்றிக் கூடவே நேர்முக வர்ணனையும் கொடுத்துக் கொண்டிருந்தாள்; ''லேட் கட்... பியூட்டிஃபுல் ஷாட் பிங்கி! லெக் கிளான்ஸ்... ஆல் தி வே டு தி பவுண்டரி!...''

'பெண்கள் விடுதலை பற்றிப் பிரமாதமாகப் பேசுவாளாம்; சமூக சேவை என்று கிராமங்களில் முகாமிடுவாளாம்; வயதும் இருபத்திரண்டு ஆகி விட்டதாம்; இருப்பினும் குழந்தைத்தனம் மாறாமல் தனக்குத்தானே விளையாடிக் கொண்டிருக்கிறாளே!' என்று மனக்குள் பரவசப்பட்டுப் பார்த்துக் கொண்டிருந்தாள் தனபாக்கியம். பிங்கியின் உற்சாகம் தனபாக்கியத்துடன் வந்திருந்த கலோசனாவையும் பற்றிக் கொள்ள விளையாட்டாகப் பந்து வீச்சு நிபுணன் போல் ஓடிவந்து ஒருகுதி குதித்து வெறும் கையைச் சுழற்றி வீசினாள். ''நெக்ஸ்ட் பால் ஆஃப் தி ஓவர்... ஆன் தி லெக் அண்ட் மிடில்... அண்டு பிங்கி இஸ் கிளீன் போல்ட்!'' என்று கூடவே நேர்முக வர்ணனையும் தந்தாள்.

''ஏய்! யார் நீ? நான் ரெடியாறதுக்கு முன்னால் போட்டால் எப்படி அவுட்னு ஒப்புக் கொள்ள முடியும்? இட் இஸ் எ நோ பால்'' என்றாள் பிங்கி.

''நோ! இட் இஸ் எ எஸ் பால்!''

''எஸ் பாலா? அப்படீன்னா?''

''கிரிக்கெட்லே எஸ் பாலே கிடையாதா? நோ பால்தான் உண்டா? அட கல்யாணமே! எனக்குத் தெரிஞ்ச கிரிக்கெட் அவ்வளவுதான், விடு'' என்றாள் கலோசனா.

''பிங்கி! அம்மா இல்லே? கொஞ்சம் கூப்பிடு. நாங்க இந்த நேரத்துக்கு வரதா ஃபோன் பண்ணிச் சொல்லியிருக்கோம்'' என்றாள் தனபாக்கியம்.

''அம்மா டிரெஸ் பண்ணிக்கிட்டிருக்கா. அது முடிஞ்சு வரக் கொறைஞ்சது இன்னும் அரை மணி நேரமாகும். உட்காருங்க'' என்றாள் பிங்கி.

''அம்மாடி! அவ்வளவு நேரமா ஆகும் டிரெஸ் பண்ணிக்க?'' என்று தனபாக்கியம் தன்னையறியாது கேட்டுவிட்டாள்.

''ஆமா, முகத்துக்கு ஃபவுண்டேஷன் கிரீம், பவுடர், ரூஜ், லிப்ஸ்டிக், ஐ புரோ பென்ஸில், குங்குமம், ஐஷேட், காண்



டாக்ட் லென்ஸ், அப்புறம் தலைக்குக் கொண்டை, பூ, கால் கை நகங்களுக்குநெய்ல் பாலிஷ்; உடம்புக்கு டியோடரண்ட், சானல் ஸெண்ட்; பிறகு பிரா, ரவிக்கை, பாவாடை, புடைவை, ரிஸ்ட் வாட்ச், நகைகள், ஹை ஹீல்ஸ் எல்லாம் அணிந்து வர அரை மணியாவது வேண்டாமா?''

''எவ்வளவுதான் அழகு படுத்திக்கிறதுன்னாலும் அரை மணி, முக்கால் மணியா?''

''நோ நோ! மற்றதெல்லாம் சீக்கிரமா முடிஞ்சுடும். ஆறு ஒன்பது கெஜம் புடைவையை மடிசார் வைத்துக் கட்டிக் கொள்ளத்தான் அரைமணி நேரமாப் போராட்டம் நடக்கிறது. இன்னும் அரைமணி நேரமாவது அந்தப் போராட்டம் நீடிக்கும்னு தோணறது.''

''என்ன லிப்ஸ்டிக்கிங்கறே, ஹை ஹீல் ஷுங்கிறே; அப்புறம் மடிசார் புடைவைங்கிறே...''

''ஆமா, கோயிலுக்குப் போகணுமே!''

''முருகா! முருகா!'' என்றாள் தனபாக்கியம்.

''கரெக்ட்! வடபழனிக்குத்தான் போறதா இருக்கா'' என்றாள் பிங்கி. பிறகு, ''நீங்க யாரு, தெரியலையே? என் பெயரை கரெக்டா எப்படிச் சொன்னீங்க?'' என்று கேட்டாள்.

''தெரியலையா பிங்கி? என் முக ஜாடையைப் பார்த்துக் கூட புரிஞ்சுக்க முடியலையா? உன் பெஸ்ட் ஃபிரெண்ட்...''

''ஆமா, ரோஹிணி!''

''இல்லே இல்லே... பாய் ஃபிரெண்டைச் சொல்றேன்.''

''பாய் ஃபிரெண்டா? எனக்கு ரெண்டு மூணு பாய் ஃப்ரெண்ட்ஸ் இருக்கா, நீ யாரைச் சொல்றே?'' என்றாள் பிங்கி.

''நான் போயிட்டு வரேம்மா! கலோ! வா போகலாம்'' என்று எழுந்து விட்டாள் தனபாக்கியம்.

கலோசனு தாயின் கரத்தைப் பிடித்து இழுத்து மறுபடியும் அமரச் செய்தாள். ''இரும்மா நெருப்புன்னு வாய் வெந்துடாது. இந்தக் காலத்தில் பாய் ஃபிரெண்ட்ஸ் இருக்கிறது ரொம்ப சகஜம். நீ உடனே ஏதாவது தத்துப் பித்தென்று முடிவு கட்டி விடாதே'' என்றாள்.

இதற்குள் நடுத்தர வயதுள்ள, இளமை குன்றாத பெண்மணி உள்ளேயிருந்து வரவேற்பறைக்கு வந்தாள். புடைவையை அரை குறையாகச் சுற்றிக் கொண்டும் இடுப்பில் பிடித்துக் கொண்டும் வந்த அவளைப் பார்த்த போது பொங்கிய சிரிப்பைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டார்கள், கலோவும் தனபாக்கியமும்.

''பிங்கி! இந்த மடிசார்க்கட்டு சரியாகவே வரமாட்டேங்குதே? நான் என்ன பண்ணுவேன்? எப்படிக் கோயிலுக்குப் போவேன்? மிஸஸ் மாலினி கிட்டே மடிசார் வைத்துப் புடைவை கட்டிண்டு வரதாச் சொல்லித் தொலைச்சுட்டேன்; என் மானம் கப்பலேறிடும் போலிருக்கே'' என்று படபடத்தாள்.

''நீங்க கவலைப்படாதீங்க; நான் உதவி பண்ணறேன்'' என்றாள் தனபாக்கியம்.

''நிஜமாகவா? தாங்க்யூ தாங்க்யூ! ஆனா யாரிடமும் சொல்லக்கூடாது. நானே கட்டிக்கிட்ட மாதிரி இருக்கணும் என்ன?... பத்து வருஷம் இவரோட ஜெனிவாவிலேயே இருந்துட்டேனா? இந்த விஷயமெல்லாம் புரிய மாட்டேங்குது... ஆமா... நீங்க... இங்கே... ஓ! மிஸஸ் வைத்தியலிங்கமா! ஃபோன் பண்ணினது நீங்கதானா?'' என்று லலிதா கேட்டாள்.

''ஆமாம் தனபாக்கியம்தான்'' என்று தாயார் கூறுமுன்னர், கலோ கதவுகளைத் தாளிட்டாள். இரண்டே நிமிஷங்களில் புடைவையைக் கச்சிதமாகக் கட்டிவிட்டு விட்டாள் தனபாக்கியம்.

பிறகு கையோடு கொண்டு வந்திருந்த வெற்றிலைப்பாக்கு, பழம், புஷ்பம், சந்தனம், குங்குமம், கற்கண்டு முதலியன நிரம்பிய தட்டை எடுத்துத் தந்தாள். ''என்னை உங்களுக்குத் தெரியும். இவ என் மகள் கலோசனு. என் மகன் சத்யா பி ஃபார்ம் பாஸ் பண்ணியிருக்கான். தன் அப்பாவுக்கு உதவியாக அகிலி என்டர்பிரைஸஸ் நிறுவனத்திலேயே வேலை பார்க்கிறான். உங்க பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்க விரும்பறான். பிங்கிக்கும் அதிலே இஷ்டம்தான்னு புரிஞ்சுக்கிட்டிருக்கோம். 'எப்போ குழந்தைகள் மனசாலே ஒன்றுபட்டுட்டாங்களோ அப்புறம் தாமதப் படுத்தக்கூடாது; 'போய்ப் பேசிட்டு வந்துடு'ன்னு என் கணவர் சொல்லி அனுப்பினார். நானும் வந்து சொல்லிட்டேன். இனிமே உங்க பதில்தான் பாக்கி. நல்ல பதிலாச் சொல்லுங்க'' என்று மளமளவென்று கொட்டித் தீர்த்தாள்.

''பிங்கி! என்னம்மா இதெல்லாம்?'' என்றாள் லலிதா.

''புரியலையா அம்மா? கல்யாணம் பேச வந்திருக்காங்க!'' என்றாள் பிரமீளா. பிறகு கலோசனுவின் கரங்களைப் பற்றிக் கொண்டு, ''ஏன் கலோ! உன் அண்ணா, அப்பா அம்மாவிடம் என்னைப் பற்றிச் சொன்ன போது ரொம்ப வெட்கப்பட்டாரா? அவர் வெட்கப்பட்டால் பார்க்க ரொம்ப ஸ்வீட்டா இருக்குமே?'' என்றாள்.

ஓமலட்டை

முடிந்தது துணி துவைக்கும் பணி
மலர்ந்தது முத்துப் பல் அணி



வண்ணப் படம் எடுத்தவர்: ஹரீஷ்

''நானே என் கணவரோ உங்களுக்குப் பதில் கூற அவசியமில்லாமல் பிங்கியே பதில் சொல்லிட்டா'' என்ருள் லலிதா. ''அவளுடைய விருப்பம்தான் எங்களுடைய விருப்பம்; அவளுடைய மகிழ்ச்சிதான் எங்களுடைய சந்தோஷம். நாங்க சம்பந்தம் பண்ணிக்கப் போகிற குடும்பமோ மிகவும் உயர்வானது என்பதும் தெரிஞ்சு போச்சு. அப்புறம் என்ன?'' என்ருள் லலிதா.

''தேதி பார்க்க வேண்டியதுதான்'' என்ருள் பிங்கி. ''கல்யாணத்தின் போது நீ மடிசார் வைத்துக் கட்டிக் கொண்டால் போதாது அம்மா; அப்பாவும் பஞ்சக்கச்சம் வைத்து வேட்டி கட்டிக் கொள்ள வேண்டும். மாமியிடம் இப்பவே சொல்லி, மாமாவை அப்பாவுக்கு டிரெய்னிங் கொடுக்க அனுப்பி வைக்கச் சொல்லு!''

நால்வரின் சிரிப்பொலியும் அறையை நிறைத்தது.

அத்தியாயம் 14

அன்று பிற்பகல் காரியாலயத்திலிருந்து ஆனந்துக்கு ஃபோன் செய்தான் சத்யா. ''ஆனந்த்! சாயந்திரம் நீ தனியா இருப்பியா, இல்லே, அந்தப் பிசாசும் பின்னேடு இருக்குமா?'' என்று கேட்டான்.

''யாரு? நித்யாவைக் கேட்கிருயா? அவளை வரவேண்டாம்னு சொல்லிடறேன். நீ வாயேன்.''

''வீட்டுக்கா?''

''நான் வீட்டுக்கு இரவு ஒன்பது மணிக்கு முன்னுல் திரும்பினுல் என் அம்மா மயக்கம் போட்டு விழுந்துடுவா. நான் இங்கே பிஸினஸ் ஹவுஸிலிருந்து பாச்சிலர் அபார்ட்மெண்டுக்குப் போயிடறேன். அங்கே வந்துடு'' என்ருன் ஆனந்த்.

சத்யா அங்கே போய்ச் சேர்ந்தபோது ஏற்கெனவே ஆனந்த் குடலுக்குள் ஒரு டிரிங்க் இறங்கி விட்டிருந்தது.

''என்ன விஷயம் சத்யா! டெல் மீ!'' என்ருன். ''என் தோளைக் கட்டிண்டு ஒரு குரல் அழு. எல்லா மனப்பாரமும் குறைஞ்சுடும்.!''

''நான் சந்தோஷ சமாசாரத்தோடு வந்திருக்கிறேன் ஆனந்த். யாரிடமாவது பேசிச் சொல்லிக்கணும் போலிருந்தது.''

''என்னடா விஷயம்? உன் அப்பா உன்னை எம். டி. ஆக்கிட்டு ரிடையர் ஆகிட்டாரா? அவ்வளவு புத்திசாலித்தனமும் பரந்த மனப்பான்மையும் எப்போ எப்படித் திடீர்னு வந்தது அவருக்கு?''

''அது இப்போதைக்கு நடக்கப்போறதில்லே. நான் சொல்ல வந்தது வேறே. என் லவ் அஃபேர் பற்றிப் பெற்றேரிடம் சொன்னேன். யோகேஷோட மகள்ன்னதும் அசந்து போயிட்டார் என் அப்பா. ஃபோன் பண்ணி டைம் ஃபிக்ஸ் பண்ணிக்கிட்டு, பிங்கியையும் அவள் தாயாரையும் பார்த்துப் பேசிவிட்டு வரப் போனுள் என் அம்மா. வீடு திரும்பியதும் எல்லாம் நல்லபடியா முடிஞ்சுதுன்னு எனக்கு ஆபீஸுக்கு ஃபோன் பண்ணிச் சொன்னு. உன்னுடைய கங்கிராஜுலேஷன்ஸையும் வாங்கிக்கிட்டுப் போகத்தான் வந்தேன்.''



''இந்தக் கட்டுரையை நான்தான் தமிழ் படுத்தினேன்.''

''தமிழை இப்படிப் படுத்தாதீங்க''

— புஷ்ராமலர்

''வெல்டன் மை பாய்! திஸ் கால்ஸ் ஃபார் எ செலிபிரேஷன்'' என்ருன் ஆனந்த். ''யூ மஸ்ட் ஹேவ் எ டிரிங்க்.''

''ஐயய்யோ! வேணும், வேணும்! '' எனருன் சத்யா.

''இத பாரு நீ சொன்னதை நான் பேசாம கேட்டுக்கிட்டேனில்லையா? இப்ப நான் சொல்றதை நீ கேளு!'' என்ற ஆனந்த். ''நித்யா! ஏய், நித்யா! கம் லெட் அஸ் செலிபரேட்'' என்ருன்.

''அடப்பாவி! அவ இங்கே இருக்கமாட்டான்னு பிராமிஸ் பண்ணினியே!''

''சத்தியத்தைக் காப்பாற்றினேனு இல்லையா? நீ வந்தப்போ அவள் இங்கே இருந்தாளா? இல்லையே? அவள் கோபப்பட்டாலும் பரவாயில்லைன்னு பக்கத்து அறையில் மறைஞ்சிருக்கச் செய்தேனு இல்லையா?''

இதற்குள் நித்யா ஒரு சின்ன தள்ளு வண்டியில் விஸ்கி, ஜின், சோடா பாட்டில்கள், கோப்பைகள் முதலியவற்றை அடுக்கி வைத்துத் தள்ளிக் கொண்டு வந்தாள். வறுத்த வேர்க்கடலை முந்திரிப்பருப்பு முதலியனவும் கிண்ணங்களில் இருந்தன.

''ரொம்ப பிகு பண்ணிக்காதேடா!'' என்ருன் ஆனந்த். ''ஏற்கெனவே இரண்டு தரம் டேஸ்ட் பண்ணினவன்தானே நீ! ஆனு இது தப்பு; சாப்பிடக் கூடாதுன்னு இருக்கே. நான் அதைப் பாராட்டறேன். உன் உணர்ச்சிகளை மதிக்கிறேன். உன்னைக் கண்டு பெருமைப்படறேன். ஆனுல் இன்றைக்கு ஒரு ஸ்பெஷல் அக்கேஷன். இல்லையா?''

''என்ன விசேஷம்?'' என்ருள் நித்யா, டிரிங்க்ஸைக் கலந்து ஐஸ் துண்டுகளை மிதக்க விட்டபடியே.

''சத்யா கூடிய சீக்கிரம் தன் சுதந்திரத்தை அடியோடு இழக்கப் போகிருன், பாவம்!'' என்ருன் ஆனந்த். ''அவனுக்குக் கல்யாணமாகப் போகிறது.''

''அப்படியா! கங்கிராட்ஸ்! '' என்ருள் நித்யா. ''சுதந்திரம் இன்னும் நாலு நாளோ, நாற்பது நாளோ — இருக்கிறவரை பூரணமா அனுபவிச்சுடுங்க!''

''அதற்கு நீ அவனுக்கு உதவனும் நித்யா. ஆர் யூ ரெடி?'' என்ருன் ஆனந்த்.

''அஃப் கோர்ஸ்'' என்ருள் நித்யா. டிரிங்க்கைச் சத்தியாவின் கரத்தைப் பற்றி அதில் திணித்து அவன் வாயருகே கொண்டு போனுள், கண் சிமிட்டியபடியே. சத்யாவின் முகம் ஜிவ்வென்று சூடேறிச் சிவந்தது.

அப்புறம் அங்கே தொடர்ந்து நடந்தவை எல்லாம் சத்யாவுக்கு ஏதோ பகற்கனவு போல் தோன்றின. பாட்டில் கவிழ, திரவம் 'ளைக் ளைக்' என்ற ஒலியுடன் விழுவது; சோடா பாட்டில் 'டப்'பென்று திறக்கப் படுவது; கண்ணுடிக் கோப்பைகள் உராயும் போது எழும் 'கிளிங்க் கிளிங்க்' ஓசை இவையெல்லாம் கனவுக் காட்சிக்குப் பின்னணி சங்கீதமாயின. கூடவே ஓர் எண்ணம்: 'நான் ஆனந்துக்கு ஃபோன் பண்ணியே இருக்கக்கூடாது, அவனை நண்பனுகவே கருதியிருக்கக் கூடாது...' வெகு சீக்கிரம் இந்த எண்ணங்களெல்லாம் மறைகிற அளவுக்கு அவனுக்குச் சீரான சிந்தனைத் திறனே இல்லாது போய்விட்டது. 'இன்று ஒருநாள் தானே? இன்று மட்டும்தானே?' என்று அவன் திரும்பத் திரும்பக் கேட்டான், பரிதாபமாக.

ஆனந்தின் உற்சாக மூட்டும் சொற்களும் நித்யாவின் இன்ப லாகிரியில் ஆழ்த்தும் கொஞ்சு மொழிகளும் அவனை மதுவைவிட அதிகமாக மயக்கின. அந்த மயக்கத்தில் ஆனந்தினுடைய வக்கிரமான இன்பம் காணும் விகாரமான உள்ளம் கூட அவனுக்குப் புலனுகவில்லை. ஆனந்தின் கரத்திலிருந்த விலை உயர்ந்த காமிரா, படங்கள் எடுத்துக் கொண்டிருந்ததை அவன் காணத்தான் செய்தான். ஆனுல் 'ஏன்? எதற்கு?' என்று கேட்கவோ, 'வேண்டாம்' என்று மறுக்கவோ தெம்பில்லாத ஒரு பலவீன உலகத்தில் அவன் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தான். ஒருகணம் அந்த ஊஞ்சல் அவனை வான்வெளிக்கு அழைத்துப் போய் நட்சத்திரக் குவியல்களுக்கு இடையில் வீழ்த்தியது; அடுத்த விநாடி அவனைச் சந்திர மண்டலத்தில் இறக்கியது; அடுத்து வேறு ஒரு திக்கில் பாய்ந்து வானவில்லின் வர்ண ஜாலத்துக்கிடையே வளையவரச் செய்தது; மீண்டும் மற்ருெரு திசையில் அவனைச் சுமந்து போய்த் தென்றலின் இனிமையை அனுபவிக்கச் செய்தது. அனைத்துக்கும் பின் அவனை ஆழ்ந்த இருளில் ஆழ்த்தியது.

ஆனந்த் சிரித்தான்: ''இவனுக்கு மயக்கம் தெளியு முன்னர் இவனை என் காரில் ஏற்றிக் கொண்டுபோய் இவன் வீட்டில் விட்டுவிட்டு வரவேண்டும்'' என்ருன்.

''மயக்கம் தெளிந்து அவனே போய்க் கொள்ளட்டுமே'' என்ருள் நித்யா, தன் ஆடைகளைச் சரி செய்தவாறே.

''அதிலென்ன பிரயோஜனம்?'' என்று கேட்டான் ஆனந்த். ''குடிகார மகனைப் பார்த்துத் திடுக்கிடும் போது அப்பன் முகம் பேயறைந்தது மாதிரி ஆவதை நான் பார்க்க வேண்டும், நித்யா! அதில்தான் சுவாரஸ்யமே இருக்கிறது! நாம் கெடுவதில் இன்பத்தைவிடத் துன்பம்தான் அதிகம். ஆனுல் பிறரைக் கெடுப்பதில் இருக்கிற இன்பம் இருக்கிறதே, அதிலுள்ள ரசனையே அலாதிதான்!''

''ஆக மொத்தம் இவன் கல்யாணத்தை நிறுத்திடுவீங்க!''

''அதுமட்டுமில்லை நித்யா, என் திட்டம் பலிச்சதுன்னு ஒரே சமயத்தில் மூன்று குடும்பங்கள் துன்பத்திலே ஆழ்ந்து போகும். இவன் தங்கை கலோசனு ஒரு கிறிஸ்துவனைக் காதலிக்கிரு. பேரு தீபக். இவன் கம்பெனியிலேயே வேலைசெய்யற அருள்ராஜோட மகன். கால் காசு பெருத சாதாரணப் பயல். இவனே என்னிடம் பலமுறை சொல்லி வருத்தப்பட்டிருக்கான். அருள்ராஜ் குடும்பம், வைத்தியலிங்கம் குடும்பம், யோகேஷ் குடும்பம் — அமைதியும் நிம்மதியும் நிலவுகிற மூன்று குடும்பங்களிலும் இனிப் புயல் வீசப் போகிறது!''

''அதற்கு நான் உதவியிருக்கேன். எனக்குச் சேர வேண்டியதை மறந்துடாதீங்க'' என்ருள் நித்யா.

''எண்ணி ரெடியா வைச்சிருக்கேனே'' என்று இருபது நூறு ரூபாய் நோட்டுக்கள் அடங்கிய ஒரு கத்தையை அவள் கரத்தில் வைத்து மூடினுன் ஆனந்த். (தொடரும்)

திரிசூலம்

"நான் குடித்த காப்பி ரொம்ப உசத்தியாக்கும்!"

"எப்படி?"

"எட்டாவது மாடியிலே இருக்கும் நண்பன் இல்லம். அங்கு அமர்ந்தல்லவா காப்பி குடிச்சிருக்கேன்!"

இப்படத்தில் காதல் காட்சிகள், டிஷ்யூம் டிஷ்யூம் சண்டைகள் அனைத்தும் இமயமலைச் சிகரத்தில் அழகு கொலுவிருக்கும் காஷ்மீரப் பகுதியிலே எடுக்கப்பட்டுள்ளன. எனவே நடிகர் திலகத்தின் நடிப்பு இமாலயச் சிகரங்களைத் தொட்டு விட்டது என்று கூறலாம் தானே.

"சங்கர் குரு" என்று கன்னடத்தில் ஏற்கெனவே எடுக்கப்பட்டுச் சக்கைப்போடு போட்ட படமாம் இந்தத் திரிசூலம். தலைப்பு ஹிந்தியில் வந்த 'திரிசூல்' என்ற படத்தின் பாதிப்பாக இருக்கலாம்.

தமிழ்ப் படமும் வசூலில் வெற்றி தேடித் தரட்டும். நமக்கு ஆட்சேபணை இல்லை.

திரிசூலம் என்பதால் சிவாஜிக்கு மூன்று வேஷம். இரண்டு மூனை மழுங்கல். மூன்றாவது மூனை கூர்மைதான். ஆனால் குத்தவில்லை, கிசு கிசு மூட்டுகிறது. நகைச்சுவைப் பாத்திரத்தில் சிறக்கிறார்.


. பிரிக்க முடியாத அளவு சிக்கல் விழுந்துபோன கதை கத்தரித்து முடிச்சுப் போட்டிருக்கிறார்கள். பல வீணமான அஸ்திவாரம்.

சென்ஸார் கெடுபிடி ரொம்ப இருந்ததாக சிவாஜியே கூறி யிருக்கிறார். போதவில்லை என்று சில காட்சிகள் சொல்கின்றன.

சிவாஜியின் 200வது படமாம். அவரை வாழ்த்தி விடுகிறோம், படத்தை அல்ல; ஆளைவிடுங்கள்!

— பி. எஸ். எம்.





மனம் கவர்ந்த

சென்ற ஆண்டு ஜூன் மாதத்தில் மலேஷியாவில் பிரபல வார ஏடாகத் திகழும் 'வானம்பாடி'யின் விசேஷ நிருபர் திரு. சுந்தர் என்னைச் சந்தித்து அவர்களுக்கு ஒரு தொடர்கதை எழுதித் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்ட போதோ, வெளிநாட்டில் இருக்கும் தமிழர்களின் ஆர்வத்துக்குச் சான்றாகத் திகழும் இப்பத்திரிகைக்குக் கண்டிப்பாய் என்னால் ஆன உதவியைச் செய்ய வேண்டும் என்ற உற்சாகத்தோடு நான் தொடர்கதை தர ஒப்புக் கொண்ட போதோ, பிற்பாடு அந்தக் கதை வானம்பாடியில் தொடராக வரத் தொடங்கியபோதோ, இந்தக் கதை வெகு சீக்கிரத்திலேயே என்னையும், என் கணவர் திரு சந்திரசேகரனையும் மலேஷியாவுக்கு இழுக்கும் காந்தமாக இருக்கப் போகிறது என்று நிஜமாக நான் எண்ணவில்லை.

''வானம்பாடியின் முதலாவது ஆண்டு விழா வருகிறது; இதற்கு எங்கள் சிறப்பு விருந்தினராக உங்களையும் உங்கள் கணவரையும் அழைப்பதில் நாங்கள் பெருமை கொள்கிறோம்; அவசியம் எங்கள் அழைப்பை ஏற்றுக் கொண்டு, விழாவில் கலந்து கொள்ள வேண்டும்...'' என்ற வாசகங்களோடு கூடிய கடிதம் என் கையில் கொட்டுக் கொட்டென்று விழித்தது.

மலேஷியாவுக்கா? நானா? சிறப்பு விருந்தினராகவா? அதற்கு எனக்குத் தகுதி உண்டா?

ஒரு நாட்டுக்கு உல்லாசப் பயணியாகப் போவது எப்படி? ஒரு பத்திரிகையின் அழைப்பை ஏற்றுக் கொள்ளும் பொறுப்பு மிக்க எழுத்தாளராகச் செல்வது எப்படி?

ஏதோ நாம் பெரிதாகச் சாதித்து விட்டதாக நம்பிக் கொணடு ஒரு பத்திரிகை அழைத்திருப்பதனால், அவர்கள் எதிர்பார்ப்புகளுக்குத் தக்கபடி நடந்து கொள்ள வேண்டும். தமிழ் நாட்டின் பிரதிநிதியாகக் கூட்டங்களில் பேச வேண்டும், கருத்து பரிமாறல்களைச் செய்யும் போது அந்தப் பொறுப்பை உணர்ந்து பேச வேண்டும். இப்படி எத்தனை இல்லை?


✖ சுபாங்கிலுள்ள சர்வதேச விமான நிலையம்

✖ கோலாலம்பூர் விமான நிலையத்தில் வரவேற்பு

எதிர்ப்பக்கம் :

✖ கோலாலம்பூர் நகர வீதி

✖ அபாட் செஞ்சுரி ஹோட்டல் அறையில்



மலேஷியா



தனியாய் உட்கார்ந்து யோசனை பண்ணியதில் நான் கொஞ்சம் பயந்து போனேன்.

மலேஷியாவில் வாழும் தமிழர்களின் தமிழ் ஆர்வம் உலகப் பிரசித்தம். தொடர்ந்து இலக்கியக் கூட்டங்களில் எனக்குப் பேசத் தெரியுமா? பண்டைத் தமிழ் இலக்கியங்களைப்பற்றி எனக்கு என்ன தெரியும்?

சிந்தித்தேன்.

போய் இறங்ினதும் வானம்பாடி ஆசிரியரிடம் என்னைப் பற்றிச் சொல்லி விட்டால் என்ன? நான் பள்ளியிலும், கல்லூரியிலும் ஸம்ஸ்கிருதத்தைப் பாடமாகப் பயின்றவள், அதனால் இலக்கணத் தமிழை முறையாய்ப் படிக்காதவள். என் உணர்ச்சிகளை எழுத்தில் வடிக்கிறேன்; வாசகர்கள் அதை வரவேற்கிறார்கள். என் எழுத்துக்களைப் பற்றியோ, அல்லது இன்றைய எழுத்துலகத்தைப் பற்றியோ கேளுங்கள். எனக்குத் தெரிந்தவரை சொல்கிறேன். மற்றபடி என்னிடம் ஏதும் எதிர்பார்க்காதீர்கள் — என்று வெளிப்படையாய்ச் சொல்லி விட்டால்?

இந்த முடிவுக்கு வந்ததும் எனக்கு ''அப்பாடி'' என்று இருந்தது. நான் நானாக இருக்கலாம் என்ற நிம்மதி.

நவம்பர் ஒன்பது அன்று பிற்பகல் சரியாய் இரண்டு மணிக்கு சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் விமானத்தில் ஏறினோம்.

குடிக்கும் பழக்கம் உள்ளவர்களுக்குச் சிங்கப்பூர் ஏர்லைன்ஸ், சவாரி ஒரு தாற்காலிக சொர்க்கமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஷாம்பெயின் முதல் பியர் வரை எல்லா வற்றிலும் காலணா செலவு பண்ணாமல் மூழ்கி எழலாம். முகம் சுளிக்காமல் கேட்கும் பானத்தை ஓடி ஓடித் தருகிறார்கள். இதனால் காணாததைக் கண்ட மாதிரி சிலர் நடந்து கொண்டு தவிப்பதும் இருக்கத்தான் செய்கிறது. ஓர் ஆண், வயசு ஐம்பது இருக்கும். சாப்பாடு வேண்டாம் என்று மறுத்துவிட்டு ஏகமாய்க் குடித்து விட்டதில், நிதானம் போய் விட்டது. அந்த ஆளை அடக்கக் காப்டனின் வரவு தேவைப்பட்டதென்றால் புரிந்து கொள்ளுங்களேன்.

சிங்கப்பூரில் இறங்கி முப்பது நிமிஷங்களுக்குள் கோலாலம்பூர் செல்லும் விமானத்தை நாங்கள் பிடிக்க வேண்டி இருந்ததால், இந்தப்பக்கம் அந்தப் பக்கம் பராக்குப் பார்க்காமல் காலில் வெந்நீரைக் கொட்டிக் கொண்டு தொடர்பு விமானத்தைப் பிடிக்க ஓடினோம். இந்த ஓட்டத்திலும், சிங்கப்பூர் விமான நிலயத்தில் காணப் பட்ட பஸ்கள் என் வாயைப்

சிவசங்கரி

பிளக்க வைத்தது என்னவோ உண்மை தான். விமானத்திலிருந்து கட்டிடத் துக்கு அழைத்துச் செல்லும் நியோ பிளான் ராட்சஸ பஸ்களைத்தான் சொல் கிறேன். பதினைந்தடியோ அதற்கு மேலோ அகலம், ஒரு ஹால் மாதிரி. உள்ளே பல வரிசைகளில் பயணிகள் நின்று கொண்ட போது ஒரு நகரும் கூடத்தில் பயணம் செய் கின்ற அனுபவமே எனக்குத் தோன்றியது.

என் பக்கத்தில் ஒரு சைனுக்காரி நின்றிருந் தாள். இருபது வயசிருந்தால் அதிகம். அவள் தலை அலங்காரம் ரொம்ப விநோதமாக இருந்தது. முன் மண்டையில் கிராப்பு.; நடு மண்டையில் உச்சிக் குடுமி போல் சில கத்தை முடிகள்; பின் மண்டையில் மறுபடி யும் கிராப்பு. உங்களால் கற்பனை பண்ண முடி கிறதா? அவளையும் அவளுக்குப் பொருந் தாத அலங்காரத்தையும் பார்த்த உடனே எங்களுக்குச் சிரிப்பு அடக்கமாட்டாமல் எழுந்துவிட்டது. முகத்தை வேறு பக்கமாய்த் திருப்பிக் கொண்டோம். எங்களைப் போலவே அவளின் தோற்றம் வேறு சிலருக்கும் சிரிப்பை உண்டாக்கியதை உணர்ந்த போது என்னால் வாய்விட்டுச் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

சிங்கப்பூரிலிருந்து கோலாலம்பூருக்குப் பயணமாகும் நேரம் உத்தேசமாய் அரை மணி. ஏறி உட்கார்ந்து ஒரு பானம் குடித்து, ஸாண்ட்விச் தின்று, வாயைத் துடைப்ப தற்குள் கோலாலம்பூர் வந்து விட்டது.

விமானத்தை விட்டு இறங்கும்போது எனக்குள் இலேசாகப் படபடப்பு.

இமிக்ரேஷன், கஸ்டம்ஸ் முடிந்தது.

திரு. சுந்தர் வானம்பாடி ஆசிரியக் குழு வினரின் புகைப்படங்களை எங்களுக்குக் காட்டி இருந்ததால், வெளியில் நின்ற மனிதர் களில் தெரிந்த முகங்கள் இருக்கின்றனவா என்று பார்த்தபடி நடந்தோம்.

அடுத்த பதினைந்து நிமிஷங்களில் நடந்த வற்றைத் தெளிவாக எழுத முயற்சி செய் கிறேன். ஆனால் வார்த்தைகள் என்னை ஏமாற்றி வேடிக்கை பார்க்கின்றன.

ஓடிவந்து பெட்டிகளைச் சிலர் வாங்கிக் கொண்டனர், 'வணக்கம், வாருங்கள். வாருங்கள்' என்று சுற்றிலும் குரல்கள், ஜில்லென்று கழுத்தில் விழுந்த ரோஜா மாலைகள், — ஒன்று, இரண்டு என்று நிமி ஷத்தில் கழுத்திலிருந்து நெற்றி விளிம்பு வரை மறைத்த மாலைகள்.

''நான்தான் ஆதி. குமணன், ஆசிரியர் வானம்பாடி; இவர் அப்துல் காதர் வானம் பாடி பிரசுரகர்த்தர், இவர் வானம்பாடி உதவி ஆசிரியர் ராஜகுமாரன், அக்னி, பாலு, பிரான்ஸிஸ்... இவர்கள் எல்லாரும் வானம்பாடியைச் சேர்ந்தவர்கள். இவர் துரைராஜ். மலேசிய தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர்; உதயம் பத்திரிகை ஆசிரி யரும் கூட... இவர்...''

புகைப்படக் காரர்கள் ஒருகணம் சோம்பி நிற்க மறுத்தார்கள். 'பளிச் பளிச்' சென்ற பிளாஷ் வெளிச்சங்கள்.

இரவு பத்து மணிக்குப் பெருங்கூட்ட மாய் ஆண்கள் மட்டுமல்லாது, பெண்களும், குழந்தைகளும் சேர்ந்து அளித்த வரவேற்பு நெஞ்சைப் பூரிக்கச் செய்வதாக இருந்தது.

வரவேற்பு முடிந்து ஹோட்டலுக்குப் புறப்பட்டோம்.

அபாட் சென்கரி என்ற நவீன ஹோட் டலில் எங்களை இறக்கி இருந்தார்கள். நம் ஊர் 'சோழா' தினுசில் இருந்த ஹோட்டல். ரொம்பச் சௌகரியமாய் இருந்தது.

''களைப்பாக இருப்பீர்கள். ஆனாலும் சில கேள்விகளுக்குப் பதில் அளிக்க இயலுமா? நாளை வானம்பாடியில் வெளியிடத் தேவைப் படுகிறது.''

குமணன் தான் ஒரு பொறுப்பான ஆசிரியர் என்பதை நிரூபித்து விட்டார்.

பேட்டி முடிந்தது. ''ஓய்வு எடுத்துக் கொள் ளுங்கள். நாளைக்காலை ஒன்பது மணிக்குச் சந்திக்கிறோம்'' என்று அனைவரும் நடு ஜாமத்தைத் தாண்டின பிறகு புறப்பட்டுப் போனார்கள்.

பயணம் தந்த களைப்புக்கு ஏ. ஸி. அறையும் மெத்தென்ற படுக்கையும் இதமாக இருக்க, நிம்மதியாய் உறங்கி எழுந்தோம்.

மறுநாள் காலை திரு துரைராஜும், கும ணனும் சொன்னபடி வந்து சேர்ந்தார்கள்.

இரவு முழுவதும் விடிய விடிய அச்ச கத்தில் அமர்ந்து, அன்றைய வானம் பாடியைத் தயாராக்கி உடன் எடுத்து வந் திருந்தார் குமணன்.

முதல் பக்கத்தில் எங்கள் புகைப்படம். கழுத்து நிறைய மாலைகளும், வாய் நிறைய சிரிப்புமாய்.

''எங்கள் கல்யாண நாள் அன்று எடுத்த படம் மாதிரி இருக்கிறது; அப்போது சின்ன வர்கள், இப்போது வயசானவர்கள், அதுதான் வித்தியாசம்'' என்றேன் சிரித்துக்கொண்டே.

உள்ளே முதல்நாள் எடுத்த பேட்டியோடு, 'சிவசங்கரி கலந்து கொள்ளும் முக்கிய நிகழ்ச்சிகள்' என்று கட்டம் கட்டிப் பத்துநாள் நிகழ்ச்சிகளை வெளியிட்டிருந்தார்கள்.

ஒரு மந்திரிக்கு இருப்பது போல் ஒவ்வொரு நாளும் பல கூட்டங்கள், நிகழ்ச்சிகள்.

கிழே ரெஸ்டாரண்டுக்குப் போய்ச் சிற் றுண்டி சாப்பிட்டுக் கொண்டே பேசினோம் —

''இன்றைக்கு உங்களுக்கு அதிக நிகழ்ச்சி களோ, அலைச்சலோ இல்லை. பகல் இரண்டு மணிக்கு டி. வி., ரேடியோ ஒலிப்பதிவுகள் உள்ளன. அவற்றை முடித்து விட்டு நாலு மணிக்குத் திரும்பி விடலாம்...'' குமணன் சொன்னார்.

தும்புவான் மிங்கு என்பது மலேஷியாவின் பிரபலமான தமிழ் டி. வி. நிகழ்ச்சிகளில் ஒன்று. சனி மாலை ஒலி பரப்பாகும் அதில் முக்கிய நபர்களின் பேட்டிகள் வெளியாகு மாம். அன்று வெள்ளி. ஒளிப்பதிவு செய்வதை மறுநாளே ஒலிபரப்ப என்றிருந்ததால் இத் தனை அவசரம்.

நேர்மைக் கூக்குரலையில் முறைத்துக் கொள்ளக் கூடாது.
முந்தைகளே — கார்ட்டூன் கவிதை — பூண்டி

ஒன்னரை மணி சுமாருக்கு வானம்பாடி அலுவலகத்துக்குச் சென்றோம். அங்கே டிபன் காரியரில் சாப்பாடும், வாழை இலைகளும் எங்களுக்காகக் காத்திருந்தன.

கோவில் குருக்கள் ஒருவர் வீட்டிலிருந்து எங்களுக்குச் சாப்பாடு கொண்டுவர ஏற்பாடு பண்ணி இருக்கிறார்களாம். ''ஏன் குமணன் இப்படி ஒரு ஏற்பாடு?'' என்றேன்.

அவர் தயங்கினார். பிற்பாடு புரிந்து கொண்டேன்; நாங்கள் பிராமணர்கள் என்பதால் மடி, ஆசாரம் பார்க்கலாமோ என்று பயந்து இந்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று.

''நாங்கள் மலேஷியாவை அதன் இயல்பான சூழ்நிலையில் பார்த்து அனுபவிக்க ஆசைப்படுகிறோம். ஆங்காங்கு கிடைக்கும் உணவை, அது சாதமோ, தோசையோ, ரொட்டி வெண்ணெயோ கவலை இல்லை, சாப்பிடுவதில்தான் எங்களுக்கு விருப்பம்'' என்றேன்.

''அப்படியானால் அப்துல்காதர் வீட்டுக்குச் சாப்பிட வருவீர்களா?'' —

''வந்தால் என்ன? ஊரில் எங்கள் வீட்டுக்கு எல்லாரும் வந்து உணவருந்துவார்கள், நாங்களும் எங்கும் போவோம் — இதற்கு என்ன தவறு?'' —

நாங்கள் இப்படி இருப்போம் என்று எதிர் பார்க்காத குமணனுக்கு, என் பேச்சு பெரும் அவஸ்தை ஒன்றை விலக்கியது என்பது எனக்குத் தெளிவாகப் புரிந்தது —

அடுத்த வாரம் : வானம்பாடியின் கதை: பத்து குகைகள்: சாப்பாட்டுக் கடை: நிஜுக நிஜுசாய்த் தன்னி !

ஐந்தில் கற்று ஆறில் அரங்கேறுவதா?

ராகம், தாளம், பாவம் இவை சேர்ந்ததுதான் பரதநாட்டியம் என்று பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது ரொம்பவும் தவறான கருத்து. இவை மூன்றும்தான் பரத நாட்டியம் என்றால் உலகின் எல்லா நடனங்களுமே பரத நாட்டியம்தான். எழுதி வைக்கப்பட்டிருக்கும் நாட்டிய சாஸ்திரத்தின்படி ஆடப்படுவதுதான் பரத நாட்டியம்.

தலையை அசைப்பதில் மட்டும் பதினொன்று வகைகள் இருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் தனித்தனி அர்த்தம் உண்டு.

நவரசம் என்று நாம் ஒன்பது ரசங்களைக் குறிப்பிடுகிறோம், ஆனால் பரத சாஸ்திரத்தில் எட்டே எட்டுதான் சொல்லப்படுகிறது. சாந்தம் அதில் சேர்க்கப்படவில்லை.

அபிநயத்தில் ஆயிரம் உணர்ச்சிகளை வெளிக்காட்ட முடியும். நாட்டியம் ஆடுபவரின் கை அசைவுகளைத் தொடர்ந்து அவரின் கண்பார்வை செல்ல வேண்டும். கூடவே அவரின் மனமும், உணர்வுகளும் அபிநயத்தோடு ஒன்றிக் கலக்க வேண்டும். இல்லாவிட்டால் சாவி கொடுக்கப்பட்ட பொம்மை அசைவது போல் இருக்கும்.

என் குரு வழுவூர் ராமையா பிள்ளை போல முகத்தில் பாவங்களைக் காட்டுபவர்கள் இருக்க முடியுமா என்பது சந்தேகமே. அவரது அந்தத் திறமையில் பாதிகூட இன்னும் எனக்கு வரவில்லை என்றே கருதுகிறேன். அப்போதெல்லாம் ஆண் நட்டுவனார்கள் ஆடிக் காண்பித்துத்தான் தமது சிஷ்யைகளுக்குக் கற்றுக் கொடுத்தார்கள். அந்த ஸீரியஸ்னஸ் இப்போது குறைந்து வருகிறது.



ஐந்து வயதில் கற்றுக் கொள்ள ஆரம்பித்தால் பன்னிரண்டு பதின்மூன்று வயதில் அரங்கேற்றம் செய்வது சரியாக இருக்கும். அவசரமாய்க் கற்றுக்கொண்டு ஆறு மாதத்தில் அரங்கேறுவதெல்லாம் சரிப்பட்டுவராது.

இப்போது பரத நாட்டிய நிகழ்ச்சிகள் ஹோட்டலில்கூட நடத்தப்படுவது பற்றிப் பலர் அபிப்பிராயம் கேட்கிறார்கள். அந்தக் காலத்தில் பெரிய மனிதர்களுக்காக அரசவையில் நடனமணிகள் ஆடினார்கள். இந்தக் கால பெரிய மனிதர்களுக்காக ஹோட்டலில் ஆடுகிறார்கள். அவ்வளவுதான்.

ஒரு முறை ஜெர்மனியில் நடனமாடிக் கொண்டிருந்தேன். ஒவ்வொரு நடனத்துக்கு முன்பும் அதை விளக்கி ஆங்கிலத்தில் எழுதி என் மொழிபெயர்ப்பாளரிடம் தந்து அவர்கள் மொழியில் சொல்ல ஏற்பாடு. நாயகி தன் சகியைத் தலைவனிடம் தூது அனுப்புகிறாள். இதை எழுதியிருந்தேன். அந்த ஜெர்மன் பெண்மணி என்னிடம் வந்தாள். ''நீங்கள் நன்றாக உணர்ந்துதான் இதை எழுதியிருக்கிறீர்களா?'' என்றாள். ''ஏன் என்ன சந்தேகம்?'' என்று கேட்டேன் நான். ''தன் நாயகனிடம் தன் தோழியைப் பேசச் சொல்லி அனுப்புகிறாள் என்றிருக்கிறதே!'' என்று அவள் மீண்டும் வினவினாள். ''ஆம்! அதுதான் முறை. அப்படியே சொல்லுங்கள்'' என்று நான் பதில் சொன்னதும் அவள் தோளைக் குலுக்கியவாறே, ''அதென்னமோ, அந்த ஹீரோயின் நிலையில் நான் இருந்தால் என் தோழியைச் சத்தியமாக நம்பி அனுப்ப மாட்டேன்'' என்றாளே பார்க்கலாம்!

புதுமையை நாம் வரவேற்றே தீரவேண்டும். ஆனால் அதே சமயம் புதிதாக எதையாவது செய்ய வேண்டும் என்பதற்காக எதையாவது செய்தால் டிக்ஷனரியை வைத்துக் கவிதை எழுதியது போலிருக்கும்.

பத்மா சுப்ரமண்யம் LYMA கூட்டத்தில் பேசியது

தொகுப்பு: ''ஆர்.கே.''


ராஜுவின் வலிமை
ராஜுவும் சங்கரும் பள்ளிக்குச் செல்கிறார்கள்
வேகமாக நடடா, பேடிப்பயலே
ராஜுவை சங்கர் துன்புறுத்தி மிரட்டுகிறான்
ஆ! வலிக்கிறது போதும் நிறுத்து சங்கர்
வழியில் களைப்பாறுகிறார்கள்
என் நியூட்ராமுலை மறக்கக்கூடாது
பிறகு ராஜுவைத் தள்ளும்போது சங்கருக்குக் கால் வழுக்கி விடுகிறது
ஜாக்கிரதை!
ஆ...! காப்பாற்று!
பிடியை விடாதே. உன்னைத் தூக்கி விடுகிறேன்
சங்கருக்கு அவமானத்தினால் முகம் குன்றி விடுகிறது
தாங்க்ஸ். உனக்கு நிறைய பலமிருக்கே.
கொஞ்சம் நியூட்ராமுல் குடி.
வழக்கமாக நியூட்ராமுல் குடிப்பதில் ராஜுவுக்குப் பேரானந்தம். நியூட்ராமுல் அமுல் வழங்கும் அருஞ்சுவையுள்ள ஆரோக்கிய பானம். வளமையான, ஆடை நிரம்பிய அமுல் பால், அசல் கோகோ, மால்ட் மற்றும் சர்க்கரையின், போஷாக்கு தரும் கலவை நியூட்ராமுல்.
ஆச்சரியம் என்னவெனில், நியூட்ராமுல் விலைமலிவானது! 500 கி. நியூட்ராமுல் விலை ரு. 12.21, உள்ளூர் வரிகள், மத்திய விற்பனை வரி மற்றும் போக்குவரத்துக் கட்டணம் தனி. ராஜுவும் இப்பொழுது சங்கரும் நாடெங்கும் ஆயிரக்கணக்கானவர்களும் தினமும் ஆசையுடன் நியூட்ராமுல் குடிக்கிறார்கள்.
அமுலின்
நியூட்ராமுல்
"ஒவ்வொரு கோப்பையும் உங்கள் ஆரோக்கியத்தை உயர்த்துகிறது
daCunha N 3 TAM



ராஜாஜி வாழ்க்கை வரலாறு

ராஜ்மோகன் காந்தி

1924ல் காந்தி, வைக்கம் போருமாறு வி. ஆரைக் கேட்டுக் கொண்டிருந்தார். ''சத்தியாகிரஹம் செய்து கைதாக வேண்டும் என்ற அவசியமில்லை; இயக்கத்தை ஒழுங்குபடுத்தினால் போதும்'' என்று சொல்லியிருந்தார் 1 வி. ஆர். போனார். தொண்டர்களின் விடாமுயற்சி வியப்பளித்ததென்றால், அதிகாரிகளின் பிடிவாதமும் அதே அளவில் இருந்தது.

ஆசிரமத்துக்கு காந்தி வந்து போன சிறிது காலத்துக்கெல்லாம் அதிர்ஷ்டவசமாக வி. ஆர்., திருவிதாங்கூர் திவான் ராகவையாவைச் சந்திக்க நேர்ந்தது. ஓர் உத்தரவின் மூலம் சாலைகளைத் தீண்டாதாருக்குத் திறந்து விட வேண்டும் என்றே திவான் விரும்பினார். ஆனால் அவர் திவான் பதவியிலிருந்து விலகிக் கொள்வதாய் இருந்தார். காரியங்களைத் துரிதப்படுத்தி அவருடைய பதவிக் காலத்திலேயே சீர்திருத்தத்தைச் செய்து முடிக்க இயன்றவரை முயலுமாறு வி. ஆர். அவரை வற்புறுத்தினார். 2

முழு வெற்றி 1936ல்தான் கிடைத்தது. அப்போதுதான் கோவிலுக்குள்ளும் தீண்டாதார் செல்ல அனுமதி கிடைத்தது. இப்போது, 1925 ஏப்ரலில் கோயிலின் மூன்று பக்கங்களிலும் இருந்த சாலைகள் திறந்து விடப்பட்டன.

இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கான சகுனங்கள் சுபமானதாக இல்லை. அந்த ஆண்டின் ஆரம்பத்தில் பஞ்சாபில் கோஹாட் என்னுமிடத்தில் இந்து – முஸ்லீம் கலவரம் தோன்றிச் சிறுபான்மையினரான ஹிந்துக்கள் தப்பி ஓட வேண்டியதிலை ஏற்பட்டிருந்தது. காந்தியும் ஷௌகத் அலியும் நிலைமையை ஆராயச் சென்றனர்.

நடந்தது என்ன என்று அலசிப் பார்த்த போது இருவரின் முடிவுகளும் வெவ்வேறாக இருந்தன. மார்ச் 26ம் தேதி காந்தியாலும் ஷௌகத் அலியாலும் எழுதப்பட்ட தனித் தனி அறிக்கைகள் யங் இந்தியாவில் பிரசுரமாயின. மகாத்மா – அலி சகோதரர்களிடையே பிளவு ஏற்படத் தொடங்கியிருந்தது.

ஜூன் மாதம் ஒரு பெருந்துயர் ஏற்பட்டது. டார்ஜிலிங்கில் தாஸ் காலமானார். அவர் சிலகாலமாகவே நோய் வாய்ப்பட்டிருந்தார். எனினும் முடிவு எதிர்பாராதவிதமாகத் திடீரென்று ஏற்பட்டு விட்டது. இதற்கு முந்தைய மாதம்தான் சுயராஜ்யக் கட்சித் தலைவரான தாஸ் பிரிட்டிஷாருக்கு ஒரு யோசனை தெரிவித்திருந்தார்:

''உங்களுக்கும் எங்களுக்கும் கௌரவமானதான ஓர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இன்றைக்கே சமாதானம் ஏற்படலாம்'' என்று அவர் பிரிட்டிஷாரிடம் கூறியிருந்தார். தாஸின் திட்டப்படி சுயராஜ்யக்கட்சி அரசுடன் ஒத்துழைக்கும். இதற்குப் பதிலாக எல்லா அரசியல் கைதிகளையும் விடுவித்து விடவேண்டும். அத்துடன் காமன்வெல்த்துக்கு உட்பட்ட சுயராஜ்யத்தை இந்தியாவுக்குக் கூடிய விரைவில் பிரிட்டிஷார் வழங்க வேண்டும். அதற்கு இப்போதே போதிய அளவு அஸ்திவாரமிட வேண்டும் 3.

தமது மரணத்துக்குச் சில காலம் முன்பாகத்தான் தாஸ் மகாத்மாவிடம் பேசியிருந்தார். வங்கத்தில் கதர் பிரசாரத்துக்காக வந்திருந்தார் மகாத்மா. அவரிடம், பிரிட்டிஷ் அயல் விவகார மந்திரி பிர்கென்ஹெட் பிரபுவிடமிருந்து தாம் நிறைய எதிர்பார்ப்பதாக தாஸ் சொன்னார். ஆனால் மகாத்மாவுக்கு இதில் நம்பிக்கைபிறக்கவில்லை.

தாஸின் மரணத்துக்குப் பிறகு மகாத்மா விடுத்த இரங்கல் அறிக்கையில் இதைக் குறிப்பிட்டுச் சொன்னார்: ''தாஸ் எவ்வளவு பெரியவர் என்பதை மட்டுமல்ல, தாஸ் எவ்வளவு நல்லவர் என்பதையும் இது எனக்கு உணர்த்தியது.''4 ஜூலை பத்தாம் தேதி பிர்கென்ஹெட்டின் பதில் வந்தது. அது சிறிதும் கவர்ச்சிகரமாக இருக்கவில்லை. இது மகாத்மா எதிர்பார்த்ததுதானே!

நீ ஒரு முட்டாள் என்று
மற்றவர்கள் நினைத்தாலும்
பரவாயில்லை என்று
சில சமயங்களில்
வாயை மூடிக்கொண்டு
இருப்பதே நல்லது;
வாயைத் திறந்து
அவர்கள் நினைத்தது சரி
என்று நிரூபிப்பதைக்
காட்டிலும்.
– ஜேம்ஸ் சின்க்ளேர்
– பூண்டி

1. காந்தி வி. ஆருக்கு எழுதியது, 12-2-24, SN 10279, ராஜ்காட் சங்கிரஹாலயம்
2. வி. ஆர். மகாதேவ தேசாய்க்கு எழுதியது, 26-3-25, தேவதாஸ் காந்தி தாள்களில் கிடைத்த விவரம்
3. டெண்டுல்கர், மகாத்மா, பம்பாய், 1951, பாகம் 2, பக்கம் 241
4. மேற்படி, பக்கம் 253

தாஸும் சுயராஜ்யக் கட்சியும் ''மூக்குடைப்புக்கு உள்ளானதால் பதிலடி கொடுக்க ஆவலுடன் இருந்த காந்தி, சுயராஜ்யக் கட்சிக்கு அதிக அதிகாரங்களை வழங்கத் தீர்மானித்தார். காங்கிரஸையே சுயராஜ்யக் கட்சி பாணியில் நடத்துவதென முடிவு செய்தார். ''காங்கிரஸைப் பொறுத்த மட்டில் அரசியலுக்கு முக்கியத்துவம் தருவோம்; நூற்பு யக்ஞத்தின் முக்கியத்துவத்தைக் குறைத்துக் கொள்வோம்'' என்றார் அவர். நூல் நூற்றுத் தந்து காங்கிரஸ் அங்கத்தினராவது என்ற கொள்கை – மகாத்மா ஸி. ஆர். ஆகியோரின் செல்லக் கொள்கை – மாறுதலுக்கு உள்ளாயிற்று. விருப்பமுள்ளவர்கள் இவ்விதம் அங்கத்தினராகலாம்; கட்டாயமில்லை என்று அறிவிக்கப்பட்டது.

மகாத்மாவின் ஆழ்ந்த ஆசைக்கு ஏற்பத் தாம் செயலாற்றிக் கொண்டிருப்பதாக எண்ணி, கொளுத்துகிற வெய்யிலில் வறண்ட பூமியில் கதர் பிரசாரத்துக்காக நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்துக் கொண்டிருந்த ஸி. ஆர்., மிகுந்த மன வேதனைக்கு உள்ளானார். மகாத்மா சுயராஜ்யக் கட்சியிலேயே சேர்ந்து விட்டது மாதிரிதான் என்று அவருக்குத் தோன்றியது.

அவர் தமது கசப்புணர்ச்சிகளைக் கொட்டி தேவதாஸுக்கு ஒரு கடிதம் எழுதினார். ''நான் ஏன் ஓர் அறிக்கை விட்டு விட்டு மிதவாதிகள் கட்சியில் சேர்ந்து விடக் கூடாது? எத்தகைய ஒரு குழப்பத்தில் இருக்கிறோம் நாம்! மற்ற எல்லாரையும் விடப் பெரிய குழப்பத்தில் நான் ஆழ்ந்து கிடக்கிறேன். நூல் சிட்டம் கொடுத்து அங்கத்தினராகும் கொள்கை ஏன் இப்படி இழுத்துப் பறித்துக் கொண்டு சாக விடப்பட வேண்டும்? அதை விட ஒரேயடியாக உடனடியாக அதைக் கொன்று விடலாம்.''5

சூடான இந்தக் கடிதம் தேவதாஸுக்குப் போய்ச் சேரு முன்னரே மகாத்மாவிடமிருந்து ஸி. ஆருக்குக் கடிதம் வந்து விட்டது. ஸி. ஆரின் மனநிலை எப்படி இருக்கும் என்று எதிர்பார்த்து மகாத்மா எழுதியிருந்தார்.

''என் ஆன்மா என் உடலிலிருந்து பிரிந்து தனியே வேறு ஓர் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறது. ஆயினும் அந்த உலகினுல் நான் பாதிக்கப் படுகிறேன், பாதிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறேன். அந்த உலகின் ஓர் அங்கமாக நீங்கள் இருக்கிறீர்கள். எனக்கு மிக அருகில் இருப்பதாகவும் கருதுகிறேன். நான் செய்வதையும் சிந்திப்பதையும் நீங்கள் ஆமோதிக்க வேண்டும் என்று எனது அந்தரங்கத்தில் நான் விரும்புகிறேன். இந்த ஆமோதிப்பைப் பெறுவதில் ஒவ்வொரு முறையும் நான் வெற்றி பெறுவேன் என்று கூற முடியாது. ஆயினும் உங்கள் தீர்ப்பை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.''6

காந்தியின் இந்தச் சொற்கள் எந்தவிதமான பாதிப்பை ஸி. ஆரிடம் ஏற்படுத்தின என்பதை ஸி. ஆர். தேவதாஸுக்கு எழுதிய ஒரு கடிதம் கட்டிக் காட்டுகிறது. தமது கடிதத்துடன் ஸி. ஆர். மகாத்மாவின் கடிதத்தையும் இணைத்து அனுப்பியிருந்தார்.

''அவருடைய அன்பெனும் பெருஞ் சுமையை என்னுல் எப்படித் தாங்க முடியும்? கடிதத்தை அவரிடமே திருப்பிக் கொடுத்து விடுங்கள்! என்னிடம் ஓர் அரண்மனையும் அதனை அலங்கரிக்கும் விலையுயர்ந்த அலமாரியும் இருந்தால் இந்தப் பொக்கிஷத்தை அதற்குரிய மதிப்புடன் அதில் வைத்துப் பாதுகாப்பேன். இருப்பினும் இதனைப் பிரியவும் மனமில்லை. திருப்பி எனக்கே அனுப்பி விடவும்.

''அவர் செய்தவை அனைத்தையும் நான் அங்கீகரிப்பதாகப் பதில் எழுதி விட்டேன். உண்மை என்னவெனில் என்னுடைய எதிர்ப்பெல்லாம் தாற்காலிகமான குமுறல்கள்தான். என் ஆன்மா வெகுகாலம் முன்பே அவருக்குக் காணிக்கையாக்கப்பட்டு விட்டது. அவருடன் ஒத்துப் போவது தவிர வேறு ஏதும் செய்ய என்னுல் இயலாது.''7

காங்கிரஸானது சுயராஜ்யக் கட்சியாகவே முழுவதும் உருமாறி விடுவதைத் தடுத்தவை காந்தியின் கதர் நூலிழைகள்தாம். அவை இப்போது காந்தியாலேயே துண்டிக்கப் பட்டு விட்டன. செப்டம்பரில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பாட்னுவில் கூடியபோது சுயராஜ்யக் கட்சியினர் காந்தி அளித்த வெகுமதியை ஏற்றனர். ஒருவழியாகக் காங்கிரஸ் முழுவதுமே சுயராஜ்யக் கட்சியினரின் ஆதிக்கத்துக்கு உட்பட்டது.

நூற்பு யக்ஞம் தொடரும் என்று தீர்மானிக்கப்பட்டது. அதற்கான ஒரு புதிய அமைப்பு அகில இந்திய நூற்போர் சங்கம் என்ற பெயரில் உருவாயிற்று. பாட்னு மகாநாட்டில் ஸி. ஆர்., கலந்து கொள்ளவில்லை. ஆயினும், மேற்படி சங்கத்தின் செயல் கமிட்டி அங்கத்தினராக அவரும், ராஜேந்திர பிரசாத், வல்லபாய் பட்டேல், பஜாஜ் ஆகியோரும் நியமிக்கப்பட்டனர். (தொடரும்)


தமிழாக்கம்: **வி. ராஜேந்திரன்**

---


5. ஸி. ஆர். தேவதாஸுக்கு எழுதியது 19-7-25 தேவதாஸ் காந்தி தாள்கள்.
6. காந்தி ஸி. ஆருக்கு எழுதியது 16-7-25 மகாதேவ தேசாய் நாட்குறிப்பு, பாகம் 7. பக்கம் 125.
7. ஸி. ஆர். தேவதாஸ் காந்திக்கு எழுதியது ஜூலை, 1925, தேவதாஸ் காந்தி தாள்கள்.

முஸ்லிம்களின் புனிதத் தலமாகிய கஃபத்துல்லா மெக்காவில் இருக்கிறது. இக்கஃபத்துல்லாவுக்கும் புதிய கதவு பொருத்த சவூதி அரசு முடிவு செய்துள்ளது.

உயர்ந்த மரத்தில் மிகுந்த வேலைப்பாடுகளுடன் செய்யப்படும் புதிய கதவின் விளிம்புகளும் கலைத்திறன் மிக்க பகுதிகளும் தங்கத்தினுல் செய்யப்படும். இதற்காகச் சவூதி அரசு மூன்று கோடி அறுபது லட்சம் ரூபாயை (12 மில்லியன் சவூதிரியால்) செலவிட முடிவெடுத்துள்ளது. — [illegible]



3½ கோடி ரூபாய்க்கு புதிய கதவு!


பெரியவருக்கு முன்னால சத்தியம் பண்ணுங்க— வாழ்நாள் பூராவும் தினம் ராத்திரி டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள் கொளுத்துவேணு!
கொசுவை விரட்டும், உறுதியாக.—
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்.
என் கணவர் இவர். இவரிடம் டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள் வாங்கக்
எப்போதும் கவலைதீர்ந்தி ருக்கட்டும்...
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்.
தூக்கமின்மையா? இரவுதோறும் சாப்பாட்டுக்குப்பின் ஒரு டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள் (கொளுத்துங்க... விழுங்கிடாதீங்க!)
இரவுதோறும் ஒரு டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள்—பறந்து போகும் கொசுக்களெல்லாம்.
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்.
தயாரிப்பாளர்:
பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
:போர்ட், பம்பாய்-400 023. :போன்: 273831

கனவா-நிஜமா? 7

கதை: வாண்டுமாமா
சித்திரம்: செல்லம்




தெருவின் ஒரு திருப்பத்தில் திடீரென்று ஒரு முரட்டுக்கரம் அவன் கழுத்தைச் சுற்றி முறுக்க...
யார் நீ? என்னைப் பற்றி பலரிடம் விசாரித்தாயாமே? அரசாங்க ஆளா நீ?
என்னை எதற்காகத் தேடி அலைகிறாய்?
நான்... வந்து... நீ... வசிக்க உனக்கு ஒரு வீடு வேண்டுமாமே? கேள்விப் பட்டேன். அது நியாயமாக உனக்கு தேவையாகும் என்றுதான்...
அந்த முரட்டு மனிதனின் பிடி நீலனை விடுவித்தது.
நான் என் வீட்டைக் காலி செய்துகொண்டு வேறு ஊர் போகப் போகிறேன். என் வீட்டை உனக்குக் குறைந்த வாடகைக்குத் தரலாமென்று....
என் வீடு போனமாதம் எரிந்து சாம்பலாகிவிட்டது. வசிக்க வேறு இடம் பார்த்துக் கொண்டிருப்பது உண்மைதான். எப்போது உன் வீட்டை எனக்குத் தர முடியுமென்று கூறு. என்னை மேற்குக் கோட்டை மதுச் சாலைக் கருகிலுள்ள தொழிற்சாலை... நடக்குமிடத்தில் காணலாம்
காளியிடமிருந்து விடுபட்டு வேகமாய் தன் வீடு நோக்கி நடக்கிறான் நீலன்.
நான் கண்டது வெறும் கனவல்ல. கனவில் கண்டதெல்லாம் நடக்கத்தான் போகிறது. காளி இருப்பது உண்மை. அவனுக்கு வீடு தேவை. கனவில் நடந்தது போலவே அவன் என் வீட்டை ஆக்கிரமித்துக் கொள்ளப் போகிறான். நடக்கப் போவதை மாற்றவே முடியாதா?
வீட்டுக்கு வந்தவன் வாசலுக்கு முன்னால் வளர்ந்திருந்த சின்னஞ் சிறு செடியைப் பார்க்கிறான்.
இந்தச் சிறு செடிதான் கனவில் கண்டது போலப் பெரிய மரமாக வளரப் போகிறது. இந்தக் கால கட்டத்தில் மாயாபுரியின் மன்னர் ... முடி சூட்டிக் கொள்ளப் போகிறான்.... இவை எல்லாம் நடக்கப் போகின்றன.
நடக்கவிட மாட்டேன். என் கனவில் கண்ட சம்பவங்களை நிகழவிட மாட்டேன். இந்தச் சிறு செடி இனி பெருமரமாக வளர முடியாது. அதே போல மற்ற நிகழ்ச்சிகளையும் நடக்க விட மாட்டேன்.
தொடரும்

ராஜ கர்ஜனை

கோவி. மணிசேகரன்

23. "அண்ணு!..."

பசவராஜின் காதலி பேரழகி மஞ்களா தேவி திப்புவின் ஜனனுவில் அடைக்கப்பட வேண்டும்! -

எத்தனை பயங்கரமான ஆணை!

இப்புகல்தான் அதற்கு மேலும் அங்கு நிற்க விரும்பாமல் வேகமாக நடக்கிருன்...

''இப்பு...!''

அன்னையின் ஆவேசம் நிறைந்த அழைப்பு.

இப்புகல்தான் ஒரு விநாடி மலைத்து நின்று திரும்புகிருன்.

''இது என்ன அநாகரீகமான செயல்?''

''என் காதலியை அபகரித்துக் கொண்டு போனது பசவராஜுக்கு நாகரீகமான செயலானுல், இதுவும் நாகரீகமானதே!''

''சரியான காரணம் தேவை!''

''நீங்கள் கடிதத்தை என்னிடம் காட்டக் கூடாது என்பதற்கு என்ன சரியான காரணமோ அதே சரியான காரணமேதான் இதற்கும் பொருந்தும்! திவானய்யா! எனது இந்த உத்தரவை யாராவது மீறினுல்...''

நான்கு கண்கள் இமைக்க மறக்கின்றன.

''இப்புவின் கோபத்தால் இந்த ஸ்ரீரங்கப் பட்டினமே அழிந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.''

பூகம்பமே போல் வெடித்த அவனது குரலின் எதிரொலி, அந்த மகாலை விட்டு நீங்கு முன்னம் புயலைப்போல, விரைந்து சென்று மறைந்தான் நவாப் இப்புகல்தான்!

ஆ! முதல் தடவையாக அன்னைக்கு மீறிய ஆவேச உணர்வுடன் நடந்து கொண்டிருக்கிருன்...

இதன் எதிர் உணர்வுகள்...

மண்ணில் சூரிய மணம் ஒளியாய்க் கமழ்ந்து கொண்டிருக்கிறது...

பசவராஜ் குடியிருக்கும் அந்த வீதிக்கே ஒரு தனியான பெருமை சில காலமாகவே மணத்துக் கொண்டிருந்தது. அப்பேர்ப்பட்ட பெருமையைக் குலைத்துப் பங்கம் தலைநீட்டு இற மாதிரி அடிபட்ட செய்திகள்...

அப்பப்பா...

'இப்புகல்தான் காதலியை — பேரழகி ரங்கநாயகியை இந்த நட்புத் துரோகி பசவராஜ், பெண்டாளுகிறமோகத்தின் வெறி கொண்டு பலவந்தமாக இழுத்துக் கொண்டு ஓடி விட்டான்!'

இந்தக் கசப்பான செய்தி பரவாத மூலை முடுக்குகள் — பட்டி தொட்டிகள் — அந்த மைசூர் ராஜ்யத்திலேயே இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். இதன் அபசுருதி நிறைந்த எதிரொலியால் இப்போது அந்த வீதியில் — பசவராஜ் குடியிருக்கும் அந்த வீதியில் முன்பிருந்த ஒரு மேலான கௌரவம் கேவலமான கந்தலாய்ப் பிய்ந்து கொண்டிருந்தது. கங்கம்மாளும் மஞ்களா தேவியும் வெளியில் தலைநீட்டவே நாணினர். ஆ! அவர்களடைந்த அவமானத்துக்குரிய வேதனைகளுக்கும் அலட்சியத்துக்குரிய விம்மல்களுக்கும் எந்தப் பாஷையிலும் எந்தச் சொற்களையும் ஈடு கட்டி விளக்க முடியாது. ஆறு







ஆம் அவர்கள் அந்தக் கசப்பான செய்தியை இது பரியந்தம் முற்றுமாக நம்ப மறுத்தனர். தாய்க்கு மகன் மீதும், காதலிக்கு முறைக் காதலன் மீதும் இன்னமும் ஆரோக்கியமான நம்பிக்கை அழியாமல் ஆரோகணித்திருந்தது.

ஆனால், ஊரும் மக்களும்...

கண்ணும் மூக்கும் காதும் வைத்து....

அடடா! எத்தனை விசித்திரமான உருவங்களைத் தீட்டி வருகிறார்கள்...

இதோ, இப்போது அந்த வீதியே தலை குனிகிற மாதிரி; புலிக்கொடி ஏந்திய வீரர்கள் பதின்மர் குதிரைப் பிரசன்னர்களாய் நுழைகிறார்கள். அவர்களுக்கு மத்தியில் ஒரு மதிப்பு மிகு முத்துப் பல்லக்கை எண்மர் சுமந்து வருகிறார்கள்.

பசவராஜ் வீட்டு வாசற்படியில் அந்த முத்துப் பல்லக்கு இறக்கப் படுகிறது...

வீரர்கள் அனைவருமே பசவராஜின் வீட்டுக்கு மரியாதை செலுத்துவது போல அல்லது அவ்வாறு செலுத்த வேண்டும் என்கிற திப்பு சுல்தானது ஆணையைச் சிரமேற்தாங்கியவர்களைப் போல குதிரைகளின் மீதிருந்து இறங்கிக் கொள்கின்றனர். அவர்களுள் தலையான இருவர் மட்டும் வீட்டினுள் தலை குனிந்து நுழைகின்றனர்.

இதற்குள் அந்த வீதியே தொலைவில் நின்று வேடிக்கை பார்க்கத் தொடங்கி விடுகிறது.

வீரர்களிருவர் நுழைவதைக் கண்டு பெரிதாகப் பயந்து போனார்கள் கங்கம்மாளும் மஞ்சுளா தேவியும்.

அவர்களருகே சென்ற அந்தத் தலையான வீரர்கள் இருவரும் தலைப் பாகையைக் கழற்றித் தலை வணங்கினர்.

ஒருவன் வாய் திறந்தான்:

''அம்மா! என் பெயர் சிவராம். நான் நவாப் திப்புசுல்தான் மகாராஜாவின் தூதுவர்களில் ஒருவன். மஞ்சுளா தேவியம்மாரை எங்கள் சுல்தான் மிக்க மரியாதையுடன் அழைத்து வரச் சொல்லியிருக்கிறார்.''

இப்போது மஞ்சுளா தேவி அதிகப்படியாகவே அரண்டு, மருண்டு, அதிர்ந்து போனாள்.

கங்கம்மாள் கேட்டாள்: ''ஏன்?''

''ஏன், எதற்கு? என்கிற காரணம் எங்களுக்குத் தெரியாது. அழைத்துவரச் சொல்லி ஆணை!''

அங்கம் முழுவதும் பங்கப் படுவதுபோல அதிர்ந்துபோன மஞ்சுளாதேவி, சற்றே துணிவை வரவழைத்துச் சொன்னாள்:

''மறுத்தால்...?''

அவளது குரலில் வெம்பி வெடித்த வேதனை பீறிடுகிறது...

சிவராம் பதிலளித்தான்: ''சிறையெடுக்க நேரிடும். கௌரவத்தைக் காப்பாற்றிக் கொண்டு மறுக்காமல் — நாலுபேர் சிரிக்காமல் புறப்படுவீர்கள் என்று நம்புகிறோம்.''

பயந்து, நடுங்கி, ஒடுங்கிப் போன கங்கம்மாள், ''நானும் கூட வருகிறேனே!'' என்றாள்.

''மஞ்சுளா தேவியை மட்டும் அழைத்து வரவேண்டும் என்பது எங்கள் சுல்தானின் ஆணை!''

சிவராம்தான் எவ்வளவு பணிவாகப் பேசுகிறான்...

அவனது குரலிலும் வார்த்தைகளிலும் கன்னட மொழிக்கே உரிய தனிச்சிறப்பான பதமும் இதமும் வெளிப்படுகின்றன.

வேதனையால் ஏற்பட்ட விம்மலை வெளிக்காட்ட முடியாது குமுங்குகிறாள் மஞ்சுளா தேவி. அன்றொரு நாள் கம்பங் கூழையும் திண்டுக்கல் வெங்காயத்தையும் உண்டு ரசித்த திப்புசுல்தானது முகம் நினைவுக்கு வருகிறது! ஆ! அவரது அன்றைய பேச்சு ஒரு நடிப்பு மாதிரிதானோ?

வந்தவர்களுடன் எந்தவித வாதத்தையும் வைத்துக்கொள்ள விரும்பாது — அவ்விதம் வைத்துக் கொள்வதால் வரப்போகிற பயனும் நன்மை விளைவிக்காது என்றுணர்ந்த மஞ்சுளா தேவி, மௌனமாகப் புறப்பட்டாள்.

கங்கம்மாள் 'கோ' வென்றழத் தொடங்கி விட்டாள். அது மஞ்சுளாவுக்குத் தலை வேதனையாக இருந்தது.



''மாமி! ஏதோ ஒரு விசாரணையை முன்னிட்டு சுல்தான் என்னை அழைத்திருக்கவேண்டும். எதற்காக இந்த அழுகை? வீதியில் பார்ப்பவர்கள் வேறு விதமாக நினைக்கலாம். எனக்கு எந்தவித அவமரியாதையும் மானக்கேடும் நிகழாது. சுல்தானை நான் நன்றாகவே அறிவேன். தைரியமாக இருங்கள்.''

பொங்கி வந்த துக்கத்தை அடக்க முடியாமல் அடக்கப் பார்க்கிறாள் கங்கம்மாள்.

வெளியே வந்த மஞ்சுளா தேவி, பல்லக்கைக் கவனிக்கிறாள். ஓ... எவ்வளவு உயர் தரமான முத்துப் பல்லக்கு...

சுற்றிக் குழுமியிருந்த வீதிமக்களை நோக்குகிறாள்.

'எத்தனை கௌரவமாக என்னை சுல்தான் அழைக்கிறார் பார்த்தீர்களா?' என்பது போலக் கண்களில் பாவனையைத் தேக்கிக் கவனிக்கிறாள்...

அமைதியாகப் பல்லக்குள் நுழைந்து அமருகிறபோது, தனது மாமியை நோக்குகிறாள். கண்களின் மூலம் 'அழுது வீதிக்கு அறிவித்து விட வேண்டாம்' என்று சமிக்ஞை செய்தாளேயொழிய, அவளுள் பொங்கி வந்த கண்ணீரை அவளால் அடக்கிக் கொள்ள முடியவில்லை.

பல்லக்குப் புறப்பட்டது. முன்னும் பின்னும் குதிரைகளில் ஆரோகணித்த வீரர்கள் ஓர் இளவரசியை அழைத்துச் செல்வது போல் ஆயுதங்களைத் தாங்கிப் புறப்பட்டனர். வேடிக்கை பார்த்த மக்கள் தங்களுக்குள் புரிந்த தகவல்களை வைத்துத் தாறுமாறாகக் கிழித்தும், ஒட்டியும் விவாதித்துக் கொண்டனர்.

வீட்டினுள் சென்ற கங்கம்மாளுக்கு இருப்புக் கொள்ளவில்லை. அரசியல் நட்பு வேண்டாம் என்று பன்னிப் பன்னிக் கூறியும் கேட்காமல் போய்விட்டானே பசவராஜ் என்று தன்னுள் பிலாக்கித்துக் கொண்டாள்.

லால் மகால் தர்பாரில் வீறுகொண்ட பாவனையுடன் அமர்ந்திருந்த நவாப் திப்பு சுல்தானுடைய தோரணையே ஒரு புதிய பாங்கில் காணப்படுகிறது..'

வழக்கத்துக்கு மாறாகப் பார்வையும் அசைவுகளும் தென்படுகின்றன. அன்றைய தர்பாருக்கு அனைவரும் வருகை தந்திருந்தனர். மகா சுல்தான் ஹைதர் அலியின் ஆணைப்படி திவான்களும், சாமா ஐயங்கார் போன்ற அதிகாரிகளும் எந்த நிமிடத்திலும் புறப்பட இருந்தனர்.

இத்தனை மாதங்களாக வந்து குவிந்திருந்த முக்கியச் செய்திகளையும், நடந்த நிர்வாகங்களையும், பார்வையிட்டு முடித்த பின்னர், தர்பார் கலைய வேண்டியதுதானே? அதை விட்டு வேறு விவகாரங்களைப் பற்றிப் பேசி



வீணே காலத்தைக் கடத்துவதன் உட்பொருள் பெரிய கல்தானுபேகம் பக்ருன்னிஸாவுக்குப் புரிகிறது.

அவன் எதிர்பார்ப்பது மஞ்சுளா தேவியை!...

இதன் மூலம் என்னென்ன உற்பாதங்கள், அசம்பாவிதங்களாக நிகழப் போகின்றனவோ என்கிற கவலை நியாயமாகத் திவான் பூரணய்யாவுக்கும், பெரிய கல்தானு பேகம் பக்ருன்னிஸாவுக்கும் ஏற்பட்டது.

இப்புவின் கல்தானுக்கள் வெறும் பதுமைகளாகத் திரை மறைவிலிருந்து கவனிக்கின்றனர். அவர்களால் அதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? இது தர்பார்; ஜனானா அல்லவே!

சற்றைக்கெல்லாம் மஞ்சுளாதேவியைத் தனது வீரர்கள் அழைத்து வந்துவிட்ட செய்தி தர்பாருக்கு எட்டுகிறது. அவரவர் விழித்த விழிப்பிலும், விளங்கிக் கொண்ட எண்ணத்திலும், உடல்களை அசைத்துக் கொண்ட அசைவுகளிலும்தாம் எத்தனை எத்தனை அர்த்தங்கள் நிறைந்த வித்தியாசங்கள்...

முன்னே இரு வீரர்கள் வர, நடுவே மஞ்சுளாதேவி, சொர்ண விக்கிரகம் ஒன்று உயிர் பெற்று வருவதுபோல் நடந்துவர, பின்னே இருவீரர்கள் பாதுகாப்புடன் வருகின்றனர்.

ஒரு கட்டத்துக்கு வந்ததும் வீரர்கள் மண்டியிட்டு மரியாதை செய்து, பின்னர் எழுந்து நின்றனர். மஞ்சுளாதேவியும் நின்றுளேயொழிய, வணங்க வேண்டும் என்கிற நிலை மறந்து சிலையாகிப் போனாள்.

'ஓகோ' வென்றிருந்த அந்த அபரிமிதமான வண்ணக் கோலங்கள் பூண்ட தர்பாரை முதன் முறையாகப் பார்வையிட்டதன் பேரில் பிரமிப்புக் கண்டாளோ? இப்புகல்தான் அமர்ந்திருக்கும் விலைமதிக்க முடியாத தங்காசனமான — தட்டையாகப் பலகை போல அகன்று, அதன் ஒவ்வொரு முனைகளிலும் புலித் தலைகளைப் பொறித்து, அந்தப் புலித் தலைகளின் கண்களில் வைரத்தை இழைத்துப் பிரகாசிக்கும் புதுவிதமான புலியாசனப் பீடத்தைக் கண்டு வியந்து போனாளோ? அல்லது இப்புவின் தலையில் அணிந்திருந்த விசித்திரத் தலைப்பாகையின் மேலே நீண்டு வளைந்து நவரத்தினங்களைக் கொண்டு ஜொலிக்கும் 'கல்கிதுர்ரா' என்கிற ஆபரணத்தைக் கண்டு திகைத்துப் போனாளோ?

''சாந்தே மெஹறத்தாப்...'' என்று தன்னுள் சற்று உரத்த குரலிலேயே புகழ்ந்து வருணித்துக் கொள்கிறான் மூக்கில் வியர்த்த திவான் சாகிப் மீர்சாதிக்.

இதனைச் செவி சாய்த்த மஞ்சுளாதேவி, இதன் அர்த்தம் புரிந்து அருவை கலந்த வெருண்பார்வையுடன், 'நிலவைப் போன்ற முகலாவண்யம்' என்று அடுத்தவளை வருணிக்கிற இந்தச் சைத்தான் யார்?' என்பது போல் எரிச்சலுடன் நோக்குகிறாள். அவளுக்குத்தான் உருது தெரியுமே!

இப்புகல்தானுக்கே அந்த வருணனை மிகவும் அருவருப்பைத் தூண்டியது.

''திவான் மீர்சாதிக்! அடுத்தவன் மனைவியை வருணிப்பது அநாகரீகம்!'' என்று இப்புகல்தான் கூறியதும், ஏதோ விவகாரம் முற்றுகிறது என்ற அளவில் பயந்துபோனாள் பெரியகல்தான் பேகம் பக்ருன்னிஸா.

பலர் சூழ்ந்த தர்பாரில் தன்னை அவமதிப்பதுபோல இவ்வாறு எரிச்சலுடன் இப்புகல்தான் கேட்டது அவமானம் மாதிரிப் படவே, ''நான் அடுத்தவன் மனைவியை வருணிக்கவில்லையே! பொதுவாக ஒரு பெண்ணின் முகத்தைப் பாராட்டினேன்'' என்று வெட்டித் துண்டிப்பது போலப் பதிலளித்தான் திவான் சாகிப் மீர்சாதிக்.

''இவள் பசவராஜின் காதலி! மனத்தால் புருஷனாக வரித்துக் கொண்டவள்!''

''இவள் நல்ல ஒரு புருஷனை வரித்துக் கொண்டிருந்தால் நான் இவளை ரசித்து இருக்க மாட்டேன். எங்கள் கல்தானின் காதலியை அபகரித்துக் கொண்டோடிய துரோகியின் காதலி!''

தர்பாரில் சிறு நகைப்பொலியிளைழந்த சலசலப்பு...

''மூடுங்கள் வாயை!''

என்று இரைகிறான் இப்புகல்தான். தர்பார் ஊசி விழுந்தால் ஓசை கேட்கிற அளவுக்கு அமைதியில் ஸ்தம்பிக்கிறது...

இப்புவின் குரல் நெருப்பாய் ஒலிக்கிறது:

''துரோகி என்பது யாராலும் பூரணமாக நிரூபிக்கப்படவில்லை. இங்கே இவ்வாறு யாராவது சாட்சிபூதமாக நிரூபிக்க முடியுமா? அப்படி நிரூபிக்காத வரை இவளையோ, இவளது காதலன் — அதாவது எனது நண்பனையோ அநாகரீகமாகவோ, அவதூறாகவோ பேச யாருக்கும் அருகதை கிடையாது; அதிகாரமும் கிடையாது. பிறன் மனைவியை அல்லது காதலியை இவ்விதம் தர்பாரில் அநாகரீகமாக வருணித்ததற்காக அவளிடம் மன்னிப்புக் கேளுங்கள் திவான் மீர்சாதிக்!''

திவான் சாகிப் மீர்சாதிக் மௌனம் சாதிக்கிறான்...

''ம்ம்! மன்னிப்பு கேளுங்கள் மீர்சாதிக்!''

மௌனம்...

''இப்பு! இது அவசியந்தானா?'' என்று இடைபுகுந்தாள், எங்கே நிலைமை மோசமாகி விடுமோ என்று பயந்த பெரிய கல்தானு பேகம் பக்ருன்னிஸா.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆



⌘ கோயம்பேட்டில் தனது கழுத்திலிருந்து பத்து சவரன் தங்கச் சங்கிலி அறுத்து ஓடியவனை விரட்டிப் பிடித்தாள் மீனாட்சி அம்மாள்.

⌘ டெல்லியில் பஸ்ஸில் பெண்களிடம் மோசமாக நடந்துகொண்ட இளைஞர் ஒருவரை இரண்டு பெண்களே போலீசில் ஒப்படைத்தனர். இது நடந்த இடம் டர்க்மன் கேட் பகுதி. — ஹிந்துஸ்தான் டைம்ஸ்

— பாரதி

''அவசியந்தான் அம்மாஜான்! ஓர் இந்துப் பெண்ணை, ஓர் இஸ்லாமிய ராஜகுமாரன் தனது தர்பாருக்கு அழைத்து வந்து இழிவுபடுத்தினான் என்கிற அபவாதம் சரித்திரத்தின் எந்தப் பக்கத்திலும் ஏற நான் சம்மதியேன்! இதே நேரத்தில் ஓர் இஸ்லாமியப் பெண்ணை ஓர் இந்து கேலி செய்து தரக்குறைவாக நடந்து கொள்வானேயானால் அவனைத் தோலுரித்துத் தொங்கப்போடவும் தயங்கேன். மீண்டும் சொல்லுகிறேன்; எனது ஒரு கண் இஸ்லாமியர் என்றால், மறு கண் இந்து! இந்தப் பரந்த மண்ணை இந்த இரண்டு மதங்கள்தாம் கடைசிவரையிலும் காக்க முடியும்! எனவே மதத்தால் வேறுபட்டாலும் மானுஷ்யத்தால் ஒன்றுபட்டவர்கள் நாம் என்பதைத் இப்புகல்தான் நிரூபித்தே தனது கதையை முடித்துக் கொள்வான்! அதே நேரத்தில் அந்நிய இனம் குமரிமுதல் இமயம் வரை நுழைய இந்தத் இப்புகல்தான் சாகிற வரையில் சம்மதிக்க மாட்டான். எனது நண்பனின் காதலி என்பதற்காக இவனிடம் மன்னிப்புக் கேட்கச் சொல்லவில்லை. புனிதமான இந்து மதத்துக்குரிய பெண்ணைத் தரக்குறைவாக வருணித்ததால் மன்னிப்புக் கேட்கச் சொல்லுகிறேன். திவான் மீர்சாதிக் மன்னிப்புக் கேட்பது நமது மதப்பண்புக்குப் பெருமை தரும்!''

இப்புவின் இந்த நீண்ட பண்பாட்டுப் பிரகடனத்தைக் கேட்டுத் தர்பாரே ஒரு கொலுப் பொம்மைக் காட்சி போல் ஸ்தம்பித்துக் காணப்பட்டது.

பெரிய கல்தானு பேகம் பக்ருன்னிஸா அந்த அமைதியைக் கலைத்தாள்:

''இப்பு! உனது இந்தப் பண்பாட்டுப் பிரகடனம் மகிழ்ச்சியே தருகிறது! ஆனால் நீ மட்டும் இவளைச் சிறையெடுத்து வரலாமா? இது மட்டும் புனிதமான தாகுமா? நியாயமானதாகுமா? தர்மமானதாகுமா?''

அன்னையை அர்த்த பூர்வமாகக் கூர்ந்து கவனிக்கிறான் இப்புகல்தான். திவான் மீர்சாதிக் மீசையை முறுக்கி விட்டுக் கொள்கிறான்.

இப்புகல்தான் பதிலளித்தான்: ''ஏன் இவளைச் சிறையெடுப்பு என்ற பெயரால் இங்கு அழைத்து வரச் செய்திருக்கிறேன் என்பது உங்களில் யாருக்காவது தெரியுமா?''

''ஏன், மகனே?''

''திவான் மீர்சாதிக் மன்னிப்புக் கேட்கட்டும்; விளக்குகிறேன்!''

வேறுவழியே தெரியாது விழித்த பெரிய கல்தானு பேகம் பக்ருன்னிஸா, திவான் சாகிப் மீர்சாதிக்கை நோக்கி, ''தயவு செய்து மன்னிப்புக் கேட்டு விடுங்கள் திவான் சாகிப் மீர்சாதிக்!'' என்றாள். அவளது குரலில் 'மறுக்க வேண்டாம்' என்பது அழுத்தமாக எதிரொலித்தது.

திவான் சாகிப் மீர்சாதிக்கின் மீசை குமுறலுடன் துடிக்கிறது. அவனது நாவசைந்தது:

''ஒரு விஷயத்தை இங்கு யாரும் கவனிக்கவில்லை. நமது கல்தானைக் கண்ட இவள் மரியாதை செலுத்தாது நின்றாள். மரியாதை தெரியாத இவளிடம் நான் மன்னிப்புக் கேட்பது என்ன நியாயம்?''

ஏதோ அடிவேரான ஒன்றைப் பற்றி உலுக்குவது போல எண்ணிய திவான் சாகிப் மீர்சாதிக் மீசையைத் திருகிக் கொள்கிறான். மஞ்சுளா தேவி வருகிறபோது, வீரர்கள் மரியாதை செய்தபோது இவள் மமகாரமாக நின்றதை மிகவும் சமத்காரமாகச் சுட்டிக் காட்டி விட்டதாக ஒரு நிமிர்வு காண்கிறான்.

இப்புகல்தான் கூட ஒருகணம் அந்த விஷயத்தில் தயங்கிப் போனான். ஆயினும் சமத்காரத்துக்கே ஒரு சண்டமாருதன்போலப் பதில் சொன்னான்:

''உடன் பிறந்த தங்கையானவள் அண்ணனை வணங்கினாலும் ஒன்றுதான்; வணங்காவிட்டாலும் ஒன்றுதான்! இது ஒரு பெரிய விஷயமாகாது. இதை நான் எதிர்பார்க்கவுமில்லை.''

பாசத்தின் பாற்பட்ட ஒரு வேகச் சுழிப்புடன், நவாப் இப்புகல்தான் இவ்விதமாகக் கூறிமுடித்த மறுகணம்...

தன்னை மறந்த புளகப் புல்லரிப்புடன் சாஷ்டாங்கமாக, அட்டங்கமும் நெட்டங்கமாகத் தரையில்பட ''அண்ணா...'' என்று அழைத்து. அவ்வாறு அழைத்த குரலில் காதலனைப் பிரிந்த குமுறலைத் தேக்கிக் கண்ணீர் மல்க விழுந்து, வணங்கி மரியாதை செலுத்துகிறாள் மஞ்சுளா தேவி.

இது தர்பார் என்றும் நினையாத இப்புகல்தானின் துக்கம் கவிந்த கண்களில் நீர் திரையிடுகிறது... (தொடரும்)



குழந்தைகள் மனசு
உலராத சிமெண்ட் தரையைப் போன்றது;
அதன் மீது எந்தப் பொருள் விழுந்தாலும்
உடனே அதன் உருவம்
தரையில் பதிந்து விடும்.

—'ஹயம் ஜினோட்'

—பூண்டி

வேகமாக வாசல் பக்கம் வந்தான் சுந்தரம். சற்று முன்பு வராந்தாவில் வைத்து விட்டுப் போயிருந்த சைக்கிளைக் காணவில்லை! சுற்றுமுற்றும் பார்த்தான் — எங்கும் இல்லை.—

''அபிராமி! சைக்கிள் திருடு போய்விட்டது போலிருக்கிறதே!'' பதற்றத்துடன் சொன்னான் சுந்தரம்!

''ஓட்டை சைக்கிள்! சதா ரிப்பேர் — விட்டுத் தொலையுங்கள்'' நிதானமாகப் பதிலளித்தாள் அபிராமி!

''விடுவதா! ராசியான வண்டி! அந்தச் சைக்கிளை வாங்கின தினத்திலிருந்து தானே ஆபீசில் பிரமோஷன் விஷயமாக என் பெயர் அடிபடுகிறது.''

''உங்கள் பிரமோஷனுக்கும் அந்தச் சைக்கிளுக்கும் என்ன சம்பந்தம்? வீணாக ஏன் இப்படித் தவிக்கிறீர்கள் — இனிமேல் அது கிடைக்கவா போகிறது?''

''கிடைக்காதா? போலீசில் கம்பளெண்டு கொடுத்தால் தானே கிடைத்து விடுகிறது.''

''எதற்கெடுத்தாலும் போலீஸ் கம்பளெண்டு — போலீஸ் கம்பளெண்டு — உங்களுக்கு இது ஒன்றுதான் தெரிந்திருக்கிறது. பேசாமல் போய் வேலையைப் பாருங்கள்!''

அபிராமியின் வார்த்தைகளைச் சுந்தரம் லட்சியம் செய்யவில்லை. மிகுந்த வேகத்துடன் போலீஸ் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டான். போலீஸ் ஸ்டேஷனில் ஏட்டிடம் சைக்கிள் காணாமல் போனதைப் பற்றி மிகுந்த பதற்றத்துடன் சொன்னான். ஆனால் ஏட்டு கொஞ்சம்கூடப் பதற்றப்படவில்லை. ''சைக்கிளை எங்கே வைத்தீர்கள்? எப்பொழுது வைத்தீர்கள்? எப்படி வைத்தீர்கள்? ஏன் வைத்தீர்கள்?'' இப்படிப் பல கேள்விகளைக் கேட்டார். சுந்தரத்துக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

''இந்த விவரங்கள் தெரிவித்தால்தானே சார் எங்களால் குற்றவாளியைக் கண்டு பிடிக்க முடியும்?'' என்றார் ஏட்டு.

ஒரு மூலையில் போய் உட்கார்ந்து விவரமாகக் கம்பளெண்டு ஒன்று எழுதி ஏட்டிடம் கொண்டு போய்க் கொடுத்தான் சுந்தரம்.

ஏட்டு வெறுப்புடன் சுந்தரத்தைப் பார்த்தார். பிறகு அதை வாங்கிக் கொண்டார். ''ஏதாவது தகவல் கிடைத்தால் உங்களுக்குச் சொல்லி அனுப்புகிறோம்'' என்றார் ஏட்டு. பிறகுதான் சுந்தரத்துக்குச் சமாதானம் ஏற்பட்டது. வீட்டுக்குத் திரும்பினான். ஒரு குழந்தை காணாமல் போய்விட்டது போன்ற கவலை சுந்தரத்தை வாட்டியது. மனம் சோர்வடைந்தது. இரண்டு நாட்கள் ஆபீசுக்குக் கூடப் போகவில்லை!

அடிக்கடி போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய்த் தன் சைக்கிளைப் பற்றி ஏதாவது தகவல் தெரிந்ததா என்று விசாரித்துக் கொண்டிருந்தான் சுந்தரம். நாளாக நாளாகச் சைக்கிள் கிடைக்கும் என்கிற நம்பிக்கை குறைய ஆரம்பித்தது அவனுக்கு. பிரமோஷன் விஷயமும் இழுபறியில் இருந்தது.— அன்று மாலை ஒரு புதிய சைக்கிளுடன் வீடு திரும்புவது என்ற தீர்மானத்துடன் ஆபீசிற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான் சுந்தரம்.

அப்பொழுது :—

''உங்கள் சைக்கிள் கிடைத்து விட்டது. போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து எடுத்துக் கொண்டு போங்கள்'' என்றான் அவரைத் தேடிக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனிலிருந்து வந்த ஒருவன். சுந்தரத்தின் உள்ளம் உற்சாகத்தினால் துள்ளியது.

''நீ கேலி செய்து கொண்டிருந்தாயே — இப்பொழுது என்ன சொல்கிறாய்? நம்ப போலீஸிடமிருந்து குற்றவாளிகள் தப்பவே முடியாது!'' மிகுந்த உற்சாகத்துடன் பேசினான் சுந்தரம். ஒரு மணி நேரம் தாமதமாக வருவதாக ஆபீசுக்குப் போன் செய்து விட்டுத் தன் அதிர்ஷ்ட சைக்கிளைக் கொண்டு வர போலீஸ் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டான் சுந்தரம்.

''நீங்கள் கஷ்டப் படப்போகிறீர்களே என்றுதான் சைக்கிளை உங்களிடம் கொடுக்கிறோம். கேஸின் போது சாட்சி சொல்ல இந்தச் சைக்கிளுடன் நீங்கள் கோர்ட்டுக்கு வர வேண்டும். பின்புறம் வராந்தாவில் இருக்கிறது, எடுத்துக் கொண்டு போங்கள்'' என்றார் ஏட்டு.

மகிழ்ச்சியுடன் பின்புறம் விரைந்தான் சுந்தரம். அங்கே குவேராரமாகப் பல சைக்கிள்கள் கிடந்தன. சுந்தரத்தைப் போல் சைக்கிளைப் பறி கொடுத்தவர்கள் பலர் அங்கே நின்றுகொண்டிருந்தனர்.



''என் சைக்கிள் புத்தம் புதியதாயிற்றே?''— ஒருவர்.

''என் சைக்கிளில் டைனமோ லைட் இருந்தது சார்'' — இரண்டாமவர்

''என் சைக்கிளுக்கு ''புது பெல்.'' புது ஸீட்டு,'' ''புது கேரியர்'' எல்லாம் போட்டிருந்தேனே'' — மூன்றுமவர்.

எல்லாச் சைக்கிள்களும் ஏறக்குறைய ஒரே மாதிரியாக — ரொம்பப் பழசாக இருந்தபடியால் தன்னுடைய சைக்கிள் எது என்று சுந்தரத்தினால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஏட்டு சொன்னபடி ஒன்றைத் தள்ளிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தான்.

போலீஸ் ஸ்டேஷனில் நடந்ததை அபிராமியிடம் விவரமாகச் சொன்னான் சுந்தரம்.

''எதற்கெடுத்தாலும் போலீஸ் கம்பளெண்டு என்று குதித்தீர்களே, இப்பொழுது இதை விற்கவும் முடியாது, வைத்திருந்தும் பலன் இல்லை! எந்தக் காரியத்திலும் நீங்கள் இப்படித்தான்'' என்று பொரிந்தாள்.

பழைய சைக்கிளை நம்பி ஆபீசுக்குப் போக முடியவில்லை. விற்று விடலாம் என்றாலோ கேஸ் ஒன்று இருக்கிறது — பிரமோஷன் போய்விடப் போகிறதே என்கிற பயம் வேறு! ஆகவே பஸ்ஸில் ஆபீசுக்குப் போய் வந்து கொண்டிருந்தான் சுந்தரம். பல கஷ்டங்கள் — பல தொல்லைகள் — ஆபீசுக்கு லேட்டாகப் போனான். அடிக்கடி உடம்புக்கு வந்தது — வெகு விரைவில் லீவு முழுவதும் தீர்ந்து விட்டது — இனிமேல் ஒருநாள் லீவு போட்டால் கூட ரிமார்க்கு வந்துவிடும். பிரமோஷன் பாதிக்கும். ஆகவே இனி எக் காரணம் கொண்டும் ஆபீசுக்கு லீவு போடக் கூடாது என்று தீர்மானித்தான் சுந்தரம்.

அன்று காலை வழக்கம் போல் குளித்து விட்டு ஆபீசுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான் சுந்தரம்.

''உங்களிடம் நான் ஒன்று சொல்ல மறந்து விட்டேன். இன்று சைக்கிள் கேஸை எடுக்கிறார்களாம். சாட்சி சொல்ல நீங்கள் சைக்கிளுடன் மாஜிஸ்டிரேட்டு கோர்ட்டில் பதினொரு மணிக்கு ஆஜராக வேண்டுமாம் — நேற்று மத்தியானம் யாரோ ஒருவன் இதைக் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போனான்'' என்று சாட்சி சொல்லச் சம்மனைச் சுந்தரத்தினிடம் கொடுத்தாள் அபிராமி.





சுந்தரத்துக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ''எனக்குப் பிரமோஷன் கிடைத்த பிறகு இந்த கேஸ் வந்து தொலைத்திருக்கக் கூடாதா?'' என்று அலுத்துக் கொண்டான்.

ஆபீசுக்குப் போனால் சைக்கிள் திருடன் தப்பி விடுவான் — சாட்சி சொல்லக் கோர்ட்டுக்குப் போனால் பிரமோஷன் போய்விடும்— சுந்தரம் தவித்தான். பதினொரு மணிக்குக் கேஸ் ஆரம்பம் — பன்னிரண்டு மணிக்கு முடிந்து விடப் போகிறது. சாட்சி சொல்லி விட்டுச் சீக்கிரம் ஆபீசுக்குப் போய்விடலாம். ஆகவே லேட்டாக வருவதாக ஆபீசுக்குப் போன் செய்து விட்டுச் சாப்பிடாமல் கூட அவசர அவசரமாகக் கோர்ட்டுக்குக் கிளம்பினான் சுந்தரம்.

சிறிது நேரத்திற்கெல்லாம் சிவப்பு நிற மூன்றடுக்குக் கோர்ட்டு கட்டிடத்தினுள் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு நுழைந்தான் சுந்தரம். அவன் பின்னால் மளமளவென்று பல சைக்கிளோட்டிகள் அந்தக் கோர்ட்டுக் கட்டிடத்தினுள் பிரவேசித்தனர். அவர்களும் சைக்கிள் கேஸ் விஷயமாகச் சாட்சி சொல்லத்தான் வந்திருந்தார்கள்!

சுமார் இருபது பேர் — சுந்தரம் உட்பட — தங்கள் சைக்கிளைப் பற்றியவாறு கோர்ட்டுக் காம்பௌண்டுக்குள் இருந்த பெரிய மரத்தின் நிழலடியில் போய்க் கும்பலாக நின்றனர். நேரமாகிறதே என்று ஒருவரும் கவலைப்படவில்லை — பதற்றப்படவும் இல்லை — ஆனால் சுந்தரத்துக்கோ ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு யுகமாக இருந்தது — ஆபீஸ் நினைவு அவனை வாட்டி வதைத்தது . ''சைக்கிள் போனால் போகட்டும் என்று சும்மா இருந்திருக்கக் கூடாதா? — போலீசில் கம்பளெண்டு கொடுத்துவிட்டு இப்படிப் படாதபாடு படுகிறேனே — பிரமோஷன் போய்விடும் போல் இருக்கிறதே'' என்று தவித்தான் சுந்தரம்.

சாட்சி சொல்ல வந்திருந்தவர்கள் எல்லோரும் ''இதோ வந்து விடுகிறேன்'' —

என்று சொல்லிவிட்டுத் தங்கள் சைக்கிள்களுக்குச் சுந்தரத்தைக் காவல் வைத்து விட்டு வெளியேற ஆரம்பித்தனர். மணி பன்னிரண்டு. ஒன்று. இரண்டு ஆகியும் அவர்களில் — ஒருவர் கூடத் திரும்பவில்லை — அந்தக் கேஸும் எடுக்கப்படவில்லை!

நின்று நின்று சுந்தரத்தின் கால் கடுத்தது. பசி வயிற்றைக் கிள்ளியது. தாகம் நாக்கை வாட்டியது — கோர்ட்டு காம்பௌண்டைத் தாண்டி வெளியே சென்றால்தான் சாப்பிட ஏதாவது கிடைக்கும் — ஆனால் அந்த இடத்தை விட்டு எப்படிச் செல்வது? வெளியே சென்றவுடன் தன் கேஸை எடுத்துவிட்டால் என்ன செய்வது? கூப்பிடும் போது ஆஜராகாவிட்டால் மறுபடியும் இங்கு வர வேண்டியிருக்குமே! மறுபடியும் இப்படி எல்லாம் கஷ்டப்பட வேண்டியிருக்குமே?

"இன்றைக்கு ஆபீஸ் போய்விட்டது — அதோடு நம்முடைய பிரமோஷனும் போய் விடப் போகிறது — இனிமேல் கேஸை எப்பொழுது எடுத்தால் என்ன?" —

சுந்தரம் மனம் உடைந்து போனான் — சோர்வினால் கண்கள் சுழல ஆரம்பித்தன. பக்கத்தில் இருந்த மரத்தின் மீது சாய்ந்தான். விரைவில் தன்னையும் மீறிக் கண்ணயர்ந்து விட்டான்.

"என்ன சார் இது! நிம்மதியாய்த் தூங்கிக் கொண்டிருக்கிறீர்கள் — கொஞ்சம் கூடச் சுறு சுறுப்பு இல்லையே — மாஜிஸ்டிரேட்டு உங்கள் கேஸை எடுக்கப் போகிறார் — வாருங்கள் சார்!" என்றார் ஒரு போலீஸ்காரர்.

சுந்தரத்திற்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

"பதினொரு மணிக்கு என்று போட்டு விட்டு மூன்று மணிக்குக் கூப்பிடுகிறீர்களே!"

"இது கோர்ட். நியாயத்தை நிலைநாட்டுமிடம். நிதானம் தேவை. அவசரப்பட முடியுமா? உம்.... உம்... சைக்கிளை எடுத்துக்கொண்டு வாருங்கள். — கோர்ட்டு மூன்றாவது மாடியில் இருக்கிறது. — சீக்கிரம் வாருங்கள்!"

சுந்தரம் மூன்றாவது மாடியை அண்ணாந்து பார்த்தான். பழங்காலத்துக் கட்டிடம். சுமார் முப்பத்தாறு அடி உயரம்! ஐயோ! சைக்கிளை மாடிக்குத் தூக்கிக் கொண்டு போக வேண்டுமே? இது வேறு கஷ்டமா? — ஆத்திரம் தீரக் கத்திவிட வேண்டும் போல் இருந்தது சுந்தரத்துக்கு. ஆனால் மூச்சு விட முடியுமா? அது கோர்ட்டு ஆயிற்றே — மற்றவர்கள் எப்படியாவது போகட்டும் என்று தன் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு போய் கோர்ட்டு வராந்தாவில் தூக்கி நிற்கவைத்து விட்டுத் தானும் வராந்தாவின் மீது ஏறினான். சைக்கிள் கேஸ் விஷயமாக வந்திருந்த மற்றவர்கள் அதுவரை எங்கே இருந்தார்களோ தெரியவில்லை. அனைவரும் கும்பலாகத் தங்கள் தங்கள் சைக்கிளுடன் வராந்தாவுக்குள் மளமளவென்று புகுந்து விட்டனர். மாடிக்குச் செல்ல அமைக்கப்பட்டிருந்த படிக்கட்டுகள் அவ்வளவு அகலமாக இல்லை. ஒவ்வொரு மாடிக்கும் இரண்டு மூன்று திருப்பங்கள் வேறு இருந்தன.

சுந்தரம் சைக்கிளைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு படிக்கட்டுக்குள் ஏறினான். ஒன்றிரண்டு முறை கால் இடறியது.

சுமார் அறுபது படிகளைக் கடந்து மூன்றாவது மாடியை அடைவதற்குள் சுந்தரத்துக்கு மேல்மூச்சுக் கீழ்மூச்சு வாங்கிவிட்டது. வியர்த்துக் கொட்டியது.


சைக்கிள் கேஸ் ஆரம்பமாகியது. குற்றவாளிக் கூண்டில் அலட்சியமாக நின்று கொண்டிருந்தான். அவன் மிகவும் தெளிவாக இருந்தான். தெம்பாக இருந்தான். சிரித்துக் கொண்டும் இருந்தான். அவனுடைய தலைக்கு மேலே மின்விசிறி சுழன்று கொண்டிருந்தது — கவலை, ஏக்கம், ஊஹூம் — எதுவும் அவனிடம் இல்லை — ஆனால் சாட்சி சொல்ல வந்திருந்த சுந்தரம் பசியினாலும், தாகத்தினாலும் துடித்துக் கொண்டிருந்தான். நல்ல காற்று இல்லாததினால் அவன் உடம்பு புழுங்கிக் கொண்டிருந்தது.

பப்ளிக் பிராசிக்யூட்டர் குற்றவாளியைக் கேள்விகள் கேட்டார். எல்லாவற்றுக்கும் "ஆமாம்" என்று சொல்லுவது போலத் தலையை அசைத்துக் கொண்டிருந்தான் குற்றவாளி. தப்பு செய்து விட்டோமே, தண்டனை கொடுப்பார்களே என்று கொஞ்சமாவது பயம் இருக்க வேண்டுமே! ஊஹூம்! — நிம்மதியாக இருந்தான், அவன்!

பத்து நிமிடங்களுக்குப் பிறகு. "உங்கள் கேஸ் முடிந்து விட்டது. அந்த அறைக்குப் போய்ப் புத்தகத்தில் கையெழுத்தைப் போட்டு விட்டு உங்கள் சைக்கிளை எடுத்துக் கொண்டு போங்கள்" என்று கூறினார். கோர்ட்டு ஹாலிலிருந்து வந்த ஒரு போலீஸ்காரர். சிறையிலிருந்து விடுபட்டது போலிருந்தது சுந்தரத்துக்கு — போலீஸ் குறிப்பிட்ட அறையை நோக்கி விரைந்தான் சுந்தரம். அங்கே பெரிய நோட்டுப் புத்தகம் ஒன்று

"நாலு பேரிடம் கடன் வாங்கி வீடு கட்டிக் கொண்டிருந்தாயே! எப்ப கிரகப்பிரவேசம்?"

"உம்... அந்த வீட்டை விற்றும் பாதிக் கடனை அடைச்சேன்; மீதிக் கடனை அடைக்கக் கடன் வாங்க வேண்டியிருக்கு!"



இருந்தது — நாற்காலி காலியாக இருந்தது. ஒருவரையும் காணேம். சுந்தரமும் மற்றவர்களும் அந்த அறையின் உள்ளே போய்க் கும்பலாக நின்றனர். அரைமணி நேரம் கழித்து அவ்வறையினுள் நுழைந்தான் ஒரு முரட்டு ஆசாமி. மின்சார விளக்கைப் போட்டான். மின்சார விசிறியைத் தட்டி விட்டான் —அலமாரியில் போய் எதையோ தேடினன். குறுக்கும் நெடுக்கும் நடந்தான். பிறகு சாவதானமாக நாற்காலியில் வந்து உட்கார்ந்தான்.

''என்ன சார்! இப்படி அறையை அடைத்துக் கொண்டு நிற்கிறீர்கள்? நான் வேலை செய்வதா வேண்டாமா? வராந்தாவில் போய் வரிசையாய் நில்லுங்கள் — படிக்காதவர்களை தேவலை போல் இருக்கிறதே!'' என்று சீறினன்.

சுந்தரம் அலறி அடித்துக் கொண்டு அவ்வறையை விட்டு வெளியேறி வராந்தாவில் வந்து நின்ருன். அந்த முரட்டு ஆசாமியின் பார்வை, பேச்சு, அதிகாரம் எல்லாம் சுந்தரத்தை நடுங்க வைத்தன. சாட்சி சொல்ல வந்த சுந்தரம் குற்றவாளிபோல் நடுங்கினன். வெளியேறியிருந்தவர்கள் ஒவ்வொருவராக உள்ளே சென்றனர். பயபக்தியுடன் அவன் சொன்னபடி, சொன்ன இடத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டு உடம்பை ஒடுக்கிக் கொண்டு வெளியே வந்தனர். சுந்தரமும் ஒருவாறு தன் கையெழுத்தைப் போட்டுவிட்டு வராந்தாவில் வந்து நின்ருன்.

சைக்கிளோட்டிகள் அனைவரும் முட்டி மோதிக் கொண்டு படிக்கட்டுகள் வழியாக இறங்கினர்கள். மேலே வரும்போது ஏற்பட்ட அனுபவம் சுந்தரத்திற்குப் பயத்தை உண்டாக்கியது. எல்லோரும் இறங்கிய பிறகு தன் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு கீழே இறங்கினன். அவன் பாதி தூரம் இறங்கிக் கொண்டிருக்கும்போது திடீரென்று அவனுடைய கால் தடுக்கியது, நிலை தடுமாறியது. சைக்கிள் அவன் பிடியிலிருந்து விடுபட்டுக் கீழே விழுந்து மளமளவென்று படிக்கட்டுகளில் உருண்டது. சுந்தரம் பாய்ந்து பறந்து கீழே இறங்கிச் சைக்கிளைத் தூக்கி நிற்க வைத்தான். உருப்படியாக இருந்த ஒன்றிரண்டு பாகங்களும் உருப்படாமல் போயிருக்குமோ என்றும் பயந்தான்.

ஆனல் — என்ன ஆச்சரியம்! ''ஹாண்டில் பார்'' சொன்னபடியெல்லாம் திரும்பியது. பெல் ''கணீர்'' என்று ஒலித்தது — பிரேக் ''நறுக் '' ''நறுக்'' கென்று பிடித்தது — 'இந்தச் சைக்கிளுக்கு என்ன ஆயிற்று? ஏன் இந்தத் திடீர் மாற்றம்? எப்படி எல்லாப் பாகமும் சரியாயின? குற்றவாளிக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்து விட்டோம் என்ற உற்சாகமா?' சுந்தரம் அந்த அதிர்ஷ்ட சைக்கிளின் மீது ஏறி உட்கார்ந்தான். அனுயாசமாக ஓட ஆரம்பித்தது அது.

விழுக்கம் போல் தன் வீட்டு வராந்தாவில் சைக்கிளை வைத்துவிட்டு வீட்டினுள் விரைந்து சென்ருன் சுந்தரம். கோர்ட்டில் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பற்றிச் சொல்ல



''நாம் இந்த வீட்டுக்குக் குடி வர்றதுக்கு முன்பு இங்கு ஒரு மந்திரவாதி குடியிருந்தானும். இது அவன் வேலையாத்தான் இருக்கணும்!''

முயன்ருன் சுந்தரம். ஆனல் அபிராமி குறுக்கிட்டுப் பேச ஆரம்பித்தாள்.

''உங்களுக்குப் பிரமோஷன் கிடைத்து விட்டதாம். ஹெட் ஆபிசிலிருந்து ''டெலக்ஸ்'' வந்திருக்கிறதாம். உங்கள் ஆபிசிலிருந்து ரமேஷ் கொஞ்ச நேரத்துக்கு முன்புதான் போன் பண்ணினன். உங்களைப் பாராட்ட ஆபிசிலிருந்து எல்லோரும் வரப் போகிறார்களாம்'' என்ருள் அபிராமி. பெருமகிழ்ச்சி அடைந்தான் சுந்தரம்.

''இது ஒரு அதிர்ஷ்ட சைக்கிள் என்பதை நான் பரிபூரணமாக நம்புகிறேன். இதை நீங்கள் விற்கக் கூடாது — விற்கவும் விடமாட்டேன்'' என்று உற்சாகத்துடன் கூறினள் அபிராமி. ஆபீஸ் நண்பர்களுக்கு ஸ்வீட் வாங்கிக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக அவசரம் அவசரமாக வாசல் வராந்தாவுக்கு வந்தான் சுந்தரம். ஆனல் — சற்று முன்பு வராந்தாவில் வைத்துவிட்டுப் போயிருந்த அந்த அதிருஷ்ட சைக்கிளை அங்கே காணவில்லை — சுற்று முற்றும் பார்த்தான் — எங்கும் காணவில்லை.

''அபிராமி! சீக்கிரம் வாயேன்!''

''ஏன்? என்ன ஆயிற்று?''

''மறுபடியும் சைக்கிள் காணமல் போய் விட்டது!''

''ஐயோ! அதிருஷ்ட சைக்கிளாயிற்றே! உடனே போய்ப் போலீஸில் கம்ப்ளெண்டு கொடுங்கள் — சீக்கிரம் போங்கள்'' — பதற்றத்துடன் சொன்னள் அபிராமி.

''போலீசா! கம்ப்ளெண்டா! இனிமேல் கம்ப்ளெண்டு என்ற பேச்சை எடுக்கவே மாட்டேன்'' என்று கூறிவிட்டுச் சைக்கிளைப் பற்றிக் கவலைப்படாமல் கடையை நோக்கி நடையைக் கட்டினன் சுந்தரம். அதிசயித்துப் போய் நின்ருள் அபிராமி. சாட்சி சொல்லப் போய் அவன் பட்ட பாடு அவளுக்கு அல்லவா தெரியும்?

மினி மர்மத் தொடர் கதை

நரிக்கொம்பு *

- கிருஷ்ணவேணி

இருநூறு பவுண்டு நிறையும் ஐந்தடி உயரமும் உடைய ஓர் உருவம் ஹரியை வழிமறித்து நின்றது. அவன் வீட்டைக் கவனித்துக் கொள்ளும் மூதாட்டி ஸோனு தான் அது.

முகத்தின் கடுகடுப்பு மாறாமலேயே "புதுசா ஒரு பொம்பளை வந்திருக்குதே... அநீதா... நம்ம ரமேஷோட மனைவி... அந்தப் பொண்ணைக் கவனிச்சுக்க நம்மாலே ஆகாதுய்யா. ரொம்ப மோசமான பொம்பிளே" என்றாள்.

"அவளுக்குப் பார்வை இடையாது..."

"இருந்துட்டுப் போகட்டும். ஆனால் நான் யாருக்கும் அடிமை இல்லே. அதுக்கு உடை உடுத்திவிடறதையோ தலைமுடியைச் சீவி விடறதையோ நான் தப்பா நினைக்கல்லே — ஆனா 'ஏ கிழவி இதைச் செய்,' 'ஸோனு அதைச் செய், இதென்ன அதென்ன?' அப்படின்னு நாள் முழுவதும் ஒரே தொண தொணப்பு... நம்மாலே முடியாது சாமி."

"பெரியம்மா, அநீதாவை நீ கவனிச்சுக் கறதுக்கு அதிகப்படியா சம்பளத்தோட சேத்துத் தர்றேன். அந்தப் பொண்ணு ரமேஷின் மனைவி. நிரந்தரமா இங்கே இருக்கப் போறதில்லே... கொஞ்ச நாள்தான். அட்ஜெஸ்ட் செய்துக்க."

ஸோனுவின் விழிகள் நீரில் மிதக்கலாயின. "ரமேஷ் தங்கமானவரு. அவருக்காக நான் எதையும் பொறுத்துக்கத் தயார்தான். அது உங்களுக்கே தெரியும். ஆனால் இந்தப் பொண்ணு அவரு மனைவி போல நடந்துக்கல்லே. ஒரு தடவைகூட அது அப்படி அநியாயமாச் செத்துப் போன ரமேஷைப் பத்திப் பேசவே இல்லே. ஆனால் அடிக்கடி உங்களைப் பத்தித்தான் அது துருவித் துருவிக் கேட்குது, பேசுது. அதுதான் எனக்குப் பிடிக்கல்லே."

"என்னைப் பத்தியா? என்னைப்பத்தி என்ன கேட்கிறாள்?"

"எல்லாம்தான். ஆனால் ரொம்ப சாமர்த்தியமாக் கேக்குது. குறிப்பிட்டுக் கேக்காமே, பேச்சு வாக்கிலே உங்களைப் பத்திப் பல விஷயங்களை விசாரிக்குது. சொன்னா நல்லா இருக்காது ஐயா — நீங்கதான் அதோட புருஷன் போல அவ்வளவு ஆர்வமாக் கேக்குது. எப்போ வெளியிலே போவீங்க, உங்களோட சிநேகிதங்க யார் யார்? ராத்திரியிலே எப்போ வீடு திரும்புவீங்க — இப்படியெல்லாம் கேக்குது. நீங்க ராத்திரி ரொம்ப நேரம் வரை உங்க அறையிலேயே வேலை செய்வீங்கன்னு சொன்னேன். உங்க அறை எங்கே இருக்குது. அங்கே 'என்னென்ன சாமான்கள் இருக்கும் — மேஜை, பீரோ நாற்காலி — இதெல்லாம் இந்தப் பொண்ணு ஏன் கேட்கணும்?" என்றாள் ஸோனு.

"இதிலே விபரீதமா ஒண்ணும் இல்லே ஸோனு. பார்வையில்லாதவர்கள் தடுமாறாமல் நடமாட எந்தெந்தப் பொருள்கள் எங்கே எங்கே இருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ளுவது இயற்கைதான். இதெல்லாம் தெரிஞ்சுக்கிட்டாத்தான் அவங்களாலே சகஜமா வளைய வர முடியும்" என்றேன் நான்.

"கண்ணே தெரியல்லே. எதுக்காக இங்கேயும் அங்கேயும் போகணும்? ஒரு நிமிசம் சும்மா இருக்கிறதில்லே. எப்பப்பாரு, மூலை முடுக்குக்கெல்லாம் போயி எதையாவது நோண்டிக்கிட்டிருக்கும் — தொட்டுத் தடவிப் பார்த்து ஆயிரம் கேள்வி கேட்கும். ரமேஷ் ஐயாவோட அறையைக் குடைஞ்சு எடுத்துட்டுது. அதுதான் போகட்டும்! கட்டிக்கிட்ட புருசனோட அறை அது. உங்க அறையிலே ஏன் போய்த் துழாவணும்? அதுதான் எனக்குப் புரியல்லே புடிக்கவுமில்லே."

"எனக்கும் புரியல்லே' என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்ட ஹரி அவள் பேச்சைத் திசை திருப்ப நினைத்தவனாக "இன்றையத் தபால்களை நீதானே வாங்கினே?" என்று கேட்டான்.

"ஆமா... போஸ்ட்மேன் கையிலிருந்து... நீங்க சொல்லி இருந்தபடி வாங்கினேன்."

"அதை உன்னிடம் நான் கொடுத்திருந்த என் ஆபீஸ் விலாசமெழுதிய பெரிய கவரில் போட்டு இந்தக் கட்டிடத்தின் கோடியிலுள்ள தபால் பெட்டியில் போட்டாயல்லவா?"

"அப்படியே செய்தேன்... நீங்கதான் கச்சிதமாக் கூறி இருக்கீங்களே."

"வந்த தபால்களை அந்தப் பெரிய கவருக்குள் போடும் போது கல்கத்தாவிலிருந்து ஏதாவது கவர் — அதாவது ரமேஷ் கையெழுத்தில் ஏதாவது கடிதம் அதில் இருந்தது உன் கவனத்தில் பட்டதா?"

ஸோனு தன் சின்னக் கண்கள் இடுங்கச் சிந்தனையில் ஆழ்ந்தாள். அவள் பார்வையிலிருந்து எதுவும் தப்பாதென்பது ஹரிக்குத் தெரியும். ரொம்பவும் சூட்சுமமான அறிவுள்ளவள் ஸோனு — படிப்பு வாசனை இல்லா விட்டாலும். கலபத்தில்

"கடவுள் பஞ்சை மட்டும் கொடுக்கிறார். துணியாக நெய்து உடுத்திக்கொள்ள வேண்டியது உன் பொறுப்பு!"

— ஜெர்மனி பழமொழி

— டி. ஜானகிராமன்

ஏமாற்ற முடியாது. ஏமாறக் கூடியவனு மல்ல.

''எல்லாக் கடிதங்களையும் நான் பார்க்க லீங்க. ஆனா கல்கத்தா முத்திரையோ ரமேஷ் ஐயாவோட கையெழுத்தோ எந்தக் கடுதாசி லேயும் இல்லை...'' என்றாள் அந்த மூதாட்டி.

'அப்படி இருக்குமானால் அது அவன் பார் வையிலிருந்து தப்பி இருக்காது' என்ற நினைப் புடன் ஒரு பெருமூச்சு எழுந்தது ஹரியிட மிருந்து.

'' 'நான் அதை அனுப்புகிறேன்'... என்று டெலிபோனில் கூறினானே ரமேஷ். இத்தனை நாளாகிறது இங்கேயோ அவன் ஆபீஸுக்கோ எதுவும் வரவில்லையே. எதை அனுப்புவ தாகக் கூறினான். அனுப்பினானா... இல்லையா?' சிந்தனைத் திருகலின் முடிவில் கேட்டான்.

''அநிதாவோட சித்தப்பா, அதான் அந்த மதன் என்கிற பெரியவர் வந்தாரா?''

''இன்னிக்கு ராத்திரி சாப்பாட்டுக்கு வர இருக்கார். அப்படியே வந்தாலும் அவர் பகல் வேளையிலே வரதில்லீங்க...'' என்றவள் ''அதுசரிங்க, அந்தப் பொண்ணு அநிதா விஷயம்?'' என்றாள் தொடர்ந்து.

''ஸோனு மாயி! அநிதா இங்கே ரொம்ப நாள் தங்கப் போறதில்லே. கொஞ்சம் பொறுமையா இரு. அட்ஜெஸ்ட் பண்ணிட்டுப் போ'' என்றான் ஹரி. ஸோனுவும் வேண்டா வெறுப்பாக முகத்தைத் தூக்கிக் கொண்டு சமையலைக் கவனிக்க வீட்டினுள் சென்றாள்.

ஹரி தன் அறைக்குள் நுழைந்தான் கையில் பிரீஃப் கேஸுடன். கறுப்புக் கண் ணாடியைக் கழற்றிவிட்டுச் சாதாரணக் கண் ணாடிகளை அணிந்து கொண்டு வேலை செய்ய மேஜைமுன் போய் அமர்ந்தான். ஏதோ ஒன்று... வித்தியாசமான சூழல் அவன் புருவங்களைச் சுருக்கி உயர்த்தின. ஸோனு மேஜையில் அலட்சியமாகத் தூசி தட்டி இருக்கிறாள்... இங்க் புட்டி உருண்டிருந்தது. ரைட்டிங் பேடில் பரத்தி இருந்த பிளாட்டிங் ஷீட்டில் மை பரவி விகாரமாகி இருந்தது. ஆனாலும் இந்த வீணாகிப் போன பிளாட்டிங் ஷீட்டை எடுத்து எறிந்துவிட்டு வேறு ஷீட்டை மாற்றி வைத்திருக்கலாம் அவள்.

இந்த நினைப்போடு முதல் டிராயரைத் திறந்தான். — புதிய பிளாட்டிங் பேப்பரை எடுக்க. முதல் டிராயரில்தான் பிளாட்டிங் தாள்கள் இருந்தன. பல கலர்களில் அங்கு அது இருந்தது — எல்லாமே சுத்தமாக. ஆனால் நேற்றிரவு மேலாக இருந்தது ரோஸ் நிற பிளாட்டிங் பேப்பர். இப்போதோ மேலே இருந்தது மஞ்சள் நிற ஷீட்! ஏதோ எண் ணம் குறுகுறுக்கப் பரபரப்புடன் மற்ற டிரா யர்களையும் திறந்து பார்த்தான். எதுவும் காணாமல் போகவில்லை. ஆனால் டிராயர்கள் சோதனைக்குள்ளாகி இருக்கின்றன என்பது துல்லியமாகத் தெரிந்தது. மேஜைமீது இங்க் புட்டி கவிழ்ந்ததைக் காண இயலாத ஒருவர் — பிளாட்டிங் பேப்பர்களின் அடுக்கின் மேல் ரோஸ் வண்ணத்துக்குப் பதில் மஞ்சள் வண்ணம் மாறியதைத் தெரிந்து கொள்ள முடியாத ஒருவரால் சோதனையிடப்பட்டிருக் கிறது. — அது அநிதாதான்! அநிதா ஹரியின் அறையில் எதைத் தேடி இருக்கிறாள்? நிச்சய மாகக் காகிதங்களையல்ல. ஒரு காகிதத்துக்கும் மற்றதற்கும் அவளால் வித்தியாசம் காண முடியாது. அப்படியானால் அவள் தேடியது எதை? ஏதோ ஒரு பொருளாகத் தானிருக்க முடியும். ஒரு குறிப்பிட்ட வடிவமுடைய தொரு பொருள். தொட்டுப் பார்த்தே உணர்ந்து கொள்ளக் கூடிய ஒரு பொருள். அப்படியொரு பொருள் அவனிடமிருப்ப தாகச் சந்தேகிக்கிறார்கள். ஆனால் அது அவனிடம் இல்லை. (தொடரும்)



டெலிபோனில் கேட்ட அந்தக் குரல் மிருதுவாக ஒலித்தது. ஆனால் உறுதியாக இருந்தது. யாரோ முன்பின் தெரியாத ஒருவர் – அந்தக் கேள்வியினால் – அவளுடைய அந்தரங்கத்தை அறிய முயன்றார். டெலிபோனில் அவள் பிடி இறுகியது.

போனில் பேசிய குரல் அமைதியாக, கனிவாக, உள்ளத்தை வருடுவது போலக் கேட்டது – ''அம்மணி உங்கள் இல்லற வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கிறதா?''

இப்படியொரு கேள்வியைப் புவனா எதிர் பார்க்கவே இல்லை. அதாவது இம்மாதிரியான வினாக்களுக்கு விடையளிக்க அவள் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கவில்லை. குழந்தைக்குப் பால் கரைத்துப் புகட்டிக் கொண்டிருந்த போது டெலிபோன் ஒலித்தது. அசுவாரசியமாக இருந்தாள் – 'பத்மாவாகத் தானிருக்கும். வம்படிக்கக் கூப்பிடுவாள்' என்று. நாலைந்து தடவை அது அடம் பிடித்து அதிர்ந்த பிறகுதான் ரிஸீவரை எடுத்துக் காதருகில் வைத்துக் கொண்டாள். இனிய ஆண் குரல் ''குட்மார்னிங் மேடம்....! என்னுடைய இந்த அழைப்பைத் தொல்லையாகக் கருத மாட்டீர்கள் என்று நம்புகிறேன்'' என்றது.

எதிர்பாராத யாரோ ஓர் அன்னியன் அழைக்கிறான் என்ற பதற்றத்திலிருந்து விடுபடுமுன் அந்தக் குரல் தொடர்ந்தது. ''நான் டாக்டர் பதி... நீங்கள் கேட்டிருப்பீர்களே – இ. வா. ஆ. க. – இல்லற வாழ்க்கை ஆராய்ச்சிக் கழகம் – என்பதைப் பற்றி?''

புவனாவின் நினைவில் பளிச்சிட்டது – இரண்டு நாட்களுக்கு முன்பு அவள் கணவன் மாலைப் பத்திரிகையிலிருந்து படித்துக் கூறிய ஒரு

போனில் கேட்ட குரல்

செய்தி. மனோதத்துவ நிபுணர்கள் சிலர், சமூகத்தில் இல்வாழ்க்கை நடத்தும் தம்பதிகள் தங்கள் மண வாழ்க்கையை எப்படி அநுபவிக்கிறார்கள், நினைக்கிறார்கள் என்று ஒரு சர்வே நடத்தப் போகிறார்கள் என்று. தனக்கு அதைப் பற்றித் தெரியும் என்ற மகிழ்ச்சியில் கொஞ்சமும் யோசிக்காமல் உற்சாகமுடன், ''ஓ! தெரியுமே. அதைப் பற்றிப் பத்திரிகையில் படித்தேன். இட் ஸவுண்ட்ஸ் வெரி இண்டரஸ்டிங்!'' என்றாள் புவனா.

''ஓ''...! என்றது குரல் டெலிபோனில். விஷயம் தெரிந்த, அதில் ஆர்வமுள்ள ஒரு நபருடன் பேசுகிறோம் என்பதில் மகிழ்ச்சி– அந்த ''ஓ''வில் தொனித்தது. ''அப்படியானால் எங்கள் பணியைப் பற்றிப் புரிந்திருக்கும் உங்களுக்கு. ரொம்ப சந்தோஷம். நீங்கள் யாரென்றே எனக்குத் தெரியாது. டெலிபோன் டைரக்டரியை எடுத்துக் தொடு குறி ஜோசியம் பார்ப்பது போல் விரலைச் சீனிவாசன் என்ற பெயர்களில் 'குருட்டாம் போக்கில் ஓட விட்டு நிறுத்திய போது உங்கள் நம்பரில் நின்றது. இப்படித்தான் உங்கள் டெலிபோன் எண்ணைத் தேர்ந்தெடுத்தோம்'' என்று விளக்கினார் டாக்டர் பதி. தான் கேட்கும் சில கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். ''எங்கள் ரிகார்டுக்கு, சின்னச் சின்ன விஷயங்கள், கேள்விகள்...!''

பத்திரிகையில் இது போன்று வரும் வினாக்களுக்கு-'நீங்கள் எப்படிப்பட்டவர்?' போன்ற கேள்விப் பட்டியல்களுக்கு விடை எழுதிப் பழக்கமுண்டு அவளுக்கு. இதுவும் அப்படித் தானிருக்குமென்று எண்ணினாள். ஆகவே சம்மதித்தாள்.

அவள் வயதைக் கேட்ட போது அவள் உண்மையை ஒளிக்கவில்லை.

''ஓ! இருபத்தெட்டா?'' என்று திருப்பிக் கூறினார் டாக்டர் பதி. அடுத்து வந்தகேள்விகள் அவள் அனுமானித்தது போலவே இருந்தன. அவளுக்குக் கல்யாணமானது எப்போது, எத்தனை குழந்தைகள் .... இப்படி. டாக்டர் அவளுடைய ஒவ்வொரு பதிலுக்கும் 'ஓ', 'ஓ' என்று வியப்புக் கலந்த மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

தன் கணவனைப் பற்றிய தகவல்களைக் கூறத் தயாரானாள் புவனா – வயது முப்பத்திரண்டு, பாங்கில் சீனியர் ஆபீஸர், காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டது இப்படியாக. ஆனால் டாக்டர் பதி அவள் கணவனைப் பற்றிய



விவரங்களைக் கேட்கவில்லை. அதற்குப் பதிலாக அவள் சற்றும் எதிர்பார்க்காத அந்தக் கேள்வி, அந்தரங்கத்தைத் துளைக்கும் அம்பாக வந்தது. 'அம்மணி உங்கள் இல்லற வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கிறதா?'

ஏனோ அந்த வினா அவளைத் தடுமாற வைத்தது. முன்னுச்சி மயிரை ஒதுக்கிக் கொண்டாள். புருவத்தைச் சுருக்கியபடி கைப்பிடியிலிருந்த டெலிபோனை வெறித்துப் பார்த்தாள். கைக்குழந்தை சிணுங்குவது கேட்டது. பெரிதாக அழப் போவதற்கான அறிகுறிகள் தெரிந்தன. இவரிடமிருந்து விடுபட வேண்டுமென்ற உணர்வு மேலோங்கியது அப்போது. பதியின் குரல் மறுபடியும் கேட்டது.

''அம்மணி உங்கள் இல்லற வாழ்க்கை பூரணமானதாகவும் மகிழ்ச்சி நிறைந்ததாகவும் இருக்கிறதா?'' இப்போது அவர் கேள்வியில் ஓர் அழுத்தமிருப்பதாகப்பட்டது. ஆனால் அதே அமைதி, நிதானம்.

புவனாவின் வாய் யந்திரமாகப் பதில் கூறியது. ''என் இல்லற வாழ்க்கை'' நிதானமாகக் கூறினாள். ''புலிக்கூண்டுக்குள் நுழைந்து விட்ட மனிதனின் மனோநிலை எப்படியோ அதைப் போன்றது.''

''தாங்க்யூ மேடம்!'' என்றதை அடுத்து கிளிக் ஒலி, அவர் போனை வைத்து விட்டதை அறிவித்தது. அப்போதுதான் புவனாவிற்குத் தான் கூறிய பதிலின் தன்மை புரிந்தது. தான் கூறியதற்கு விளக்கமாக மேலும் ஏதோ சொல்ல நினைக்கு முன்பாக அவர் தொடர்பைத் துண்டித்துக் கொண்டது அதிர்ச்சியாக இருந்தது புவனாவிற்கு. சற்று நேரம் தன் டெலிபோனைக் கீழே வைக்காமல் வெறித்து பார்த்துக் கொண்டிருந்தாள்.



பிறகு ஒரு பெருமூச்சுடன் போனை வைத்து விட்டுத் தோள்களைத் தூக்கிக் குலுக்கிக் கொண்டாள்.

'இப்படியொரு பதிலை ஏன் கூறினேன்?' என்று உள் மனம் குடையலாயிற்று. 'தன் கணவனுடன் நடத்தும் இல்லற வாழ்க்கை, தான் கூறிய உவமைக்குப் பொருத்தமானதா?' — அல்லாடியது அடிமனம். 'அப்படியேயானாலும் அதைப் போய் ஒரு அன்னியனிடம் இப்படிக் கூறலாமா?' குடைந்தது மனச்சாட்சி. 'என்னை யாரென்றே அவருக்குத் தெரியாது. இதற்குப் போய் இவ்வளவு பதட்டப்படுவானேன்?' சமாதானம் பேசியது சிந்தனை.

'யோசிக்காமல் இப்படியொரு பதிலைக் கூறுவானேன்?' என்று நாலாவது தடவையாகத் தன்னையே கேட்டுக் கொண்டு சோர்ந்து போய் சோபாவில் உட்கார்ந்தாள். இப்படியொரு பதில் என்னிடமிருந்து வரவேண்டுமானால் என் அடிமனத்தில் அப்படியொரு எண்ணம், பீதி, தவிப்பு, கசப்பு, படிந்திருக்க வேண்டுமில்லையா? — தனக்குத் தானே கேட்டுக் கொண்டாள் புவனா.

'உண்மைதான். கல்யாணமான ஆரம்ப நாட்களில் அப்படியொரு சூழ்நிலையில்அவள் மறுகியதுண்டு. மூத்தவள் 'அபி'பிறந்த போது அன்புக் கணவனும் தன் அம்மாவுடன் சேர்ந்து கொண்டு தன் பெற்றோரை அலட்சியப்படுத்தியதை அவளால் தாங்கவே முடியவில்லை. இருபது வயது வரை ஆசையும் பாசமுமாக வளர்த்த தாய் தந்தையருடன் தொடர்பே இல்லாத சூழ்நிலை எப்படியோ உண்டாகி விட்டது. தன் கணவன் வீட்டாரால் அவமானப் படுத்தப்பட்ட அப்பாவையும் அம்மாவையும் நினைத்துப் பல நாள் வேதனைப்பட்டிருக்கிறாள். ஆனால் அபிராமி — 'அபி' — யை அடுத்து ஆனந்த் பிறந்த பிறகு — இப்போது அவள் நினைவில் அதெல்லாமில்லை. கண் நிறைந்த கணவன், கொள்ளை இன்பம் குலவும் மழலைகள், வசதியான வாழ்க்கை. தன் பெற்றோர்களை நினைத்து வேதனைப்பட நேரமே கிடையாது. அப்படியிருக்க ஏன் இப்படியொரு பதில் என் நாக்கு நுனியில் வந்து.....?, அப்படியொரு பதிலை நான் கூறி இருக்கக்கூடாது' என்று சாடியது நெஞ்சம். 'நான் மேலே பேச இடமின்றி அவர் டெலிபோனை வைத்து விட்டாரே' என்ற நினைப்பு ஆத்திரமாகக் குமுறியது. பரபரப்புடன் எழுந்தாள். கணவரின் அறைக்குப் போனாள். நாலைந்து நாள் தினசரிகளை எடுத்து வந்து புரட்டலானாள். அவள் கணவன் படித்த அந்தச் செய்தி இருந்தது. முகவரியும் டெலிபோன் எண்ணும் கொடுக்கப்பட்டிருந்தன.

கௌசிகன்

டெலிபோனில் எண்களைச் சுழற்றினாள்.

''குட் மார்னிங்...'' என்றது ஓர் இனிமையான பெண் குரல் — ''இல்லற வாழ்க்கை ஆராய்ச்சிக் கழகம் ஹியர். என்ன வேண்டும் உங்களுக்கு.''

''டாக்டர் பதி, ப்ளீஸ்...!''

''ஸாரி. டாக்டர் ஊரில் இல்லை.. மே ஐ ஹெல்ப் யூ?''

அண்ணன் இருக்குதா?''

கேட்டுக் கொண்டே வந்த வேம்புலி குடிசையின் உள்ளே தலையை நீட்டிப் பார்த்தான்.

''வாயேன் உள்ளாற. நின்னுப்புட்டியே அப்படியே கல்லாச் சமைஞ்சு?'' வந்தவனின் பதற்றமும் பரபரப்பும் கபாலியையே ஒரு கணம் அதிர வைத்தன.

''என்னு அம்புட்டு அவசரம்?''

கபாலியின் இந்தக் கேள்விக்கு வேம்புலி விடையிறுத்தான் — ''எம் மவளுக்கு இன்னைக்கிப் பரிசம் போடலாமின்னு ஒரு தீர்மானம்.''

''இதுக்கா இத்தினிப் படபடப்பு? நல்ல காரியம்தானே? சாவகாசமா, உக்காந்து நல்லாப் பேசலாமே!''

வேம்புலி உட்கார்ந்தான்.

''பையன் வீட்டுக்காரங்க எப்ப வர்றாங்க? நம் வண்டியும் வேண்டியிருக்குமில்லே? நான் வந்திடறேன் கணக்கா. எங்கே வரணுமின்னு மட்டும் சொல்லிட்டுப் போ.''

''அதுக்கெல்லாம் அண்ணன் ஒத்தாசை இல்லாமெயா, பின்னே எல்லாம் நடக்கப் போவுது?''

பாங்க் வாசலில் ஒரு படுகொலை

நெய்வேலி திரிசங்கு

''ஆமாம், பையன் யாரு? எங்கே புடிச்சே? ஒண்ணுமே பேசாமே இருக்கியே.''

எங்கே ஆரம்பித்து, தொடர்வது என்றே வேம்புலிக்கு விளங்கவில்லை.

''ஆமாம், முத்தியாளுக்குச் சோடனையெல்லாம் பண்ணிட்டியா? நகை நட்டெல்லாம் என்னு வச்சிருக்கே?''

இப்போது வேம்புலி விஷயத்திற்கு வரலானான்:

''கையிலே ஒரு நூறு ரூவா தேவைப் படுது இந்தச் செலவுக்கே. பிற்பாடு அவங்களுக்குத் தாம்பூலத் தட்டிலே வச்சுத்தர ஒரு அம்பது வேறுமில்லே. ஏன் அண்ணே, எல்லாமா முந்நூறு ரூவாயாச்சும் ஆவாதா?''

கபாலி தலையைச் சொறிந்தான்.

''பாங்க்லே போட்டு வச்சிருக்கே, இல்லே? அது நானூறு ஆகியிருக்காது, வேம்புலி, இத்தினி நாள்லே?''

சட்டைப் பையில் மடித்து வைத்திருந்த நோட்டுப் புத்தகத்தை வேம்புலி எடுத்து நீட்டினான்.

பாங்க் சேமிப்புக் கணக்குப் புத்தகம் அது. கையில் வாங்கிக் கபாலி தன் பார்வையைக் கடைசியாகக் கணக்குப் பதிவு ஆன பக்கத்துக்குச் செலுத்தினான்.

''நான் சொன்னது கரெக்டா இருக்குது. முந்நூத்தி எண்பத்தாறு ரூவா சேர்ந்திருக்குது. உனக்கு அப்புறம் என்னு கவலே?''

''அதுதான் அண்ணனை இட்டுக்கிட்டுப் போவலாமின்னு வந்தேன்.''

''நல்லா வாரேன். கல்யாணச் சாப்பாடு இல்லே போடப் போவுது தம்பி?''

இருவருமாய்க் கிளம்பினார்கள்.

தயங்கிக் கொண்டே வேம்புலி தொடங்கினான் — ''நான் பணம் எடுக்கறதுக்கு அண்ணனைத் தொந்தரவு பண்ணமாட்டேன்.''

''இதுலே என்னுப்பா தொந்தரவு?''

''இல்லே, அண்ணே, அவுங்க பேசிக்கிட்டாங்க. பாங்க்லே போட்ட பணத்தை எடுக்க முடியாதாம்.''

''ஏனும்?'' என்று உணர்ச்சியுடன் குறுக்கிட்டான் கபாலி.

வேம்புலிக்குச் சொல்வதற்கே தயக்கம். ''பேப்பர்லே கூடப் போட்டிருக்காமில்லே? பாங்க் காரங்க வேலை நிறுத்தம் செஞ்சிக்கிட்டு இருக்காங்களாமில்லே?''

கபாலியின் கண்கள் ஒரு விநாடி கோணலாகக் குத்திட்டு நின்றன.

''அதெல்லாம் இல்லே? நம் ஐயர் கிட்டே ஒரு வார்த்தை சொன்னாலே, போதும். வேண்டிய பணம் எடுக்கலாம். அவரு தானே, இந்தச் சின்ன சேமிப்பெல்லாம் பார்க்கறவரு?''

''யாரு? அந்தக் கோடி சீட்லே கண்ணாடிக்கிப் பின்னாலே உக்காந்திட்டிருப்பாரே, அவரா? லச்சுமணன் பாங்களே?''

''அவரேதான். அவரு பேரு என்னுன்னு நெனைச்சே? லச்சுமணய்யர் அப்பிடின்னு வச்சுக்கலே முழுப்பேரே?''

''அவர் மீசையும் பேசற பேச்சும் பார்த்தா அப்பிடித் தெரியலியே அண்ணே?''

''எல்லாம் காலத்துக்கு ஏத்தபடி வேசத்தை மாத்திக்கிட வேண்டியதுதானே?''

''அந்த பாரதி, பாட்டெல்லாம் பாடினாரே, அவரும் ஐயருதான். வீர மீசை வச்சுக்கிட்டிருந்தாரு.''

இந்த 'விசய'மெல்லாம் நம் கபாலி அண்ணன் எப்படித் தெரிஞ்சுக்கிட்டாரு என்று வியப்புடன் வேம்புலி அவனையே கவனித்தான்.

பாங்க் வந்தாயிற்று. உள்ளே வேலை நடப்பதாகத் தெரியவில்லை. கபாலிக்கு வயிற்றில் புளியைக் கரைக்க ஆரம்பித்து விட்டது. பொது ஜனங்களுக்கு அறிவிப்பு ஏதோ எழுதிய பெரிய அட்டை முன்னால சாத்தி வைத்திருந்தது. ஊழியர்கள் தனித்தும், சேர்ந்தும் அடைஅடையாகக் குழுமியிருந்தனர். கிளை மேலாளர் அறையில் அந்த மனுஷர் அமர்ந்திருந்தது தெரிந்தது.

கபாலிக்குப் பாங்க் வாசற் காட்சி கவலையை ஊட்டியது. வேம்புலியின் பெண் முத்தியாளுவுக்கு நல்லபடியாகப் பரிசம் போட்டு முடிந்தாக வேண்டுமே! காசு இல்லாமல் காரியம் நடக்குமா?

கபாலி நேரே மேலதிகாரி அறையினுள் சென்றான். அவர் தலையில் மின்சார விசிறி வேலை செய்து கொண்டிருந்தது. எதிரே மேசையில் பேனா, பென்சில், காகிதங்கள், அட்டைகள், பேரேடுகள், மை மெத்தை யாவும் ஒழுங்காய் இருந்தன. ஒரு வணக்கம் சொல்லிவிட்டுக் கபாலி தொடங்கினான் —
''இவரு வேம்புலின்னு. இங்கே கணக்கு வச்சிருக்கவரு. மவனுக்குப் பரிசம் போட வேண்டிப் பணம் எடுக்க வந்திருக்காரு.''

''இன்னைக்கி எல்லாரும் வேலை நிறுத்தம் செய்யறாங்க. பணம் எடுக்க முடியாதுங்க.''

கபாலியின் கண்கள் சுற்றுமுற்றும் பார்த்தன.

அதோ, லட்சுமணய்யர் கண்ணில்பட்டுவிட்டார். அவரைப் போய்ப் பார்க்கலாம் என்று விருட்டென்று கிளம்பினான். வேம்புலி நிழல் போலத் தொடர்ந்தான்.

''கும்பிடறேனுங்க, கபாலி.''


அந்த ஊழியர் பதிலுக்குக் கும்பிட்டார். அவரைச் சுற்றி ஏழெட்டுப் பேர் இருந்தனர். வேலை கிடையாது. ஆபீஸ் செலவில் மின்சார விசிறிக் காற்றை அனுபவிக்க வந்தவர்கள் மாதிரி, காற்று வாங்கிக் கொண்டு நின்றனர்.

''இவரு நம்ம வேம்புலிங்க. பரிசம் போடறாரு. பணம் ஒரு முந்நூறு ரூவா தேவைப்படுது.''

''இன்னைக்கி ஸ்ட்ரைக் ஆச்சே?''

''அதான் இவரு என் கிட்டே வந்தாரு. நான்தான் ஐயாவேப் பார்க்கலாமின்னு இட்டாந்தேன்.''

''ஸ்ட்ரைக் நடக்குதே, கபாலி, இப்ப, ஒண்ணும் பண்ணறதுக்கு இல்லியே?''



இப்படி திருப்பூர் கிழக்கு தபால் நிலையத்தில் ஒரு அறிவிப்புப் பலகையைக் காணலாம்.

— திருப்பூர் 'அஜோ'

''இவருக்குப் பணம் வேணுங்களே?''

''நாங்க என்ன பண்ண முடியும் ஸ்ட்ரைக் டயத்திலே?''

கபாலிக்கு நெற்றி நரம்புகள் புடைத்து நின்றன.

''அதெல்லாம் ஒங்க விசயமுங்க. இவருக்கு இப்ப ரொக்கமா முந்நூறு ரூவா வேணும். இதப் பாருங்க. சேமிப்புக் கணக்குலே பணமோ இருக்குது.''

''அதெல்லாம் சரி. ஸ்டிரைக் முடியற மட்டும், பாங்க் வேலையே செய்யாதே.''

''ஐயா, வீணுத் தகராறு பண்ணறீங்க. எனக்குப் பணம் எப்பிடியும் இவர் கைக்கு வந்தாகணும். தெரியுதா?''

''அதெப்படி முடியும்?''

கூட இருந்த இரண்டொரு சக ஊழியர்கள் உதவிக்கு வரலானார்கள்.

''லச்மண், நம் பொசிஷனை அவருக்குப் புரியும்படியாச் சொல்லப்பா.''

''சும்மா இருங்க. உங்க கிட்டேயெல்லாம் எனக்குப் பேச்சில்லே. இந்த ஐயா சொல்லட்டும். பணம் கிடைக்குமா இல்லியான்னு ஒரே வார்த்தை.''



முறைப்பாகப் பேசினான் கபாலி. வேம்புலியே பதறிப்போய் நின்றான்.

பாங்க் வாசலுக்கு வந்த, மற்றைய 'டிபாசிட்'தாரர்கள் சற்றே தெம்பு வந்து, நின்று கவனிக்கலாயினர். படித்தவர்களுடைய பிரச்னைகளை எப்போதுமே படிக்காதவர்கள் தீர்த்து வைப்பதுதானே உலக இயல்?

''உங்களுக்குப் பஞ்சப் படியோ, ரொக்கப் படியோ பத்தலேன்னா, நல்லா ஸ்ட்ரைக் பண்ணுங்க. நான் வேணாமின்னு சொல்லலே.''

''அதுதாங்க செய்யறோம்.'' இது ஒரு ஊழியருடைய பேச்சு.

''ஸ்ட்ரைக்கு நடக்கறப்ப பணம் வாங்கிக்கிட மாட்டோமின்னு சொல்லுங்க. ஆனா, எங்க பணத்தை உள்ளாற பூட்டி வச்சிக்கிட்டு, ஸ்ட்ரைக்குப் பண்ணறோமின்னு சொன்னா, நான் கேட்டுக்கிட்டிருக்க மாட்டேன்.''

ஊழியர்கள் வாய் திறவாது நின்றனர்.

''வேலை நிறுத்தம் நடக்கறப்ப, பணம் போட முடியாதின்னு சொன்னால், நியாயம் அது. பணம் எடுக்க முடியாதுங்கற பேச்சை விட்டுப்புடுங்க.''

ஊழியர்களுக்கு—அவர்களுடைய தொழிற் சங்க இயக்கத்திற்கு — கபாலியின் பேச்சு ஒரு சவாலா? அல்லது, உருப்படியான ஓர் ஆலோசனையா?

லட்சுமணய்யரின் சட்டையைப் பற்றினான் கபாலி.

''ஐயரே, வெறுமே, சும்மா இருந்த எங்கள் மத்திலே கூட்டம் போட்டு, ரிக்சாக் காரங்களுக்கின்னு தனியே சின்ன சேமிப்புத் திட்டமின்னு பேர் வச்சு, நீ கமிசன் அடிக்க றதுக்காவ இதெல்லாம் பண்ணினியா? கேக்கறேன்? சொல்லிடு. எங்களோட ஒப் பத்துலே வந்து மீட்டிங் போட்டு, டெபாசிட் கூடுதலாச் சேத்து நீ பிரமோசன் வாங்கலாமின்னு நெனச்சிச் செஞ்சியா அந்த வேலையெல்லாம்?''

ஊழியரின் சட்டை சிறிது நனையலாயிற்று பயத்திலேயே. அதற்குள் பாங்க் சேவகர் ஒருவர் பேசலானார் — ''நான்கு நாள் முன்னாலே புடிச்சே பேப்பர்லே விளம்பரம் கொடுத்திருக்கோமே, ஐயா? பணம் வேணுமின்னா, முன்னாலேயே வந்து 'வித்ட்ராரா' பண்ணியிருக்கலாமே? ஏன் இப்ப வந்து கலாட்டா பண்றே?''

''சும்மா இருய்யா. உன் விளம்பரத்தை இவுரு பார்க்கலே, வச்சிக்க. அப்படியே, எல்லாரும் மூச்சோடா வந்து உன் மூதேவி பாங்க் வாசல்லே காசைத் திருப்பிக் கொடுரான்னு கத்திக் கூப்பாடு போட்டிருந்தா, உன் பாங்க் மறுநாளே 'ஹனுமான் பாங்க், கொயிலோன் பாங்க் போன வழிலே போயிருக்கும். இல்லியா, சொல்லு.''

ஊழியர்கள் வாய் திறக்கவில்லை.

கபாலி குரலைக் குறைத்துத் தெளிவாகப் பேசினான் — ''நான் ரிக்சாக்காரங்க தலைவன். என் பேச்சை நம்பித்தான் இவுரு காசைப் போட்டாரு உங்க பாங்க்லே. இவுரு மவளுக்கு இப்பப் பரிசம் போடற நல்ல காரியம் தடைப்படக் கூடாதின்னு நான் வந்திருக்கேன். மூந்நூறு ரூவா கைக்குவந்தாலொழிய ஒரு பயல் இங்கே தப்ப முடியாது.''

லட்சுமணய்யர் உடல் நடுங்கியது.


''ஐயரே, உங்களோட எனக்கு ஒரு சங்காத்தமும் இல்லே. நீங்க வருத்தப்படாதீங்க. ஆனா, இது ஒரு பொதுஜனத்தோட பிரச்னை. அவங்க காசெ, நீங்க வச்சுக்கிட்டுப் போராடறேங்கற கதையெ விட்டுடுங்க. அதுக்காவ, இப்ப நான் துணிஞ்சிட்டேன். நாளைப் பேப்பர்லே போடணும். பாங்க் வாசல்லே படுகொலை, ரிக்சாக்காரன் கொலைகாரன் ஆனான் அப்பிடின்னு. வேறே ஒண்ணுமில்லே. நான் ஜெயிலுக்குப் போகத் துணிஞ்சிட்டேன்.'' கபாலியின் கரங்கள் லட்சுமணய்யரின் கழுத்தில் அழுத்தின. பிடி இறுகிற்று. என்ன நடந்தது என்பதெல்லாம், நாளைய பத்திரிகையைப் பார்த்தால் தெரியலாம்!



கிரிக்கெட் அறுவை!

கிரிக்கெட் தெரியாத என் நண்பன் சென்னை டெஸ்டின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் போர்டை பேப்பரில் பார்த்துவிட்டு இவ்வாறு கூறினான். ''விஸ்வநாத்துக்கு அடுத்தபடியாக Extras என்பவர்தான் அதிக ரன் அடித்துள்ளார்!''

— எம். எஸ். ஜெயராமன்



''இந்த பேட்ஸ் மேன் 'பீச்சி' வாங்கிறாராமே!''

''—பார்த்தா தெரியலே ''Pitch''-ஐதான் வாங்கு வாங்குன்னு வாங்கறார்! பந்து அகப்பட மாட்டேங்குது.'' — வெ. சீதாராமன்



ஒருவர்: சார், சந்திரசேகரை இன்ஜூரட் பண்ணிட்டான்!

நண்பர்: சரண்சிங்கையே சேர்த்துண்டாச்சு. அடுத்தாற்போல் சந்திரசேகரையும் சேர்த்துக் கிறதில் என்ன அதிசயம்?



ஒருவர்: சார் வெங்கட்ராகவன் தான் நைட் வாட்ச்மேனா?

நண்பர்: இல்லையே ஏதோ கம்பெனியில் ஆபீசர்தான் சார்! — அனந்தராமன்

சாதாரணமாகவே இப்போதெல்லாம் திரைப் படங்களில் புடவைத் தலைப்புத் தோளில் நிற்பதில்லை; போதாக் குறைக்குப் புடவை கட்டிக் கொள்ளும் போது அதில் தேள் வேறு இருந்து விட்டால் கேட்க வேண்டுமா? உள்ளாடையுடன் நிற்பதைத் தவிர வேறு வழியில்லையே. இதைப் போய்ப் பெரிதாகக் 'கவர்ச்சிக் காட்சி' என்று குற்றம் சுமத்தலாமா? தேள் சம்பவம் கதைக்கு அவசியந்தானு என்று குதர்க்கம் தான் பேசலாமா? பணத்தைக் கொட்டிப் படமெடுப்பவர்களுக்கல்லவா தெரியும் அக்காட்சியின் அவசியம்?

அது போகட்டும், கதைக்கு வருவோம் — பெண்களைக் கடத்தும் கயவனிடமிருந்து தப்பி மூச்சிரைக்க ஓடிவரும் லக்ஷ்மிக்கு (சுமித்ரா) வரப்பிரசாதமாக ஒரு கடிதம் கிடைக்கிறது. அதில் குறிப்பிட்டுள்ள ஜெயலக்ஷ்மி என்ற பெண்ணாக துரைராஜ் (மேஜர்) என்ற செல்வந்தரின் வீட்டுக்குப் போகிறாள். அவளாகப் போகவில்லை. ஓர் விபத்தில் சிக்க, அவள் போக வேண்டிய அந்த வீட்டுப் பிள்ளைகளாலேயே அதிலிருந்து காப்பாற்றப்பட்டு அங்கு போகிறாள். உண்மையைச் சொல்ல நினைக்கும் போது சந்தர்ப்பச் சூழல் அதைத் தடுத்து லக்ஷ்மியை ஜெயலக்ஷ்மியாகவே நடிக்க வைத்து விடுகிறது. துரைராஜின் இரு பிள்ளைகளான ராஜா (சிவகுமார்) ராமு (ஸ்ரீகாந்த்) இருவருமே அவளைக் காதலிக்கிறார்கள். ஆனால் அதிர்ஷ்டச் சீட்டு ராஜாவுக்கே விழுகிறது. இதற்கிடையில் உண்மை வெளியாகிறது. தான் 'இம்போஸ்டர்' அல்ல என்பதை நிரூபிக்க முடியாமல் கண்ணீருடன் வெளியேறுகிறாள் லக்ஷ்மி — எப்படியும் ஆதாரத்துடன் இவ்வீட்டில் நுழைவேன் என்ற சபதத்துடன். ஆதாரத்துடன் வரும்போது அதைச் சொல்ல முடியாத சூழல் உருவாகி இருக்கிறது துரைராஜ் வீட்டில். திரும்பவும் கண்ணீருடனும், காதலன் ராஜாவின் நினைவுடனும் வெளியேறுகிறாள். கடத்தல் காரக் கயவர்களின் வேலைத்தனம், சண்டை, சஸ்பென்ஸ் ஒருவிதமாகக் கிளைமாக்ஸில் படம் முடிகிறது. வலுவான கதை.

ராஜாவும், ராமுவும் போட்டியிட்டபடி லக்ஷ்மியைக் காதலிப்பதும் அதை மோப்பம் பிடித்து துரைராஜ் அடிக்கடி தன் மூக்கை நீட்டுவதும் கிளுகிளுப்பூட்டும் காட்சிகள். ஸ்ரீகாந்தும், சிவகுமாரும் ரசிக்கும்படி நடித்திருக்கிறார்கள். படத்தில் வரும் கதாநாயகர்களெல்லாம் கராத்தேயும் ஜூடோவும் குங்ஃபூவும் தெரிந்தவர்களாகவே இருக்க வேண்டும் என்று ஒரு நியதியோடு படமெடுக்கிறார்களே அதைத்தான் ஜீரணிக்க முடியவில்லை.

பால் காரக் கண்ணன் (தங்கவேலு) தன் மருமகப்பிள்ளையை (கருணாநிதி) யும் மகள் பாலம்மா (சச்சு) வையும் மாட்டுக் கொட்டிலில் முதலிரவுக்கு விரட்டி விட்டுத் தான் வீட்டினுள் இரண்டாந்தாரத்துடன் முதலிரவுக் கட்டிலில் நடத்தும் காமெடிக்காகக் கதையின் தலைப்பை இப்படிக் கொடுத்துக் கெடுத்திருக்க வேண்டாம்.

— கௌசிகன்.

உன்னுடைய எதிரிகளை
மன்னித்துவிடு; —
வேறு வழி
இல்லாவிட்டால்!
— ப்ராங்க்ளின் ஜோன்ஸ்
— பூண்டி

✱ பட விமரிசனம்



குற்றம் சாட்டுகிறார் டைரக்டர் சுகுமார்!

சர்வதேசத் திரைப்பட விழாக்களில் கலந்து கொள்ளும் என்னைப் போன்றவர்கள் தங்கள் படங்களை உலக மார்க்கெட்டில் விற்பனை செய்ய முடியுமா என்ற எண்ணத்துடன் தான் முக்கியமாகப் போகிறோம். சமீபத்தில் டெல்லியில் நடந்த விழாவுக்கும் அப்படித்தான் நான் ஒரு பிரதிநிதியாகப் போயிருந்தேன். இம்பெக் (Indian Motion Pictures Export Council) மூலம் ஒரு கோடி ரூபாய்க்கும் மற்ற ஏஜெண்டுகள் மூலம் ஒரு கோடி ரூபாய்க்குமாக இரண்டு கோடிக்கு இந்தியப் படங்கள் விற்பனையாகி இருப்பதாக இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதில் தென்னிந்தியப் படங்களின் விற்பனை கிட்டத்தட்ட பத்து சதவீதம்தான். நமது படங்கள் தரத்தில் குறைந்தவை அல்ல. பின் ஏன் இந்த நிலைமை?

சில கசப்பான அனுபவங்களைப் பெற்றவன் என்ற முறையிலும், விழா முடிந்த பிறகும் நான்கு நாட்கள் டெல்லியில் தங்கியிருந்து என்னதான் நடக்கிறது என்பதைக் கொஞ்சம் 'உள்ளே புகுந்து' பார்த்துவிட்டு வந்தவன் என்ற முறையிலும் சில உண்மைகளை இங்கே அப்பட்டமாகச் சொல்லித்தான் ஆகவேண்டும்.

'இம்பெக்' அமைப்பைச் சேர்ந்தவர்களில் சிலர் நடுநிலையில் இருந்து வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு இந்திய மொழிப் படங்களை அறிமுகப் படுத்துவதில்லை. ஹிந்திப் படங்களை அவர்கள் பெருமளவுக்குச் சிபாரிசு செய்கிறார்கள் என்று நினைக்கிறேன். இது விரும்பத்தகாத ஒரு நிலை. யார் யார் எப்படியெல்லாம் நடந்து கொள்கிறார்கள் என்ற விவரமெல்லாம் கூட எனக்குத் தெரியும். ஆனாலும் பெயர்களை மட்டும் விட்டுவிடுகிறேன்.



அடுத்து இந்த ஏஜெண்டுகள். இவர்களின் ஆதிக்கம்தான் அங்கே கொடிகட்டிப் பறக்கிறது. எந்தவிதமான அதிகார பூர்வ அங்கீகாரமும் பெறாதவர்கள் இவர்கள். படங்களை விற்பனை செய்யச் சரியான அமைப்பு ஏதும் ஒழுங்காக இயங்காததால் இவர்கள் ரொம்பவும் ஆக்டிவ்வாக இருக்கிறார்கள். தாங்கள் யாருக்கு ஏஜெண்டோ அவர்கள் தயாரித்த படங்களை மட்டும் போட்டுக் காட்டி, என்னென்ன விதங்களில் வெளிநாட்டவர்களைக் கவர முடியுமோ அனைத்தையும் செய்கிறார்கள். தனியாக அவர்களை அழைத்துப் போய் ஆடம்பர விருந்து அளிக்கிறார்கள். மதுவும் மங்கையும் தாராளமாகப் பரிமாறப்படுகின்றன. விருந்தினர்களின் 'மகிழ்ச்சி'யில் வியாபாரம் முடிக்கப்படுகிறது. ஏதோ குற்றம் சாட்ட வேண்டும் என்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. எனக்கே இந்த அனுபவம் ஏற்பட்டது.

மிகவும் கஷ்டப்பட்டு ருமானிய நாட்டுப் பிரதிநிதி ஒருவரிடம் 'அப்பாயிண்ட்மெண்ட்' குறித்துக் கொண்டு என் படத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தேன். ஓர் ஏஜெண்ட் அங்கே வந்து அவரை 'ரொம்ப அவசரம்' என்று சொல்லி என்னிடம் 'எக்ஸ்க்யூஸ் மீ' என்று கேட்டுக்கொண்டு வெளியே அழைத்துப் போனவன் அரை மணி கழித்துத் திரும்பி வந்து, 'உங்கள் படம் விற்பனையாக வேண்டும். அவ்வளவுதானே. வீணாக ஏன் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள்? உங்கள் ஏஜெண்டாக இருந்து நான் முடித்துத் தருகிறேன். 25 சதவீதம் கமிஷன். தரத் தயாரா? ஆனால் அதற்கும், முன்பாக அந்தப் பிரதிநிதியைக் கவனித்துக் கொள்ளச் சில 'முக்கிய செலவு'களையும் நீங்கள் ஏற்கவேண்டும்' என்றான். நான் மறுத்துவிட்டேன்.

விற்பனையான தென்னிந்தியப் படங்களில் பெரும்பாலானவை கன்னடப் படங்கள். காரணம் அவர்களிடமிருந்த ஒற்றுமைதான். விழா முடியும் வரை தனியாக ஒரு ஹாலையும் ஒரு புரொஜக்டரையும் வாடகைக்குப் பேசி வைத்திருந்து, வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு நேரம் கிடைக்கும்போது பிரத்தியேகமாகத் தங்கள் படங்களைப் போட்டுக் காட்டி ஒன்றாகச் செயல்பட்டனர். தமிழ், தெலுங்கு மலையாளத்தில் இந்த ஒற்றுமை இல்லை என்பதையும் சொல்லத்தான் வேண்டும்.


முதலில் இந்த ஏஜெண்டுப் பட்டாளத்தை ஒழிக்க வேண்டும். எல்லா மொழிகளுக்கும் பிரதிநிதித்துவம் இருக்கும்படி ஒரு கமிட்டியோ அல்லது கவுன்சிலோ அமைக்கப்பட்டு அதன்மூலம்தான் வியாபார ஒப்பந்தங்கள் கையெழுத்தாக வேண்டும். தங்களது படங்களைச் சம அளவில் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்குப் போட்டுக் காட்டும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

இதையெல்லாம் செய்யாமல் அரசாங்கம் ஏனோ தானோவென்று இருக்குமேயானால் இதைப்போல் இன்னும் நூறு சர்வதேசத் திரைப்பட விழாக்கள் நம் நாட்டில் நடைபெற்றாலும் நமக்கு விமோசனம் இல்லை.

(திரு. சுகுமார், தற்போது கேரளாவில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் 'ப்ரஷ்டு' (Brashtu) என்ற மலையாளப் படத்தை டைரக்ட் செய்திருப்பவர்)

பேட்டி: கஸ்தூரி ராதாகிருஷ்ணன்

Printed by V. Murali and published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Guindy, Madras-600032. Editor: K. Rajendran



அமிர்தாஞ்சன்
தலைவலி, ஜலதோஷம், உடல்வலி
இவை அனைத்தையும் போக்க இல்லந்தோறும்
இருக்கவேண்டிய நல்ல மருந்து
தலைவலி, ஜலதோஷம், உடல்வலி
ஆகியவற்றுக்கு சிறிதளவு அமிர்தாஞ்சன்
தடவுங்கள். அதிலுள்ள அருமையான
பத்து மருந்துப் பொருள்களின் கலவை,
வியக்கத்தக்க் வகையில் மிக விரைவில்
நிவாரணம் அளிக்கும். சிக்கனமான ஜாடி,
சிறிய பாட்டில் மற்றும் கைக்கு
அடக்கமான சிறிய டப்பா —
மூன்று அளவுகளில்
கிடைக்கிறது அமிர்தாஞ்சன்.
அமிர்தாஞ்சன் —
80 ஆண்டுகளுக்கு
மேலாக குடும்பங்களில்
பயன்பட்டு வரும்
நம்பகமான மருந்து.
அமிர்தாஞ்சன் லிமிடெட்
AMRUTANJAN
Pain Balm
Amrutanjan Ltd.
AM 1912

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேசியக் காசு